ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன்பணம் — ரூ. 3—0
6-மாத சந்தா ,, — ,, 1-12
வெளி நாட்டிற்கு ,, — ,, 5—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.

வியாபாரிகள விளம்பரம் அங். 1க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தியரு மாசி மீ 2உ (14—2—1932) | மலர் 42

பலமுள்ளவீரபுருடனுக,

குமரனுக, வாலிபத்தன்மையடைய, ஆண் பெண் மன மொத்துவாழ, இல்லற, இன்பம் அனுபவிக்க, பத்திர பாக்கியம் பேற வழியில்லையென வருந்துபவர்கள்

தங்க பஸ்பம்.

சாப்பிடுங்கள்.

அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும் இல்வாழ்வில அதியற்புத சுகந்தரும்.

48-நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24-நாளுக்கு ரூ. 10.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஓர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி, S. I.

மாதர்களுக்கு

இது தான் வேண்டியது

கெர்ப்ப எண்ணெய்



மாதாந்தர காலத்தில் உண்டாகும் வலி ற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கொர்ப்பாசயம், சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுகல்களும் நீங்கி கெர்ப்பம் உண்டாகும். மிக்க அநுபவமானது.

புட்டி 1-க்கு ரூ. 2.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஓர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி, S. I.

டாக்டர் சிங்காரம் அவர்களின்

மிகவும் குணமுள்ள மருந்துகள்

உலகப் பிரசித்திபெற்ற

மஹா சந்தனாதித் தைலம்

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண் பார்வை குறைவா யிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார் வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு, கண்ணில் நீர்வடிதல், கண் பூ, பீளை சாருதல், மேக நீர், வெள்ளெழுத்து, நித்திரையின் மை, ஒருத்தலை நோய், பீனிசம், காதிரைச்சல் காதுமந்தம், மண்டைக் குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டைச் சூடு, திரேக காங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

24 அவுன்ஸ் டின் ரூ. 4 12 அவுன்ஸ் டின் ரூ. 2—2—0

சாலாமிசிரி லேகியம்

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கை கால் அசதி, சோம்பல், இடுப்புவலி, சரம்புத் தளர்ச்சி, சொப் பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் எற்படும் துரித ஸ்கலிதமும், முத லிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த சரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விர்த்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும் சுற சுறுப்பையும் உண்டாக்கும். சம்போக இன்பத்தை முற்றிலும் அநுப விக்கச் செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

மகா வில்வாதி லேகியம்.

அஜீரணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் கரகரப்பு, குல எரிவு, வாயில் ஜலம் ஊரல், நெஞ்செரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்று வலி, அஜீரணத்தால் எற்படும் வயிற்றுப்போக்குகள், காலரோகிகம், மயக்கம். கை கால் குடைச்சல், முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்த மான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பரிநாமத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தா லும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச் சிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்வித மலச் சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்

பலவித பழச் சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது, பால் விருத்தாப் பியர்யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ 2

எல்லா மருந்துகளுக்கும் பாகிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் காட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும்

விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இலவாய் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ,

தெப்பக்குளம்போஸ்ட், திருச்சிராப்பள்ளி

ஆனந்தரின்

இந்திய பற்பசை (டூத்பேஸ்ட்)

பற்பொடிப்பளிங்கு போலாக்கும். எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.



தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி,
சென்னை.

கவலை வேண்டாம்!

தற்காலத்தில் ஒவ்வொரு வரும் தாராளமாக சம்பாதிக்கக்கூடிய வழியை தெரிந்து கொள்ளவேண்டாமா? அப்படியானால் ஒரு ரிப்ளேகார்டு எழுதுங்கள். பதில் தெரிந்து கொள்ளலாம்.

S. நாராயணசாமி
வடக்குவீதி திருவாரூர் S. I.

விற்பனைக்குத் தயார்.

1. 45. B. H. P. டான்ஜின் ஆயில் இன்ஜின்.
2. 12. N. H. P. பிரிட்டானியா மார்ஷல் பாயிலர் பிரஷர் 100 lb.
3. No 1. Hullers; Sheller; Pumps, Scale; pulleys-Shafting etc.
4. Steam Condensing Heater.

Apply to:—
MENAL & Co.,
East & West General Commercial House,
Vembanoor, Kodavasal P.O
Kumbakonam, S.I.Ry.

ஜோதி முத்து.

டாக்டர், B. A. எதிராஜுலுவினுல், தயாரித்து 31 ஆண்டுகளாக அனுபவித்து கைகண்ட கோஷாயி மேக எண்ணை (கோஷாயி ஒருவரால் அனுக்கிரகிக்கப் பெற்றது.)

வெட்ட வாய்வு, (அஷ்ட்ட) எட்டு விதங்களாக கர்ப்பவிந்த ஸ்தானங்களில் தங்கி, சந்ததியார்களுக்கு ஜெனித்த தடிப்பு, சிட்டைகள் முதலிய மேகம் 21சும் இரண குஷ்டம் 18ம் 3ரோம் நம் கோஷாயி மேக எண்ணை சாப்பிட்ட 7-வது நாளே எல்லா உபத்திரவங்களிலிருந்து விலகி, 15-வது நாள் பாலிய தேச சடன் விருத்தரும் பாலிய உணர்ச்சி பெற்று வருவது பிரத்தியட்சம்.

3. ரோம் உபயோகிக்கும் கோஷாயி மேக எண்ணை கொண்ட சீசா 1-க்கு ரூ. 7—0—0 பத்திய விபரம், மருந்து சடன், பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் வாசிகள் ஆர்டருடன் ரூ. 8—12—0 அனுப்பி வைக்கவும்.

கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

"சன்மார்க்கன்"

தமிழ்மாதப்பத்திரிகை.

பல அரிய கட்டுரைகளுடன் கைவல்யம் கட்டுரையும் தொடர்ச்சியாக வருகின்றது.

ஆண்டுசந்தா.
உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—4—0.

ஆசிரியர்:-
சுவாமி சிவதேசம்,
"சன்மார்க்கன்" பழனி.

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0

ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்

விளாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது

உள்நாடு சந்தா $. 3—0—0
இந்தியாவுக்கு ரூ. 5—0—0

ஆசிரியர்: கோ. சாரங்கபாணி

விலாசம்:—
மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

"போர் முரசு"

வாரப் பதிப்பு.

ஆசிரியர், ச. ம. சி. பரமசிவம்.

தனிப்பிரதி காலணு.

வருட சந்தா. ரூ. 1—8—0

"போர் முரசு"
19, பெரிய செட்டி தெரு,
உறையூர் - திருச்சி.

'குமரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0

மாதப்பதிப்பு.

உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0

ஆசிரியர்: சோ. முருகப்பா.

விலாசம்:—
மானேஜர், "குமரன்" காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ம்வரு வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—5—0

மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

புதுவைமுரசு

ஆசிரியர்:-
அ. பொன்னம்
பலனர்,
அவர்கள்.

24 பக்கங்களோடு அழகிய முறையில் திங்கட்கிழமைதோறும் வெளிவரும் சுயமரியாதைச்சந்தமிழ்வாரப் பத்திரிகை. வருடசந்தா ரூ. 3. வெளிநாடு ரூ. 4.
மாதிரிபிரதி இனம்!

மானேஜர்,
"புதுவைமுரசு"
புதுச்சேரி (F. இந்தியா)

சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31 ந் தேதி "குடி அரசி"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விரும்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினுல் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும்.

மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

தக்ளியில் நூல் நூற்று சுயராஜ்யம் பெற்ற தேசங்கள் எத்தனை?

(The Work before us)

நாம் செய்யவேண்டிய வேலை என்ன?

ஜாதி, மத, நடுநிலைமை திட்டத்தின் விஷயம்.

(தோழர். ம. சிங்காரவேலு B. A., B. L.)

(V)

முன் எழுதிய நான்கு வியாசங்களில் நமது இந்திய நாட்டின் சமூக வாழ்க்கையின் நிலைமையை பற்றியும், அதனை சீர்திருத்தவேண்டி, பற்பல கட்சிகள் செய்துவரும் உபாயங்களையும் விசாரித்துவந்தோம். முதலில் ஆங்கில அரசு அதன் தற்கால திட்டத்தின்படி, பாமர ஜனங்களுடைய குறைகளை நீக்க சக்தியுள்ளதென்பதை சுருக்கமாகக்காட்டினோம். அதன் பிறகு தேசிய காங்கிரஸ் என்று வழங்கும் ஸ்தாபனமும், பிரிட்டிஷார் செய்வதற்கு மேல் செய்ய முடியாதென்பதையும் எடுத்துரைத்தோம். பற்ற அரசியல் கட்சிகளின் ஒன்றுகிய மிதவாத கட்சியாரும், மேலிரு கட்சிகள் செய்ய முடியாததை செய்யுமென்ற எண்ணம் வீணே என்று காட்டினோம். இனிமதது தமிழ்நாட்டில் சென்ற 5 வருஷங்களாக சமூக சீர்திருத்தத்தை முயற்சிக்குமாறு கிளம்பிய சுயமரியாதை கட்சியாரின் நோக்கத்தை சற்று பரிசீலனை செய்து, நமது நாட்டின் தற்கால நிலைமையை மாற்றி உயர்ந்த நிலைமைக்கு கொண்டுவரும் மார்க்கத்தை குறிப்பிடுவோம்.

முதலாவதாக நமது நாட்டை ஆண்டுவரும் அரசு, கோடானகோடி நமது பாமரமக்களை பதிப்பிணி, அறியாமையினின்று நீக்க முடியாத காரணம் என்னவெனில், பிரிட்டிஷ் அரசியல் கட்டிப்பட்டிருக்கும் திட்டம் அதற்கு இடம் கொடாமையே. இந்த திட்டத்தை முதலாளி திட்டமென்றும், பூர்ஷ்வா (Bourgeois) திட்டமென்றும் அழைப்பர். இந்த திட்டத்தின் முக்கிய அம்சம் என்னவென்றால் தனிவுடைமையே. இந்தத்தனி வுடைமையை அடிப்படையாக வைத்துள்ள திட்டத்திற்குட்பட்டவர்கள் வாழ்வெல்லாம் அநித்தியமாகவே இருந்து கொண்டிருக்கும். வாழ்வுக்கு அடிப்படையாயுள்ளனவும், அத்தியாவசிய மானதுமாகிய நிலம், நீர், வீடு, வாசல், தொழிற்சாலை முதலிய செல்வங்கள் (wealth) நாட்டிலுள்ளவர்களுக்கெல்லாம் பொதுவாக உபயோகப்படாமல் இருக்கும்வரை, உலகம் பிணி, மூப்பு, சாக்காடு, தரித்திரம், வறுமை, இவையால் வருந்திக்கொண்டேவரும். ஆதலின் பிரிடிஷார் என்ன நல்லெண்ணத்தோடு அரசுபுரிந்தாலும் அவர்கள் ஆதரிக்கும் தனிவுடைமை திட்டம் மாறி, பொதுவுடைமை திட்டமாகின்றவரையில், நமது நாட்டில் வாழும் 30, 35 கோடி மக்களுக்கு உண்மையான சுதந்திரமும், சமத்துவமும், சகோதரத்துவமும் வாப்போவதில்லை. அரசர்கள் தேசத்தில் அந்த பழைய திட்டத்தை மாற்றிவிலொழிய நமது நாடும், சென்ற நூற்றாண்டுகளாக இருந்த மதிரியே இருந்துவருமென்பதற்கு ஐயமில்லை. அப்படியும் இக்கும் ஏகதேச சீர்திருத்தம் ஏற்படலாம். ஆனால் நமது நாட்டில் வேரூன்றி (Deep Rooted) கிடக்கும் சமூக ஊழல்களும் பொருளாதார ஊழல்களும் மாறவே மாறு. பொருளாதார சமத்துவம் ஏற்படாமல் எந்த ராஜ்யத்திலும் பாமர மக்களுக்கு சமஉரிமை கிட்டுமென்பது வீண் கனவே.

இரண்டாவது, பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு பதிலாக சுயராஜ்யத்தை நமது நாட்டில் காட்ட வேண்டுமென்ற காங்கிரஸ் கூட்டத்தாரும், நமது தேசத்தை உண்மையில் விடுதலைப்பார்கள் என்பதும் வீண்எண்ணமே. மதத்தை ஆதரித்துக்கொண்டு, மதசார்பான இயற்கையையும் மூடநம்பிக்கையையும் எவ்விதம் விலக்க முடியும்? சுயராஜ்ய மடைந்துள்ள பல அரசுகளில் இன்றைக்கும் மதச்சண்டைகள் நிகழ்வதுகிறதென்றால், மதக்கற்பனைகளில் மூழ்கிக்கிடக்கும் நமது நாடு அறியாமையிலிருந்து (Ignorance) எப்படி மீளும்? படித்தோரும் படியாத வரும் மத நடுநிலைமைத்திட்டத்தால் ஆதரிக்கப்பட்டால், எதிர்கால காலத்தில், பாமர மக்கள் மூடநம்பிக்கையிலிருந்து விடுபடுவது? பாமர மக்கள் மூடநம்பிக்கையிலிருந்து விடுபட்டு தங்கள் பகுத்தறிவை வாழ்வு முழுமையும் உபயோகிக்கும வரை, அவர்களுக்கு சுதந்திரம் வந்துமென்ன, வாதிருந்தாலுமென்ன? மூடநம்பிக்கையால் பாமர மக்கள் மூடப்பட்டிருக்கும் வரை, அரசியல் தந்திர வாதிகள் செய்யும் சூட்சிகளுக்கு ஆளாவது நிண்ணம். பொது மக்கள், இன்றைக்குமிருக்கும் நிலைமையில்தான், சுயராஜ்யத்திலும் இருக்கப்போகின்றார்கள். ஆதலின் மத நடுநிலைமையை ஆதரிக்கும் சுயராஜ்யம் வந்தாலென்ன? வராவிட்டாலென்ன? கான்கிரஸ்காரர்களால் இனி வரக்கோரும் சுயராஜ்ய திட்டத்தில் இன்னொரு ஆலகால விஷம் அடங்கியுள்ளது. அதாவது, இந்தியருக்குறிய சாதி சமய கோட்பாடுகளும், மூடப்பழக்க வழக்கங்களும், சுயராஜ்யத்தில் ஆதரிக்கப்படுமாம்! பார பட்சமின்றி கூறவேண்டுமல், ஆங்கில அரசில், சட்டி, செட்டிக்குத்தியாடல் முதலிய கெடுதியான பழக்கங்களை தடுத்து விடப்பட்டன. ஆனால், அந்த ராஜ்யத்திற்கு பதிலாக சுயராஜ்யமிருந்திருக்குமேயானால், இந்த ஜாதி மத பல கர்பழக்கங்கள் தூக்கப்பட்டிருக்குமா என்பது சந்தேகந்தான். (Religious Neutrality) அதாவது, ஜாதி மத நடுநிலைமையை தந்திரமாக சுயராஜ்ய திட்டத்தில், காங்கிரஸ் முதலாளிகள் முக்கிய திட்டமாக வைத்துக்கொண்டார்கள். இது படுமோசமென அறிக. ஜாதி சமய பழக்க வழக்கங்களில் நடுநிலைமை, அதாவது ராஜாங்கத்தார் நமது துர்ப்பழக்க வழக்கங்களில், மூட நம்பிக்கைகளில் பிரவேசிக்க மாட்டோமென்றால், நமது பாமர மக்களின் கதி அதோகதியே. எதற்காலத்தில் மூடநம்பிக்கைகளிலிருந்தும், [Superstitions] புரோகித புரட்டுகளிலிருந்தும் (Priest craft) அறியாமையிலிருந்தும் (Ignorance) விடுபடுவது? இவைகளிலிருந்து விடுபடாமையைக் கருதியே, இவ்வளவு கோயில்களையும், உற்சவங்களையும், கல்ல நாள் கெட்ட நாட்களையும் நல்ல சகுனம், கெட்ட சகுனங்களையும், அம்மன் பிடாரி, பில்லி, சூன்யாதிகளையும், முனிஸ்வரன்பிடித்தான், பேய் பிடித்ததென்றும், சனியின் சுத்தென்றும், கலிவிதியென்றும் தந்திர உபாயங்களை கற்பித்து, பாமர மக்கள் இவைகளிலேயேபகுத்தறிவின்றி உழன்று கிடப்பதற்காக, இந்த Religious Neutrality என்ற ஜாதி மத நடுநிலைமையை கற்பித்துக்கொண்டிருக்கின்றார்கள். இந்த ஜாதி மத நடுநிலைமையின்படி, பலி முதலிய கொடிய காரியங்களை செய்யப்படாதென்று சட்டஞ் செய்ய முடியாது இந்த திட்டத்தின்படி, பெரியபாளையத்தம்மனை நிர்வாணமாகவாடுதல், அல்லிதீபம்களை கட்டிக்கொண்டாடுவதை தாழப்படாதென்றசட்டம் புகுப்பிக்கலாகாது. குழந்தைகளுக்கு கடவுள், தெய்வம், பேய், பிசாசு, முனீஸ்வரன், காட்டேரி இவைகள் எல்லாம் பொய்யான செய்கள் என்று கற்றுக்கொடுக்க முடியாது. மோகரம் பண்டிகைகளில் அகோர வேஷங்கள் போட்டுக்கொண்டு மானுஷீகத்தை பரிகாசம் செய்ய தகுந்த வேஷங்களைப் போடக்கூடாதெனத் தடுக்கவும்கூடாது. இன்னும் அசுர கர்பழக்கங்களை செய்யப்படாதெனவும் சொல்லக்கூடாது. நேற்று நிறைவேறிய சாரதாசட்டத்தைமாற்றிவிடமதவைராக்கியம் பிடித்தோர் செய்துவரும் கிளர்ச்சி, சுயராஜ்யமாய் இருந்தால் உடனே அந்த திட்டம் மாற்றப்படுமென்பதற்குத் தடை என்ன? இந்த சம்பந்தத்தில் ஒன்று மாத்திரம் நிச்சயமாகச்சொல்லக்கூடும். அதாவது, மதத்தையும், ஜாதியையும், வைதீகத்தையும், கொடூர பழக்கவழக்கங்களையும், ஆதரிக்கும் ராஜ்யம் எதுவானாலும் சரி, அதில் வாழும் பாமர மக்களுக்கு, எந்த சுகமும் திட்டாதென அறிக. எது நல்லது எது கெட்டது என்று விளக்கும் பகுத்தறிவை விருத்தி செய்யாவரை, பாமர மக்களைப் பிடித்த சனிகளாகிய வறுமை, பிணி, அறிவின்மை யாவும் அவர்களை விட்டு நீங்காதென அறிக. முதலாளி அரசு நீடிப்பதற்காகவே, நமது தேசத்தில் ராம ராஜ்யகாலமுதல், மதத்தையும் ஜாதியையும், புரோகிதரையும் ஆதரித்து வரப்பட்டிருக்கின்றன. பாமர மக்கள், முதலாளிகளை பணிந்து

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க

மதபுஸ்தகங்களிலுள்ள குற்றங்கள்.

(T. D. கோபால்)

[முன்தொடர்ச்சி]

சூயமரியாதை இயக்கமானது பொதுவாக உலகிற்கும், குறிப்பாக நமது இந்தியாவுக்கும் உண்மையான விடுதலையையும், சுதந்திரத்தையும் அளிப்பதற்காகவும், நமது மக்களின் அறிவை வளர்ப்பதற்காகவும்; அறியாமையாலும், பயத்தாலும் மக்களின் மனதில் தோன்றியிருக்குக் தப்பெண்ணங்களையும், மூடமோசங்களையும் நிர்மூலமாக்கவும்; இழிவான ஆதிகாலத்திலிருந்து மக்களால் அனுஷ்டிக்கப்பட்டு வரும் குருட்டுத் தனமான தெய்வ வழிபாடுகளை நிராகரியாக்கவும்; இதற்கு முன் போனவர்கள் எவ்வளவு தான்பெரிய மனிதர்களாக இருந்த போதிலும் சரி அவர்களைக் கும்பிடுவதால்மக்களுக்கு நன்மைகளொன்று மேற்படாதென்பதை விளக்கிக் காட்டவும்; நமது கண்களுக்கெதிரில் உலகில் நடமாடும் ஏழைகளுக்கும், அநாதைகளுக்கும் உதவி புரிதலே சாலவும் சிறந்ததாகுமென்பதை மக்களுக்கெடுத்து உபதேசம் செய்யவும்; மக்கள் இவ்வுலக வாழ்க்கையில் அனுபவிக்கும் இன்பங்களையும் பாலியல் சுதந்திரங்களாகாதென்பதை நிரூபாட்டவும்; துன்பங்களும், கஷ்டங்களுமே தான் கடவுளுக்கு அதிபயந்த இன்பத்தை ஊட்டவல்ல தென்னும் மனப்பான்மையை மக்களுடைய மனதிலிருந்து அறவே நீக்கவும்; அறிவு வளர்ச்சியானது குற்றமாகாதென்பதை நிரூபிக்கவும், பேடித் தன்மையும், பயங்காளித்தன்மையும் நற்குணங்களுக்குரிய அறிகுறிகளாகா தென்பதை விளக்கிக் காட்டவும்; மக்களுக்கு விமோசனம் மேற்பட வேண்டுமானால் அவர்களுக்கு ஓர் வித திடமான கடவுள் நம்பிக்கை இருக்க வேண்டுமென்கின்ற யெண்ணத்தை நாசமாக்கவும்; இவ்வுலக வாழ்க்கையில் நாம் துன்பங்களையும், கஷ்டங்களையும் அனுபவித்தால் அதற்காக உலகில் மோட்சத்தில்-இன்பங்களையும், சந்தோஷங்களையும் தவறாதனுபவிப்போ மென்கின்ற மனப்பான்மையை மக்களின் யெண்ணங்களிலிருந்து அடியோடழிக்கவும்; மக்களுக்குண்டேற்பட்டிருக்கும் பாகுபாடுகளையும், வித்தியாசங்களையும், உயர்வு தாழ்வுகளையும் அறவே நீக்கி, சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் வளர்ப்பதற்காகவும்; நாம் மோக்ஷ உலகம் செல்ல வேண்டுமென்றால் ஓர் புரோகிதரோ அல்லது ஓர் மத குருவோ நமக்கு வழிகாட்டியாக இவ்வுலகிலிருந்து நமக்கு உதவி செய்து கொண்டே வர வேண்டுமென்கிற ஓர் வித யெண்ணத்தை மக்களின் மனதிலிருந்து அறவே அகற்றவுமே தான் பகுத்தறிவு இயக்கம் தோன்றியிருக்கின்றது. இவைகளே தான் அவ்வுயரிய இயக்கத்தின் அடிப்படையான கொள்கைகளாகும்.

ஒவ்வொரு புஸ்தகத்தையும், ஒவ்வொரு மதத்தையும், ஒவ்வொரு ஜாதியையும், ஒவ்வொரு வகுப்பையும், ஒவ்வொரு பிரமாணத்தையும், ஒவ்வொரு கோட்பாடையும், ஒவ்வொரு மேற்கோளையும், ஒவ்வொரு மனிதனும் ஆராய்ச்சி செய்வதற்கு சர்வ சாதாரணமாக அனுமதிக்கப்படும்வரையிலும், அத்தகையசாதனங்களேற்பாடு செய்யப்படும்வரையிலும் உலக மென்பது சுதந்திரத்துடனிருப்பதாகவாகுமே அல்லது விடுதலை யடைந்து விட்டதாகவாவது கூறி விடமுடியாது. மக்கள் தங்களுடைய மனதில் உதிக்கும் எண்ணங்களையும், அபிப்பிராயங்களையும் வெளிப்படையாகவும் தைரியமாகவும், அவர்களுக்கு தியாபமெனத் தோன்றும் துறைகளில் அவர்கள் சிறிதும் பயமின்றி பிரவேசிக்கவும், அவர்களுடைய பிரியம் போல் நடப்பதற்குமான சாதனங்களேற்படும் வரையிலும் அவர்கள் அடிமைகளாகவேதானிருப்பார்கள். பல வேறு மதத்தினரும், வகுப்பினரும், ஜாதியினரும் தத்தம் பேதங்களை விடுத்து, யாவரும் ஒரு குடும்பத்தில் உற்பவித்த சகோதரர்கள் போலவும் சினேகிதர்கள் போலவும் ஒருவரை யொருவர் மேசித்து, அளவளாவி, இப்புறத்தழுவிக் கொளளுவார்களையாயில் அபபொழுது நமது இந்த உலகமானது ஓர் சுவர்க்கம் போலவே விளங்கும். நமக்கு நிச்சயமாகவும், உண்மையாகவும் தெரியாத ஒன்றைக் குறித்து நாம் ஒருவருடன் ஒருவர் போராடியும். யுத்தாடியும், ஒருவரை யொருவர் பகைத்தும், வெறுத்தும், ஒருவரை யொருவர் கொலை செய்தும் உயிர் வாழ்வதை நோக்க நமக்கு உண்மையாகவே, பேராச்சரியமாக இருக்கின்றது. பல்வேறு மதங்களைக் குறித்தும், அம்மதங்களின் கடவுள்களைக் குறித்தும் மக்களுக்கேற்படும் அபிப்பிராய பேதங்களினால் மக்கள் ஒருவருக் கொருவரை என் சிறைப் பறித்தியும், அடிமைப் படுத்தியும், தூக்கிலிட்டும், கொலை செய்தும், தெருப்பிலிட்டு வாட்டியும் வதைத்து கொண்டு வருகின்றார்களென்பது நம்மால் அறிந்து கொள்ள முடியாமலே யில்லை. ஐயோ, "அன்பே சிவம்" எனவும், "சிவமே அன்பு" எனவும் போதிக்கப் பட்டிருக்கின்றோம். அப்படியிருந்தும் மகாசமாதானமான புராணங்களிலும் காணப்படும் அட்டூழியங்களுக்கும், கொலைகளுக்கும் கணக்கே இல்லை. சைவர்களின் இந்நிலைமை இழிசெயலே துன்றும், ஐயோ மறுமையில் "சமணர்களை கழுவேற்றிய உற்சவம்" என ஓர் உற்சவத்தை குறித்த ஓர் மாதத்தில் கொண்டாடிக் கொண்டும் வருகின்றார்கள். இவ்வாறே தான் ஒவ்வொரு மதஸ்தர்களும் அன்னிய மதஸ்தர்களைத் தான் புரிந்திக் கொண்டே வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். இவைகளுக்குப் போதிய சான்றுகளும் இல்லாமலில்லை. கடவுள் நம்பிக்கையுள்ள ஒருவர்-ஆஸ்திகர்-கடவுள் நம்பிக்கையில்லாதொருவரை-நாஸ்திகரை-என் பகைக்க வேண்டும்? நாஸ்திகரிடமோ கடவுளுக்கு ஒரு வித ஆபத்தோ, நாசமோ கஷ்டமோ அல்லது கஷ்டமோ கோரிடப்போவதில்லை. அவராலும் அவருடைய பெருமையும் குன்றி விடப் போவதில்லை. கால்திக்கு எல்லாரையும் போல் ஒரு மனிதனே தான். மேலும், அவனுக்குமம் மற்றவர்களுக்கிருப்பது போலவே தான் இன்பமும்-துன்பமும், சுகமும்-கஷ்டமும், ஆனந்தமும்-துக்கமுமிருக்கின்றன. அவன் மனிதனையிருப்பதால், மனிதவர்க்கத்திற்குரிய எல்லாவித உரிமைகளும், சுதந்திரங்களும் அவனுக்கு முண்டு. இத்தகையை நாஸ்திகனை நாம் வெறுக்கவோ மனம், பகைக்கவோ மனம்; அவர்களுடன் போராடாமலும்; அவர்களைக் கொலை செய்யாமலும், அவர்கள் நம்மிடம் நடந்து கொள்வது போல நாம் அவர்களிடம் நடந்து கொண்டும், நம்மை அவர்கள் நடத்துவதைப் போல் நாம் அவர்களை நடத்திக் கொண்டும் வருவதால் நமக் ஏற்படக்கூடிய கஷ்ட நஷ்டங்களென்ன? நாம் நம்முடைய மதஸ்தர்களையும், வகுப்பினர்களையும், ஜாதியினர்களையும் நடத்தி வருவது போல் நாஸ்திகர்களையும்கருணையுடன் நடத்தி வருவது சிலாக்கியமாயும், மேன்மையாகவு மிராதோ? சகோதரர்களே! யோசியுங்கள்.

ஒவ்வொரு மதஸ்தர்களும் தங்களுடைய விரோதிகளையும், சத்துருக்களையும் நேசித்து, சிநேகிப்பதாகவே தான் சொல்லுகின்றார்கள். ஆனால், நாம் அவர்களை வேண்டிக் கொள்ளுவது யாதெனில், அவர்கள் யாவரும் அவர்களுடைய விரோதிகளை நேசிக்க வேண்டுமென்பது மல்ல, அவர்களுடைய சினேகிதர்களின் மீது அவர்கள் யாவரும் அன்பு பூண்டொழுக வேண்டுமென்பது மல்ல; ஆனால் அவர்களுடைய அபிப்பிராயங்களினின்றும், யெண்ணங்களினின்றும் மாறுபட்ட அபிப்பிராயங்களுடையவர்களையும், மாறுபட்ட யெண்ணங்களையுடையவர்களையும் இயற்கையான நேர்மையுடன், அதாவது மனதில் ஒருவிதமான துவேஷமுமின்றி நடத்தவேண்டுமென்பதே யாகும். நாம் அயலாருடைய குற்றங்களையும், தப்பிதங்களையும் மன்னிக்கத்தயாராயில்லாதிருக்கும்பொழுது நம்முடைய தப்பிதங்களையும், குற்றங்களையும் அயலார் மன்னிப்பார்களென்று நாம் எவ்வாறு எதிர்பார்க்க முடியுமென்பதுதான் நமக்கு விளங்கவில்லை.

மக்கள் யாவரும் தங்கள் தங்களுடைய மனோபாவனைப்படியும், தங்களுக்கு எது உசிதமெனத்தோன்றுகின்றதோ அவ்வாறு நினைப்பதற்கும் அபிப்பிராயங்கொள்ளுவதற்கும் எல்லாருக்கும் சம உரிமையும், சம சுதந்திரமும் உண்டு எனக்கருதுவார்களேயானால் அப்பிரயோஜனமான இப்பிரச்சினையானது சுலபமாக முடிந்துவிட்டது போலவேயாகும். ஆனால் செல்வாக்குள்ள மடாதிபதிகளிலிருந்து குருமார்களிலும், ஒழுக்கும், கட்டுப்பாடுமுள்ள மதகுருக்களும், மதபோதகர்களுமிருக்குவரையிலும், மோக்ஷத்திற்கோ அன்றி நரகத்திற்கோ, மக்களுக்கு டிக்கட்டுகள் கொடுத்து அவர்களை அவ்வுலகங்களுக்கு அனுப்பக்கூடிய வல்லமையும், சக்தியும் அதிகாரமும் தங்களொருவர்களுக்குத்தான் உண்டென்று இவர்கள் மக்களே மற்றி பாகுபாடு செய்துகொண்டிருக்கும் வரையிலும்; சுயேச்சையான அபிப்பிராயங்களும், யெண்ணங்களுமுடைய ஒருவனை 'நீச்மகன்' எனவும், 'ஆசாரஹீனன்' எனவும், 'ஜாதி கெட்டவன்' எனவும் உரைத்து அவனை சமூக பஹிஷ்காரம்செய்துகொண்டிருக்கும்வரையிலும், தங்களுடைய உத்தரவுகளுக்கும் கட்டளைகளுக்கும், கீழ்படியாதிருக்குமொருவனை குற்றவாளியெனவும், அபராதத்திற்குரியவனெனவும் தீர்ப்புகள் கூறிக்கொண்டு வரும்வரையிலும், உலகத்தில் துன்பகரங்களும், கஷ்டங்களும், வருத்தங்களும், விரோதங்களும், வன்மங்களும், பகைகளும் தாண்டவமாடிக் கொண்டேதானிருக்கும். மனிதர்களைப்பகைத்து, கடவுளை வணங்கி, வழிபாடி செய்யவேண்டுமென்கின்ற கொள்கைதான் எல்லா மதங்களினுடைய முக்கிய தத்துவார்த்தம் போல் காணப்படுகின்றது.

எல்லா தேசங்களிலும் நடைபெற்றுக்கொண்டுவந்த சம்பவங்களேதான் நமது நாட்டிலும் நடைபெற்றுவந்தது. எதாவது ஒருயந்திரம் புதியதாக சிருஷ்டிக்கப்பட்டால் உடனே அறிவாளிகளும், அதிகாரத்திலிருப்பவர்களும்-அதாவது மத குருக்களும், பணக்காரர்களும் அதாவது அரசர்களும் ஒன்றாக சேர்ந்துகொண்டு தங்களுடைய மதமானது கடவுளாலேயே தங்களுடைய முன்னோர்களுக்களிக்கப்பட்டதெனவும்; தங்களுடைய மதம் ஒன்றுதான் உண்மையான மதமெனவும்; மற்ற எல்லாமதங்களும் பொய்யெனவும், அபத்தமெனவும்; தங்களுடைய உண்மையான மதத்தை நம்புகிறவர்கள் மட்டும்தான் எப்பொழுதும் சந்தோஷமாக இருக்க முடியுமெனவும்; அவ்விதம் நம்பாதவர்கள் யாவரும் எப்பொழுதும் எதி

தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க

'சுயராஜ்யம்' வரப்போகிறதா? 'வைதீகம்' நிலைக்கப்போகிறதா?

"ஆத்ம சக்தி—தியானம்—மகாத்மீயம் அந்த காரத்தில் அருள் ஜோதி போன்ற காந்தியார் கடைப் பிடித்திருப்பதெல்லாம் புராதன ஆரண்ய உலகில் நிகழ்ந்த கௌபீன வாழ்க்கையையும், நிர்வாண வாழ்க்கையையும் மீண்டும் புனருத்தாரணம் செய்வதே தவிர "சுயராஜ்யமோ, சுயேச்சையோ, பொறுப்பாட்சியோ" கிடைப்பதல்ல.

(மாகாண சுயமரியாதைத்தோண்டர் சங்கக்காரியதரிசி சித்தக்காடு கே. ராமையா)

சுயராஜ்யம் இந்தியாவுக்கு வரப்போவதாயும், வந்து விட்டதாயும், அகில உலகமும் கேட்கும்படியான ஓர் பெரும் கூச்சல் கேட்கப்படுகிறது. இக்கூச்சலின் நிலை தான் என்ன? இது தான் வைதீகக் கூச்சலின் ஒலி போலும்! நாம் சுயராஜ்யத்திற்கோ, அல்லது ஜனநாயக பொறுப்பாட்சிக்கோ அருகதை உள்ளவர்கள் தானா வென்று பரீட்சை செய்து கொண்டிருக்கும் இந்தியர்களுக்கு, நம் இந்திய நாட்டில் சமீப காலத்தில் நிகழ்ந்த அரசியல் வாழ்க்கையின் உள் ரகசியங்களைக் கவனித்தாலே பெருத்த ஏமாற்றத்தை விளைவித்து விட்ட தென்பது புலப்படும். ஏனென்றால் உப்பு சத்தியாக்கிரகம், அன்னியத்துணி பகிஷ்காரம், சட்ட மறுப்பு, கள்ளுக் கடை மறியல் போன்ற அரசியல் வாழ்க்கைக்குரிய அம்சங்களில் உப்பு சத்தியாக்கிரகத்தைப் பொறுத்துப் பார்த்தால் அது ஒரு தனிப்பட்ட நபரின் இயக்கமாக பரிணமித்துப் பொது ஜன சபை என்ற சொல்லப்படும் காங்கிரசால் காந்தியமாக மாறி பிரகாசித்ததேயாகும். கடவுள், ரிஷிகள், யோகிகள், மகான்கள், மகாத்மாக்கள், அவதார கர்த்தாக்கள், ஆத்ம சக்தி வாய்ந்தவர்கள் முதலிய நிர்வாணக் குரங்குகளான பல தனிப்பட்ட ஆசாமிகளுக்கு மிதமிஞ்சிசெல்வாக்கைப்புராதனஉலகத்தில் கொடித்தும், நமதுபுராதன நாடு அடைந்தபலன் ஒன்றுமேயில்லை. அப்படி இருக்க நமது நாட்டில் தனிப்பட்ட நபரான ஒரு காந்திக்கும், அவரின் உபதேசங்கட்கும் பெருத்த செல்வாக்கிருப்பதைக் கூர்ந்து நோக்கும் போது ஜனநாயகம், பொருப்பாட்சி, பூரண சுயேச்சை என்பதெல்லாம் மூடனின் கொம்புத்தேனுக் காசைப்படுவதையே ஒக்கும். தோழர் காந்திக்குத்தனிப்பட்டசெல்வாக்கைக் கொடுத்திருப்பதனால் நமதுநாட்டைப் பிடித்த பாமரதன்மை விடுபடவில்லை என்பது ஒருபுற மிருக்கட்டும். தோழர் காந்தி அவர்களை விஷ்ணு அவதாரம். கடவுள் அம்சம், மகாத்மா, ரட்சகர் போன்ற புராதன சம்பிரதாயங்களுக்குரிய வார்த்தைகளால் பிரமாதமாக விளம்பரப்படுத்தும் போது மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத சுயேச்சை, விடுதலை என்பதெல்லாம் காந்தியாரே என்று கருதி விடுகிறார்கள். இம்முறை பொதுமக்களை மேலெழவொட்டாமல் செய்து விடுவதோடு-காந்திக்கு ஜே போவதிலும் ஜெயந்திவிழா, தேரில் வைத்திழுப்பது-ரதத்தில் வைத்திழுப்பது, கற்பூர தூபதீப சோடச உபசாரங்கள் முதலிய மரியாதை அம்சங்களிலேயே தனது விசேஷ சக்தி மெல்லாம் சென்று விடுகிறது. தெய்வீகமும் அதனைவஸ்துக்கொண்டிருக்கும் சார்பு சம்பிரதாயங்களுந் தான் நம் நாட்டை அன்னியருக்குக் காட்டிக் கொடுத்த தென்பது அரிவு உலகத்தில் ஒப்புக் கொண்ட விஷயம். இது சரித்திர பூர்வத்திலும் அறியக்கிடக்கின்றது. பரிபூரண சுயேச்சை அடைந்திருக்கும் இதர தேசத்தைப் பாருங்கள். அத்தேசத்தின் தலைவர்கள் எல்லாம் பெரும்பாலும், உயர்ந்த தத்துவங்கள் என்றே, ஆத்ம சக்தி என்றே, அந்த காரத்தில் அருள் ஜோதி என்றே, மோட்ச காரகமென்றே பொது ஜனங்களுக் கெடுத்துக் கூறுவதில்லை. பகுத்தறிவுக் கொத்த பிரத்தியட்ச பிரமாணக்களைத் தவிர வேறெதுவும் பொது ஜனங்களுக்கு புகட்டுவதில்லை. பிரத்தியட்ச பிரமாணங்களையே அழுத்தமாக போதித்து வருகிறார்கள். ஆகவே அந்த நாடுகளெல்லாம் காலமாறுதலுக் கேற்றவாறு முன்னேற்றமடைந்து வருகிறது. மோட்ச காரகத்திற்குப் பயப்படுவதில்லை. எனவே, பொது மக்களின் பகுத்தறிவை மேலெழ வொட்டாமல் தடுத்து நிற்கும் வைதீகம்-புரோகிதம்-பிராமணீயம்-மகாத்ம மீயம்-கடவுள் அம்சம் போன்ற ஆதார பூதங்களின் ஆதிக்கம் அங்கில்லை. என்றாலும், உணர்ச்சியற்ற ஒரு சில ரிடத்தில் ஷெ கூட்டத்தாருடைய குருட்டாதிக்கம் கொஞ்சம் நிலவிக் கொண்டிருப்ப தென்பது வாஸ்தவம். அது ஜனங்களுடைய முற்போக்கை பாதிக்கக் கூடிய நிலையிலில்லை. ஆதலால் அங்குள்ளவர்கள் அதைப் பற்றிக் கவலைப் படுவதும் இல்லை.

ஆனால் நமது நாடோவென்றால்! கடந்த புராதன கால நிகழ்ச்சிக்கும், நிகழ்கால நிகழ்ச்சிக்கும் ஏதாவது மாற்றமுண்டா? ஏதாவது மாறுதல் அடைவதற்காகவாவது சந்தர்ப்பம் அளிக்கின்றார்களா? நிகழும் நாட்டுக்குச்சீர்திருத்த சிகாமணிகள்என்று சொல்லிக் கொள்ளும் காங்கிரஸ்வாதிகளோ வெண்றால் தங்களைத் தவிர சீர்திருத்த சிகாமணிகள் வேறு எவறுமிலர் என்பார்கள். ஆனால் அவர்களுடைய சீர்திருத்த மெல்லாம் பூரண விடுதலை. பரிபூரண சுயேச்சை என்பதான பிறர் மலைக்கத்தக்க பெரிய பெரிய விஷயங்களை எடுத்துப் போடுவார்கள். இந்தியாவுக்கே பரிதாப உணவளிப்பது காங்கிரஸ்மகாசபையென்றே என்பார்கள். ஆனால் உண்மையான முன்னேற்றத்திற்கு வழக்கமாக மூட்டிக்கட்டை விட்டு வந்த வைதீக சம்பிரதாயத்தின் ஆணி வேர்களை விடாப் பிடியாய்ப் பிடித்துத் நிரிவார்கள். அரசியல் விடுதலையால் வைதீகக் கொடுமையின் ஆணி வேரை எதிர்கால வர்த்தமானத்தில் ,இரண்டறக் கலப்பதற்கு இது காலை செய்யப்படும் சூழ்ச்சியே காராச்சி காங்கிரசின் ஜீவாதார உரிமைத் தீர்மானமாகும். இந்தியர்களின் பழக்கவழக்கங்களில் சர்க்கார் தலையிடுவதில்லை என்ற விக்டோரியா மகாராணியாரின் உத்திரவு பொதுவாகவே இந்திய முன்னேற்றத்திற்கு எப்படியாவது விளைவிப்பதாய் இருந்ததோ அதேபோல் காராச்சியின் தீர்மானம் எதிர்கால இந்தியாவுக்கு நிச்சயமாக இன்னல் விளைவிக்கப் போகிறது. நிருகாந்தியாரின் அரசியல் நிட்டத்திலும், மக்கள் முன்னேற்றத்திலும் தனக்கே புலப்படாத தெய்வீகமெனும் ஓர் நூதன உணர்ச்சியைப் புகுத்தியிருக்கிறார். அதன் மூலமாக ஜன சமூக வாழ்வுக்கு அடியோடான பிரத்தியட்ச பிரமாணங்களை ஒருவாறு ஒழித்து விட்ட தோடு நமது மக்கள் முற்கால ராஜீய சமூக விடுதலைக்கு கடவுளை நம்பி வந்த பைத்தியக்காரத்தனத்தைக்கும், ஆத்ம சக்தி-தியானம் முதலிய ஆரண்ய உலகில் நிகழ்ந்த கௌபீன வாழ்க்கைக்கும் மீண்டும் புத்துயிரளித்து வருகிறார். கடந்த உலக வாழ்வு கௌபீனஸ்தர்களையும், நிர்வாணஸ்தர்களையும் கண்டு பக்தி சிரத்தை கொண்டு ஆண் பெண் உடன் அனைவரும் ஆராதித்து வணங்கிய காலமாகும். அக்காலத்தில் கௌபீனஸ்தர்களுக்கும், நிர்வாணஸ்தர்களுக்கும் ராஜசபை உள்ளிட்ட எல்லா சபைகளிலும் அளவுக்கு மீறிய செல்வாக்குண்டு. அதற்குக் காரணம் சிர்வாணமும், கௌபீனமும் கூட தெய்வீக சக்தி என்பதாக கருதியதேயாகும். அக்கால நிலை என்ன வாயிற்று? அக்கால நிலைக்குத் தான், மக்களைக் காங்கிரசும் திருப்பிக் கொண்டிருக்கிறது.

வால்தவத்தில் காங்கிரஸ் நம்மக்களுக்கு தன் உதவி—தன்னம்பிக்கை ஆகிய உணர்ச்சியில்லாமல் செய்து விட்டது. புராதன காலத்தில் பிறவியின் காரணமாக எப்படி மனித உரிமைகள் தடுக்கப்பட்டிருந்ததோ, அதேபோல் இக்கார்நியத்திலும் 'பிறவியே'மூலதாரமாகக்கொண்டசுதந்தர உரிமைகள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. பணக்காரன், ஜமீன்தார், படித்தவன், பிராமணன் போன்றவர்களுக்குப்பழக்க வழக்கத்தின் காரணமாக அளிக்கப்பட்டிருக்கும் உரிமை பாமரர்களுக்கு அளிக்கப்படவில்லை. பழக்கவழக்கம்-கலெக்டர் கோயில்கள் கோயில் சொத்துக்கள்-தர்ம சொத்துக்கள்--மதபாதுகாப்புகள்--பிறப்புரிமைகள் போன்ற பரம்பரை பாத்தியங்களுக்கு ஆபத்து நேரிடாமல் கட்டிக்காப்பதே காங்கிரசினுடைய நிட்டமாகும். இப்பரம்பரை பாத்தியத்தில் பாமரர்களுக்கும், பறையர் பள்ளர்களுக்கும் சுதந்தரமடைய ஏதாவது வழியிருக்கிறதா? அல்லது பழமை வைதீகம் பலப்படுவதற்கு வழியிருக்கிறதா? பழக்க வழக்கத்தைப்பாதுகாப்பதென்பதும், பிறவி உரிமையை ஸ்திரப்படுத்துவதென்பதும் பழக்க வழக்கத்தில் ஒன்றான அடிமைகள், கூலிகள் என்பனவைகளையும் பாதுகாக்கும்படித்தானே நேரிடுகிறது. இதை மெய்ப்பிப்பதற்கு வேறு உதாரணம் வேண்டுவதில்லை. 'ராமகுண்டம், நாசிக், குடகாயூர் முதலிய இடங்களில் நடந்த ஆலய சத்தியாக்கிரஹமும் குளசத்தியாக்கிரஹமுமே போதுமானதாகும். அது விஷயத்தில் வைதீகர்களின் மனப்பான்மை என்ன? சனாதன சபை, பிராமணசபை, வர்ணச்சிரமசபை, வைதீகசபை எல்லாம் என்ன தீர்மானம் செய்தது? காராச்சி, ஜீவாதார நிட்டத்தை ஆதரித்தார்களே அல்லது ஷெ சத்தியாக்கிரஹத்தைக்கண்டித்து சத்தியாக்கிரஹத்திலும் பரம்பரை சம்பிரதாயங்களுக்குப் பங்கம் விளைக்கிறதாய் இருப்பதாகச்சொன்னார்களே! குறிப்பாக நாசி கிருஷ்ணமாச்சாரி மூலதாரமான உரிமைகளின்பால் எத்த சர்க்காரோ, பொதுஸ்தாபனமோ அல்லது சுயராஜ்ய சர்க்காரோ தலையிடுவதற்கு பாத்தியமில்லை என்று தனது வெளியீட்டில் சொன்னார்.. தோழர் எம். கே. ஆச்சாரியாரும் அதேபோல் ஒரு கீண்ட அறிக்கையும் சமீபத்தில் வெளியிட்டார். இவ்வறிக்கைகளைப்பின்பற்றி நிற்பது காராச்சி காங்கிரசின் ஜீவாதார நிட்டம் என்பதை யார் மறக்கமுடியும்?

பாலுக்கும் காவல்பூனைக்கும் தோழ

தொடர்ச்சி டம் பகுதி பார்க்க.

நறுக்குத் துணுக்குகள்.

(உடுமலை கனகராஜன்.)

இலர்களில் யார் பிடிவாதக் காரர்கள்?:—

14 சிபந்தனைகளில் ஒன்று குறைந்தாலும் ஏற்றுக் கொள்ள மாட்டோம்.

முஸ்லீம்கள்.

எங்களுக்குத் தனித் தொகுதியே வேண்டும்.

அம்பேத்கார்.

என் உயிருள்ள வரையில் நான் தனித் தொகுதி முறையை, அதிலும் தீண்டாதாருக்கு தனித்-தொகுதி அளிப்பதை எதிர்த்தே தீருவேன்.

காந்தி.

ஃஃ ஃஃ

இந்தக் குற்றம் யாருடையது?

ஒரு இளம் விதவை விபசாரம்செய்வது அவளுடைய குற்றமா? அல்லது விதவா விவாகத்தை மறுக்கும் இந்து மதத்தினுடைய குற்றமா?

தீண்டாதார், உயர்ஜாதி எனப்படுவோரை நம்பாமல், தனிப்பிரதிநிதித்துவம் கேட்பது தீண்டாதார் குற்றமா? அல்லது தீண்டாதார் தங்கள் மீது நம்பிக்கை இழக்கும்படி தீண்டாதாரைத் தொடுமைப் படுத்திய ஜாதி ஆணவம் கொண்ட உயர்ஜாதிக் காரர்கள் என்போர் குற்றமா?

ஃஃ ஃஃ

முழங்காலுக்கீதும் மோட்டைத் தலைக்கீதும் முடி போடுவது.

1. தீண்டாமை ஒழிய வேண்டும்.

காந்தி.

வருணாச்சிரம தர்மம் கண்டிப்பாயிருக்க வேண்டும். காந்தி.

2. சமத்துவம் வேண்டும்.

காந்தி.

ராஜாக்களை கடவுள் பெரிய மனிதராய் படைக்கிறார்.

(வட்ட மேஜை) காந்தி.

3. தீண்டாதார்களை உள்ளே விடாத கோவில்களை (வரும்) சுயராஜ்ய சர்க்கார் பறிமுதல் செய்வார்கள்.

ஜவஹர்லால்.

எந்த ஜாதியார் மனமும் புண்படாதபடி சுயராஜிய சர்க்கார் அமைக்கப்படும்.

ஜவஹர்லால்.

ஃஃ ஃஃ

முடி முடி வைத்தாலும், உள்ளதை எப்படி மறைக்க முடியும்?

இந்தியாவில் பெண்கள் நிலைமை மோசமானதாயில்லை.

(லண்டனில்) காந்தி.

பெண்கள் அவரவர் வீடுகளில் ராணிகளாயிருக்கிறார்கள்.

காந்தி.

இந்த அபிப்பிராயமுள்ளவருக்கு பெண்கள் முன்னேற்றத்தில் எவ்வளவு அக்கரையிருக்கும் என்பதை சொல்லுதவாதிகள் கவனிக்கவும்.

ஃஃ ஃஃ

யார் ஜவாப்தாரி?

சர்க்காரா? ஜாதி இந்துக்களா?

தீண்டாதார் கோவில் பிரவேசம் செய்தால் சர்க்கார் கோவில் முன் வந்து நின்றுகொண்டு ஒவ்வொரு வரையும் என்ன ஜாதி என்று விசாரித்துத்தடுக்கிறார்களா? அல்லது பூசாரிகளும் உயர் ஜாதி இந்துக்கள் எனப்படுவோரும் சர்க்காருக்குத் தகவல்கொடுத்து அழைக்கிறார்களா? தீண்டாதானெனப் படுவோரும் ஜாதி இந்துக்கள் என்று சொல்லிக்கொள்பவரும் ஒரு கோவிலில் நுகார் இல்லாமல் சாதாரணமாக உள்ளே போய்க்கொண்டிருந்தால் 'தீண்டாதார் எப்படி கோவிலில் பிரவேசிக்கலாம்? என்று சர்க்கார் கேட்டதுண்டா? இப்படியிருக்க சர்க்கார் சமூக சீர்திருத்தத்திற்கு முட்டுக்கட்டையாயிருக்கிறார்கள் என்று பழிபோடுவது நியாயமல்லாததுமன்றி நுவேஷ குணத்தை காட்டி நிற்கிறது.

பழக்கவழக்க உரிமைகளை காப்பாற்றுகிறேன் என்று வாக்குறுதி கொடுத்த பிரிட்டிஷ் சர்க்காரும், காங்கிரஸ் வாதிகள் வானேற்றிப்புகழும் சுயராஜ்ய சர்க்காரும் தங்கள் கொடுத்த வாக்குறுதிப்படி நாணயமாக நடந்து கொள்வதாயிருந்தால் ஜாதி இந்துக்கள் எனப்படுவோருக்கு சாதகமாக (பழக்க வழக்கத்திற்கு விரோதமாக) கோவிலில் பிரவேசிக்கும் தீண்டாதாரை தடித்துத்தான் தீரும் என்பதில் சந்தேகம்வேண்டாம். மதமடிமையும் பழக்கவழக்கங்களை காப்பாற்றும் தன்மையையுங்கொண்ட பிரிட்டிஷ் சர்க்காரும் காங்கிரஸ் சர்க்காரும் சீர்திருத்த வாதிக்கு ஒன்றேயாகும்,

இது யாரை ஏமாற்றுவதற்கு?

சுயராஜ்ய சர்க்கார் தீண்டாதாரை கோவிலில் பிரவேசிக்க அனுமதியளித்தால் பழக்க வழக்க உரிமைகளை காப்பாற்றுகிறேன் என்றவாக்குறுதியை மீறுவதாய் ஆகிறது. இந்த வாக்குறுதிப்படி தீண்டாதாரை கோவிலில் விடாமல் தடுத்தால் 'தீண்டாதார்களை உள்ளே விடாத கோவில்கள் பறிமுதல் செய்யப்படும்' என்ற ஜவஹர்லால் சொன்னதும் காந்தியார் ஒத்துக்கொண்டதுமான வாக்குறுதி தவறிவிடும். எப்படி சுயராஜ்ய சர்க்கார் நடந்துகொண்டபோதிலும் யாதோ ஒரு வாக்குறுதியை மீறி நாணயக்குறைவாய் நடந்து கொண்டவர்கள் ஆவார்கள். இப்படி என் ஒன்றுக்கொன்று முரண்பட்ட வாக்குறுதிகள் செய்ய வேண்டும்? இது யாரை ஏமாற்றுவதற்கு? சீர்திருத்தக்காரனையா? வைதீகனையா?

நியாயத்தைச் சொன்னால் கோபமெதற்கு?

'பழக்க வழக்க உரிமைகளைக் காப்பாற்றுகிறேன்' என்ற காங்கிரசின் சுயராஜ்யம், இமயமலைச் சாரலில் நரபலி கொடுக்கும பழக்க வழக்கத்தையும், காளிதேவிக்கு ரகசியமாய் நரபலி கொடுப்பதாக உள்ள பழக்க வழக்கத்தையும் காப்பாற்றுமா?

சிறு குழந்தைகளை கலியாணம்செய்வது பழக்க வழக்கம். இதைக்காப்பாற்றுகிறேன் என்று சொல்லுவதற்கும், சாரதா மசோதாவுக்கு உலை வைக்கிறேன் என்று சொல்லுவதற்கும் வித்தியாசமிருக்கிறதா? நாணயத்தோடு பதில் சொல்லுங்கள்! அப்படி விசியாசமிருந்தால் உடனே தெரிவிக்கவும். வித்தியாசமில்லை என்றால், பழக்க வழக்கத்தைக் காப்பாற்றுகிறேன் என்ற அகில இந்தியக் காங்கிரசை பிராமண சபை என்று கூறுவதில் தற்றமென்ன? அப்படி இல்லாமலா, சாரதா மசோதாவுக்கு உலைவைக்க வேண்டுமென்று கங்கணம்கட்டிக்கொண்டிருக்கும், சத்திய மூர்த்தி கோவிந்தியார் காங்கிரஸ் வாதிகளாய் மாறுவேடந்தாங்கி இருக்கிறார்கள்.

சுயமரியாதை. தேசிய சுயமரியாதை.

சுயமரியாதைக்காரர்கள், சுயமரியாதையில் தேசியம் கிடைக்கிறதென்றும், தேசியமுள்ள சுயமரியாதையென்றும், தேசியமற்ற சுயமரியாதையென்றும் இரண்டில்லை என்று சொல்லுவதற்கிணங்க, சுயமரியாதையின் பெயராலேயே மகாநாடு நடத்துகிறார்கள்.

ஆனால் காங்கிரஸில் சுயமரியாதை (சுயமரியாதைக்கொள்கைகள்) இருக்கிறது என்று பறைசாற்றும் தேசிய வாதிகள் (தேசிய மகாநாடு) என்ற பெயரிட்டு நடத்தாமல் (தேசிய சுயமரியாதை) என்று பெயரிட்டதிலிருந்து தேசியத்தில் (தேசிய காங்கிரஸில்) சுயமரியாதை இல்லை என்று அவர்களே எல்லோரும் அறியும்படி நிரூபித்துக்காட்டிவிட்டதிற்காக எனது வந்தனத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்துமதத்தைக்காப்பாற்ற சுயராஜ்யமென்றால் அதை அழிக்கத்தோன்றிய சுயமரியாதைக்கு அந்த சுயராஜ்யம் வேண்டாம்.

மதப்பாதுகாப்பு காங்கிரஸ் திட்டம். மதமாறுதல் கூடாது என்பது திரு. காந்தியார் கொள்கை.

மதப்பற்றுடைய காங்கிரசிற்கும் மதமாறுதலிலும் இந்துமதம் கூடிணித்து வருவதைப்பார்க்கும்,

இராம இராஜிய வழுவுசீர்திருமதர்ம இந்துமத பகவத்கீதை காந்தியாருக்கும் வேறு எந்த கொள்கைகள் இருக்கமுடியும்.

மத உணர்ச்சியை அடியோடு ஒழிக்கவந்த சுயமரியாதைக்கும் மதவெறி கொண்ட காங்கிரசிற்கும் விரோதமிருப்பதில் ஆச்சரியமில்லை.

சுயமரியாதை புதுமைக்குப்போகிறது, காங்கிரஸ் பழமைக்குபோக வேண்டுமென்கிறது. புதுமையும் பழமையும் ஒத்துழைக்கமுடியாது புதுமையைக்கொண்ட சுயமரியாதையும், பழமையை அடிப்படையாகக்கொண்ட காங்கிரசும் ஒரிடத்தில் சந்திக்க நேர்ந்தபொழுது ஒரு மறையொன்று இயற்றப்படுவது இயல்பே.

மதஒழியுங்காலமே மக்கள் உண்மை விடுதலையடையும் காலமென்று சுயமரியாதை சொல்கிறது.

காங்கிரஸ் அனுனியனைத் தூரத்தி விட்டால் சுகம் பெறலாம் என்கிறது. இதை அவரவர்கள் யோசித்துப்பார்க்கவும். அன்னியனை தூரத்தி விட்டு, இந்தியர்களுக்குள்ளாவே ஒருவனை ஒருவன் அடிமைப்படுத்தினால் எப்படி சுகமாய் வாழமுடியும்? அப்படி ஒருவனை ஒருவன் அடிமைத் படுத்த மாட்டான் என்பதற்கு அறிகுறிகள் ஒன்றும் காணப்பட வில்லையே. இப்பொழுது தீண்டாதாரை கொடுமைப்படுத்துகிறவர்கள், சுயராஜியம் வந்த உடனே புது மனிதர்களாய் மாறி விடுவார்களா? அன்னியரால் அடிமைப்படுத்தி, (கூட்டில் அடைத்து) ஆண்டு கொண்டிருக்கும் பொழுதே, தீண்டாதார்களைப் பார்த்து, உறுமுகின்ற உயர்ஜாதி எனப்படும் புலிகள் ஆங்கிலேய ஆட்சியான கூட்டிலிருந்து விடு பட்டால், தீண்டாதார் கதி என்ன ஆவது? ஜாதி, மத ஆணவத்தை, உடைய இந்தியாவிலுள்ள மனிதப் புலிகளுக்கு அக்கொடூரத்தன்மை அவர்களிடமிருந்து ஒழியும் வரை அன்னியர்கள் அம்மனிதப் புலிகளை அடிமைப் படுத்திக் கூட்டிற்குள் வைத்திருப்பதே ஏழைகளுக்கும், தீண்டப் படாதவர்களுக்கும் க்ஷேமம் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேக மில்லை. இவ்விதம் சொல்லி ஜாதி ஆணவமும் மதகர்வமும் வாயிந்த கன்னெஞ்சர்கள் வாழும் தேசத்திற்கு துரோகியாயிருப்பேனேயல்லாது வாயில்லாப் பூச்சிகளான தீண்டாதார்களுக்கும், மதத்தால் மிதிபட்டுக்கிடக்கும் பெண்களுக்கும் துரோகியாக இந்நிலையில் சுயராஜியம் கேட்க முற்பட மாட்டேன்.

"ஒருவனை யார், அவன் தன்மை என்ன என்று அறியுமுற்று அவனைச் சுற்றியுள்ள நண்பர்களைப் பார்" என்னும பொருளமைந்த ஒரு பழமொழி ஆங்கிலத்திலுண்டு இதை திரு. காந்தியாரை அறிவதற்கு உபயோகப்படுத்திப் பாருங்கள்! திரு. காந்தியார் வட்டமேஜை மகாநாட்டிற்குப்போகும் பொழுது, களிமண்ணும், கங்கை நீரும் கொண்டுபோன மாளவியாவும், திரு. ரங்கசாமி அய்யங்காரும் போனார்கள் என்றால், பின் என்ன சொல்வது. திரு. காந்தியார் மதப்பித்து பிடித்தவர் என்பதற்கு சந்தேக முண்டா?

விதவா விவாக சபா.

ஸ்ரீ. கங்காராம் விதவா பவன் சுமார் 1 வருஷத்திற்கு முன்பு தான் சென்னையில் ஏற்படுத்தப்பட்டது. ஆறு விதவைகளை ஏற்கனவே தக்க ஆடவரை விவாகம் செய்துகொண்டு இப்போது நல்ல நிலையில இருந்து வருகிறார்கள். இன்னும் 5 பிராமண விதவைகள், 1 வைசிய விதவை, 1 பல்ஜ விதவை ஆக ஏழு இளம் விதவைகளிருந்து வருகின்றனர். அவர்களெல்லாம் 18 வயது முதல் 22 வயதுக்குட்பட்டே யிருக்கிறார்கள். மற்ற விபரங்கள் எழுதித்தெரிந்து கொள்ளலாம்.

காரியதரிசி,

விதவா விவாக சபா,

161, பிராட்வே, சென்னை.

ஜா முத்தையா நூலக அறக்கட்டளை

யாத்திரையும், புண்ணியமும்.

(சாமி. சிதம்பரனார்.)

யாத்திரைஎன்பது பிரயாணம்; அதாவது பல ஊர்களுக்கும் செல்லுவது; இந்தியாத்திரையையெல்லாமதத்தினரும், எல்லாச் சாதியினரும் செய்துவந்தனர்; பண்டைக்காலத்தில் யாத்திரைசெய்வதற்குமதிப்பிருந்தது; அதில்சிலதுண்மையும்கூட இருந்தது. தெண்ணாட்டுப்பார்பனர்கள் காசியாத்திரைசெய்யவேண்டுமென ஏற்படுத்தினர்; இப்பொழுதும்அவர்களுடைய கல்யாணச்சடங்கில், காசியாத்திரை போவதும்ஒரு சடங்காக இருக்கின்றது; வடகாட்டுப்பார்ப்பனர் இராமேசுவரயாத்திரை செய்வதை முக்கியமாக வைத்திருந்தனர். இதைபோலவே கேரளநாட்டினர், அதாவதுநிறில்வர்கள், ஸ்ரீசைலம் (ஸ்ரீசைலம்) யாத்திரை போவதை முக்கியப்பாகவைத்திருந்தனர்; மூஸ்லிம்கள் மெக்காவுக்கு யாத்திரைசெய்வதை முக்கியமாக கருதுகின்றனர்; கிறிஸ்தவர்கள், புதுதாபிதங்க இந்தியாவுக்கு யாத்திரை செய்வதைச் சிலர்தாக்கொண்டிருக்கின்றனர். இவ்வாறுவெவ்வொருநாட்டினரும், ஒவ்வொருமதத்தினரும் தங்கள் மதஸ்தாபகர்கள் பிறந்தஇடங்களையும், தங்கள்கடவுள் இருப்பதாகக்கருதும் இடங்களையும் யாத்திரைஸ்தலங்களாகக் குறிப்பிட்டிருந்தனர்.

யாத்திரை செய்வதனால், நல்ல ஆரோக்கியத்தைப்பெறலாம்; நினைத்தகாரியங்களை அடையலாம்; உலகில் சுகம அடையலாம்; தாம்செய்தபாவங்கள்நீங்கலும்; என்றுநம்பி மூடமக்கள் யாத்திரைசெய்தனர்; யாத்திரைசெய்வதை இதத்துக்குரிய காரியமாகக்கருதியவர்கள் சிலரே; பெரும்பாலான மக்கள் யாத்திரையைப் பரத்துக்குரிய காரியமாகவே கருதினர். ஆனல்உண்மையில்யாத்திரை ஏற்பட்டதன்கருத்து, மக்களைச்சுகாதாரமுடையவராக வாழச்செய்ய வேண்டும்; உலகவிஷயங்களை அறிந்தவராகவாழச்செய்யவேண்டும்; என்பதேயாகும்.

பண்டைகாலில் யாத்திரைசெய்யவேண்டுமென்று வெகுதூரத்தில் உள்ளஒருகுறிப்பிட்ட ஸ்தலத்தையடையவேண்டுமென்றில்லை அதுஎளிதானகாரியமல்ல; மிகவும்கஷ்டமான காரியம்; இக்காலத்தைப்போல ரயில், மோட்டார், ஆகாயவிமானம், முதலியசாதனங்கள் இல்லாமையால், பலநாட்கள், பலமாதங்கள், பலவருஷங்கள் பிரயாணம்பண்ணவேண்டும்; ஊர்கள்வழியேநடக்கநேரும், மலைச்சாரல்களின்வழியே போகுபடிநேரும்; காடுகளின்வழியே செல்லுபடி நேரும்; பலஆறுகளை ஓடங்களின்மூலம் கடந்துசெல்லுபடிநேரும்; இவ்வாறுபல இயற்கைஸ்தலங்களில் கால்நடையில் சுரைசெய்த பின்னரே கடைசியில் குறிப்பிட்டஇடத்தை அடையலாம். மீண்டும்தமது சொந்த ஊருக்குதிரும்பும்போதும் முன்சென்ற வழியேதிரும்பவேண்டும்.

இவ்வாறுபல இயற்கைகளைக்காண்பதனால், மக்களின் மனதில்உள்ள துலோகன் அகலும்; மனதில்மிகுந்த சந்தோஷ்டி உண்டாகும். இயற்கையின் மேற்படிந்த காத்தில் செல்லுவதால் உடலில் உள்ள பிணிகளும் அகலும்; சரீரதிடமும் உண்டகும்; பலநூடக கலைபுகளையும் பலஇயற்கைஅதிசயங்களையும் காண்பதனால் அறிவுவளர்ச்சியும், இயற்கைப் பெருன் ஆராய்ச்சியும் உண்டாகும், ஆங்காங்கே வாழும்மக்களுடைய நாகரிகங்களையும் அறிந்துகொள்ளலாம் இவ்வாறு மனக்கலை நீங்கிச்சந்தோஷமும் ஊக்கமும்பெறுவதுமன்றி, உடல்நோய் நீங்கித்திடகாத்திரம் பெருவதனாலும் பகுத்தறிவும் உலகஅறிவும் பெறுவதனாலும், அவர்கள்காலங்கள்செய்துமுடிக்க நினைக்கும் எந்தக்காரியங்களையும் எளிதில் செய்துமுடித்துவிடலாம்.

ஆகையால் ஒரு காரியத்தையும் செய்துமுடிக்கக்கூடிய உடம்பலமும், மனஊக்கமும். அறிவுத்திறமையும் இல்லாதவர்கள், யாத்திரைசெய்துவர்வுடன் அயற்றைப்பெறுவாராயினா? இந்தநிகழ்ச்சியைக்கண்ட மூடமக்களும், அறிவுடையவர்களிற்சில ரும்கூட யாத்திரை செலவைத்தெய்வீகசம்பந்த முடையதாக, அதனால் தெய்வத் தன்மை பெறுவதாகக்கூறிவிட்டனர், இதைப்பல நூல்களிலும் எழுதிவைத்துவிட்டனர். இதற்கென்றே புராணங்களும் ஏற்பட்டுவிட்டன. பிறகு குறிப்பிட்ட யாத்திரைஸ்தலங்களுக்கெல்லாம் தனித்தனி புராணங்களும், ஏற்படுத்திவிட்டனர். யாத்திரைசெய்பவர்கள் அந்தந்த ஸ்தலங்களிலும் பலசடங்குகளைச் செய்யவேண்டுமென்றும் ஏற்படுத்திவிட்டனர் ஆகவே யாத்திரையைப் புரோஹிதக்கூட்டத்தார் தங்கள்வயிற்றுப்பிழைப்புக்கு ஆதாரமாகக்கொண்டனர். ஜனங்களுக்கு யாத்திரையைத் தெய்வீகமுள்ளதாகக்கருதிய காரணத்தால் புரோஹிதர்கள் விரித்தவலைக் குள்மாட்டிக்கொண்டனர்.

இந்தமூடப்பழக்கத்தால் இன்றும், யாத்திரையைத் தெய்வீகதன்மையுடையதாகக் கருதி அதைச்செய்கின்றகூட்டத்தார் கணக்காடில் அதிகமாக இருக்கின்றனர். வியாதியினால் வருந்துகின்றவர்கள் ஏழரைசனிமுதல் பணக்காரர்வரை எல்லோரும், யாத்திரைசெய்வதாக ஒவ்வொரு ஊர்களைக் குறிப்பிட்டு வேண்டிக்கொள்ளுகின்றனர். இராமேசுவரயாத்திரை செய்வதாகவும், திருப்பதியாத்திரைசெய்வதாகவும், பழனி, திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், வைத்தீசுவரன்கோயில், குன்றக்குடி, சுவாமிமலை திருவண்ணுமலை, சென்னிமலை, முதலியஊர்களில் வசிக்கின்ற சாமிகளுக்குநேர்த்திக்கடன்கள் செய்வதாகவும் வேண்டிக் கொள்ளுகின்றனர். இவ்வாறுவேண்டிக்கொள்ளுவதோடு மாத்திரமநிற்பதில்லை. வைத்தியர்களையும், டாக்டர்களையும் அழைத்து தலைமாடம், தங்கள் வியாதியைத்தெரிவித்து மருந்தும் சாப்பிடுகின்றனர். இவர்கள் மருந்தினால் வியாதி குணப்பட்டதாக நினைப்பதில்லை, தாங்கள் வேண்டிக்கொண்டசாமிகள்தான் தங்கள் உயிரைக்காப்பாற்றி விட்டதாக நினைத்துக்கொள்ளுகின்றனர். பிறகு வேண்டிகொண்டபடி அந்தஊர்களுக்கு யாத்திரைசெய்கின்றனர். இதனால் ஏராளமான பொருளை விரையஞ்செய்கின்றனர். இதுவுன்றி, சர்வகலாசாலைப் பட்டம்பெற்ற படிப்பாளிகளும், சமின்சுபடித்தவர்களுங்கூட பெண்களுக்கு எப்படிக்கெற்பம் தரிக்கிறது என்பதைஉணர்ந்திருப் பவர்களுங்கூட, இராமேசுவரம் போவதால் பிள்ளைபிறக்குமென்றும், திருப்பதிக்குபோவதால்பிள்ளைபிறக்குமென்றும், பக்கிரிமஸ்தான் கொடுக்கும் அழுக்குத்தண்ணீரைக்குடித்தால் பிள்ளைபிறக்கும் என்றும் நம்புகின்றனர். இதற்காக ஏராளமான பொருளைச்செலவுசெய்துகொண்டு யாத்திரை செய்கின்றனர். இத்தகைய முட்டாள்தனம் மனுமக்களிடம இருப்பதற்குக்காரணம், பண்டைக்காலமுதல் கடவுளென்றும் ஆன்மா, நரகம், மோட்சம், அவதாரம், மகான், மகாத்மா. ஆழ்வார், நாயன்மார்முதலியமூடநம்பிகையல்லவா?

இப்படி ஒரு காரியத்தைக்குறித்து வேண்டிக்கொண்டு யாத்திரைசெய்யாமல்லாமல், ஒருவேண்டுகோளும் இல்லாமல் யாத்திரைசெய்கின்றவர்கள் தனேகர். சாதாரணமாகவே புண்ணியஸ்தலங்களுக்குப் போனல்—அங்குள்ளசாமிகளைவணங்கினல் அல்குள்ளபாஷிபடிந்த அழுக்குத்தண்ணீர்க்குட்டைகளில் முழுகினல் புண்ணியமுண்டாகும், தாம்செய்த அக்கிரமத்தின் பாவங்கள்போகும், மோட்சம்கிடைக்கும் என்ற மூடநம்பிக்கையுடன், உற்சவகாலங்களில், சேரங்கம், சிதம்பரம், மதுரை, திருவண்ணுமலை, மாயவரம், திருவாரூர், திருவிடமருதூர், சீர்காழி, போன்றஸ்தலங்களுக்குயாத்திரைசெய்கின்றஜனங்கள்எவ்வளவு? இவ்வாறுசெய்யும் யாத்திரைகளால், இருக்கின்ற பிணிகளுடன் இன்னும்பலபிணிகளைச்சம்பாதித்துக்கொள்வதும், ரயில்வே கம்பேனிக்கும், யாத்திரைஸ்தலங்களில் உட்கார்ந்துகொண்டு போவோர், வருவோர் பொருளை, மோட்சமென்றும், நரகமென்றுஞ் சொல்லித்தட்டிபறிக்கும் சோம்பேரிப்பார்ப் பனர்களுக்கும் கொட்டிக்கொடுப்பது தான்கண்ட பலன்.

இவ்வாறுள்ள இத்துக்களின் மூடநம்பிக்கையை உணர்ந்துதான் ரயில்வேகம்பெனிக்காரர்களும், யாத்திராஸ்தலங்களைப்பற்றி விளம்பரம்செய்ய ஆரம்பித்தவிட்டார்கள். ஒவ்வொருஸ்தலத்தின்புராணக்கதைகளையும்எடுத்துவிளம்பரம் பண்ணுகின்றனர். அவைகளைப்படங்களின் மூலம் விளக்கிக்காட்டி இத்துக்களை யாத்திரை செய்யச் சொல்லுகின்றனர். இத்துக்கள் ஸ்தலயாத்திரை செய்வதை நிறுத்திவிட்டால்—அதாவது மூட்டாள்தனம் நீங்கினல் முதலில் ரயில்வே கம்பெனிகாராகளின் வருமபடியில் பாதிகுறைந்து விடுமென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை.

இத்துக்கள் யாத்திரை செய்வதனல், பாவம் போகின்றது, புண்ணியம் உண்டாகின்றது என்ற குருட்டு நம்பிக்கையை ஒழித்து விட்டு, யாத்திரையினல் சரீர நன்மையுண்டாகின்றது, அறிவு வளர்ச்சியுண்டாகின்றது என்பதை மாத்திரம் நம்புவார்களானல், அவர்கள் யாத்திரை செய்யவேண்டிய அவசியமேயில்லை. நல்ல தேசப் பயிற்சி செய்வதனலும், அறிவு நூல்களைக் கற்பதனலும், பத்திரிகைகளைப்படிப்பதனலும், சுகாதாரமான காலங்களில் பெரிய நகரங்களிலுள்ள ஒவ்வொரு அதிசயங்களையும் காண்பதனலும், இயற்கைத் தோற்றங்களைக்கண்டு உணர்வதனலும் நல்ல நிடகாத்திரத்தையும், சிறந்த அறிவையும் பெறலாம் என்பது நிச்சயம். ஆகையால் வீண் பிரேமை கொண்டு, உற்சவம், யாத்திரை என்று சொல்லிக்கொண்டு, பொருட் செலவுக்கும், குருட்டு நம்பிக்கைக்கும் இடங்கொடுக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

தற்கால சமூக அமைப்பு அதிருப்தியானதும்

சமூகப் புரட்சி அவசியம்.

ரோமேயின் ரோலண்டு கருத்து.

மிக கியாதிவாய்ந்த பிரஞ்ச் ஆசிரியரான ரொமெயின் ரோலண்டு தனது நண்பருக்குஎழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:—

"தற்கால சமூக அமைப்பில் கோடிக்கணக்கான ஜனங்களுக்கு அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. தற்கால உலகில் மூதலாளி தத்துவமே தலைசிறந்து தாண்டவமாடுகிறது. எனவே ஒரு சமூகப் புரட்சியுண்டாக வேண்டுவது அவசியத்திலும் அவசியமாகும்."

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

நமது 'வியாக்யானம்.'

''ஸ்க்ருரூ லூஸ்''

வியாக்கியானம் என்றால், அர்த்தம்; அதாவது பொருள்; அதாவது உரை சொல்லுதல்; வியாக்கியானம் அர்த்தம் என்பன சமஸ்கிருத வார்த்தை; உரை, பொருள் என்பன தமிழ்வார்த்தை. நான் இப்பொழுது தமிழ் வார்த்தையை உபயோகப்படுத்தவில்லை. வியாக்கியானம் என்ற சமஸ்கிருதமொழியை உபயோகித்தேன். ஏன் தெரியுமா? கொஞ்சம் ஏமாற்றலாம் என்றுதான். யாரை? நம்மவரை அல்ல, பார்ப்பனர்களை; அல்லது வைதீகர்களை; அல்லது காங்கிரஸ்காரர்களை, அவர்கள் கையில் குடி அரசுகிடைத்தால் அதை அவர்கள் பகுத்தறிவுடன் படித்துப்பார்க்க நினைத்தால் 'வியாக்யானம்' என்ற தலைப்பெயரைக் கண்டவுடன் கொஞ்சம் ஏமாறுவார்கள். ஏன்? அவர்கள் வாங்கி கூறும் 'பகவத்கீதை' வியாக்கியானமோ? அல்லது 'துளசிதாஸ் ராமாயண' வியாக்கியானமோ? அல்லது பாரத, ராமாயண வேத உபநிஷத, இதிகாச, ஸ்மிருதி, புராண வியாக்கியானமோ என்று நினைத்துப்படித்துப் பார்க்கத் தொடங்கிலும் தொடங்குவார்கள் என்று நினைத்தேன். போகட்டும் இனி சங்கதியைச்சொல்லுகிறேன். கவனிக்கவேண்டுங்கள்; கேட்காவிட்டால் நரகம் கிடைக்கும் என்று நாம் சொல்லவில்லை. கேட்காவிட்டால் சோம்பேரிகளிடம் ஏமார்ந்து போவீர்களென்று தான் சொல்லுகிறோம்.

ஆத்மசக்தியாம்! அஹிம்சா தர்மமாம்! சாத்வீகமாம்! சத்தியாக்கிரகமாம்! பிராத்தனையாம்! கடவுள் நம்பிக்கையாம்! இவைகளால் சுயராஜ்யமாம்! இவற்றைக்கேட்டவுடன் நமது 'ஸ்க்ருரூ' அடியோடு 'லூஸ்' ஆகிக்கீழே விழுந்துவிட்டது. ஹா! ஹா! ஹா ஹோ! ஹோ! ஹோ! என்ற சிரிப்பு வருகிறது. நமது வயிறு குலுங்குகிறது. சிரித்துச்சிரித்து வயிறு புண்ணாகிறது. சங்கதியைச்சொல்லாமல் நான்மாத்திரம் சிரித்தால் என்னைப்பைத்தியம் என்று நினைக்கமாட்டீர்களா? ஆகையால் உங்களுக்கும் சங்கதியைச் சொல்லிவிடுகிறேன். நான் என்னவோ சிரிக்கிறேன். ஆனால் நீங்கள் இதைக்கேட்டால் சிரிக்கமாட்டீர்கள் இதைப்பற்றிக்கொஞ்சம் யோசிப்பீர்கள்! அதுதான் நமக்கு வேண்டும்! இந்த நன்மை எல்லா மக்களிடமும் வந்துவிட்டால் இன்றைக்கே சுயராஜ்யம்வரும்! நமது தரித்திரம் போகும். நமது ஜாதிக்கிரமைகள் ஒழியும். எல்லோரும் சமதர்ம உலகத்தில் ஆனந்தத்தாண்டவம் ஆடலாம். இதுசத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!!

ஆத்ம சக்தியால், அஹிம்சா தர்மத்தால், சாத்வீகத்தால், சத்தியாக்கிரகத்தால், பிராத்தனையால்

சுயராஜ்யம் பெற்று விடலாமாம் வெள்ளைக்காரர்களை விரட்டி விடலாமாம். துப்பாக்கிக்குண்டுகளை எதிர்த்து நிற்கலாமாம். தன் நம்பிக்கையுடைய ஆங்கிலேயரைப்பணியவைத்துவிடலாமாம்! இதுதான் இப்பொழுது இந்தியாவில் பாமரரும் உணர்ச்சி இந்திய மக்களில் அநேகரை வசப்படுத்திவரும் வார்த்தைகள் இந்தியர்களில் ஆயிரக்கணக்கானவர்களின் வாழ்க்கையைக்கெடுத்துவரும் சொற்கள்.

ஆத்மசக்தி, சாத்வீகம், அஹிம்சை, சத்தியாக்கிரகம், என்பன என்ன? உச்சியில் கொஞ்சம் வளர்க்கொண்டையை உரைத்துக் கொண்டு யோசியுங்கள். அல்லது கொஞ்சம் பொன்னுக்காணி இலைச்சாற்றத்தேய்த்து முழுகிவிட்டு யோசியுங்கள். அல்லது சந்தனநித்தலம், வெல்லிலகாய்த்தலம், அகைக்கீரை விதைத்தலம், முழுக்கீரைவிதைத்தலம் எதையாவது தேய்த்து மூளையைச் சுத்திபண்ணிக்கொள்ளுங்கள், குளிர்ச்சிபண்ணிக்கொள்ளுங்கள், பிறகு யோசியுங்கள் 'நமது வியாக்கியான'த்தின் உண்மை விளங்கும். சூரியனைப்போல் பிரகாசமாகத்தெரியும்.

நமது வியாக்கியானம் என்ன? மேற்கூறிய எல்லாவார்த்தைகளுக்கும் ஒரேமொத்த அர்த்தமாகச் சொல்லிவிடுகிறேன். அதாவது 'சோம்பேரித்தனம், கையாலாகாத்தனம், ஆண்மையற்ற தன்மை, சண்டித்தனம், குரூட்டுத்தனம்' என்பதுதான். கடுமையான வார்த்தைகளில் அர்த்தஞ்சொல்லுவதற்காகக் கோபித்துக்கொள்ளவேண்டாம். உண்மையான பொருளைச்சொல்லுவதற்காகச்சந்தோஷப்படுங்கள்! நம்மைப்பாராட்டுங்கள்.

இன்னுஞ்சருக்கமாக ஒன்று சொல்லுகிறேன். 'ஆத்மசக்தி' சாத்வீகம், அஹிம்சாதர்மம், சத்தியாக்கிரகம், பிராத்தனை' என்பன 'மதம், கடவுள், மோட்சம், நரகம் இவைகளை நம்பும் மூடநம்பிக்கையின் பிரதிபிம்பங்கள்' என்று சொல்லுகிறேன்.

சில பண்டிதர்கள், சிலவைதீகர்கள், சிலபக்திமான்கள், அதாவது சொந்த புத்தியில்லாதவர்கள், இந்த மூடநம்பிக்கையின் பிரதிபிம்பங்களைப்புகழ்ந்து பேசுகிறார்கள். பண்டைக்காலத்து ரிஷிகள் ஆத்ம சக்தியால் உலகை ஆட்டிவைத்தார்கள் மகாத்மாக்கள் எல்லாக்காரியங்களையும் சாதித்துக் கொண்டார்கள். ஆகையால் நாமும் ஆத்ம சக்தியால் எல்லாவற்றையும் சாதித்துவிடலாமென்று பேசுகிறார்கள். ஆனால் ஒன்றும் முடியப்போவதில்லை என்பது அவர்களுக்கும் தெரியும், நமக்குந்தெரியும்.

ஆனால் நிம்மதியிர் சொந்தபுத்தியில்லாத அந்த 'விக்வகிரோபூஷங்கள்' சொல்லுகின்றதற்கு ஆதாரமுண்டா? உதாரணமுண்டா? அவர்கள் நம்பும் புராண இதிகாசங்களிலிருந்து மேற்கோள்காட்ட முடியுமா என்று கேட்கிறோம். ஆனால் ஆத்ம சக்தியால் ஒன்றும் நடவாது தன்நம்பிக்கையால்—ஆண்மையால்—திறமையால்—முயற்சியால்தான் எந்தக்காரியமும் வெற்றி பெறும் என்பதற்கு நாம் உதாரணம் காட்டுகிறோம். அவர்கள் நம்பும் தெய்வத்தன்மையுள்ளதாகப்போற்றும்— நூல்களிலிருந்தே ஆதாரம் காட்டுகிறோம் கொஞ்சங்கேளுங்கள், சீக்கிரம் முடித்துவிடுகிறேன், எனக்கும் வேலை ராளமாக இருக்கிறது.

இராமாயணம் அந்த வைதீகர்களால்ஒப்புக்கொள்ளப்பட்டதே அதில் ஒரு உதாரணம். இராவணன் யாகங்களுக்கும்,ரிஷிகளுக்கும், தேவர்களுக்கும்இடையூறு செய்தான், துன்பம் செய்தான் அரக்கர்களும் அக்ரமம் பண்ணினார்கள் என்று சொல்லப்படுகிறது அப்பொழுது ஆத்மசக்தியுடைய தேவர்கள், முனிவர்கள், மகாத்மாக்கள் இருந்தார்களே. அவர்கள் ஏன் இராவணன் முதலானவர்களை ஜெயிக்கமுடியவில்லை? காட்டுக்குவந்த இராமனிடம் போய்த்தானே முறையிட்டார்கள்? இராவணுதியர்களைக் கொல்லும்படி வேண்டிக்கொண்டார்கள்.

இராமனும், தன்னுடைய,தன்னுடைய சேனைகளுடைய திறமையால் தானே இராவணுதியர்களை வென்றான்; அவர்களைக் கொன்றான்; இராமன்பெற்றிருந்த வீரமும், தன்னம்பிக்கையும், சரீர பலமும், மனோதைரியமும், முயற்சியும் தானே காரணம்? ஆத்ம சக்தியுடைய சோமபேரி முனிவர்களும், சோம்பேரிமகாத்மாக்களும் என்ன செய்ய முடிந்தது?

இரணியன் கதையைப் பாருங்கள்! பிரகலாதனுடைய ஆத்ம சக்தி இரணியனைக் கொன்றதா? நரசிம்மத்தின் சரீர பலம் இரணியனைக் கொன்றதா? பிரகலாதனின் ஆத்ம சக்தியால் தான்-பக்தியால் தான்-சாத்மீகத்தால் தான்-நரசிம்மன் தோன்றி இரணியனைக் கொன்றான் என்று சீக்கிரத்தில் சமாதானம் சொல்லுவீர்கள்! ஆகவே ஆத்ம சக்தியால் ஒன்றும் முடியவில்லை. அது சரீர பலத்தைக் கொண்டி தான் வென்றது என்பதை நீங்களே ஒப்புக் கொள்ளுவீர்கள்! இதுதன்னால் ஒருவனை அடிக்க முடியாமல்-அதற்குத் திறமையில்லாமல் இன்னொரு ஆளை விட்டு அடிக்கச் சொல்லும் கையாலாகாத் தன்மையைப் போன்றது தானே?

பாரதச் சண்டையைப் பாருங்கள்! ஆத்ம சக்தியால், சேனைகள் மடிந்தனவா? சரீர பல, ஆயுத பலச் சண்டையால் சேனைகள் மடிந்தனவா?

இந்த புராணக் கதையைப் பாருங்கள்! சூரபதுமன் முதலான பலசாலிகளிடத்தில்-தன்னம்பிக்கையுடையவர்களிடத்தில்-முயற்சியுடையவர்களிடத்தில்-வீரர்களிடத்தில் யாருடைய ஆத்ம சக்தி எதிர்த்து நின்றது. கோழைகளான ரிஷிகளின் ஆத்ம சக்தி என்ன பண்ணிற்று? மகாத்மாக்களின் ஆத்ம சக்தி என்ன பண்ணிற்று? ஒன்றும் பண்ண முடிய வில்லையே? கடைசியில் சுப்பிரமணியன் என்னும் வீரன் தானே அவர்களை அடக்கினான். இவ்வுதாரணங்களைக் கொண்டு, ஆத்ம சக்தி என்பது கோழைத்தனமென்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்? அதற்காகவே இந்த உதாரணங்கள். இவையெல்லாம் தெரிந்தும் இன்னும் ஆத்ம சக்தி என்று சோம்பேரி வேதாந்தம் பேசுவது ஏன்?

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க.

துக்கடாக்கள்.

(ரஜிப்ட் எழுதுவது)

காங்கிரஸ் சபைதான் இந்தியாவிற்கு எகப்பிரதிநிதியான சபை என்கிறார்கள். இந்தியாவின் மொத்த ஜனத்தொகைசுமார் 35 கோடி. அதில் கிட்டத்தட்ட சரிபாதி அதாவது 17½ கோடி பெண்களாகும். இவர்களில் லட்சத்தில் ஒருவருக்காவது காங்கிரஸ் என்றால் என்ன வென்றாவது தெரியுமா? பிறகு ஆதிதிராவிடர்கள் (ஆண்கள் மட்டும்) 3½ கோடியாகும். இதில் கோடிக்கு ஒருவராவது காங்கிரஸ் கொள்கைகளை ஒப்புக்கொள்ளுகிறார்களா? மூன்றாவதாக, முஸ்லிம்கள் (ஆண்கள் மாத்திரம்) சுமார் 3½ கோடி. இவர்களில் எத்தனைபேர் காங்கிரசை ஏற்றுக்கொள்ளுகிறார்கள்? நான்காவதாக கிறிஸ்துவர்கள் (ஆண்கள்) சுமார் 3½ லட்சம் இருக்கிறார்கள். இதில் ஒருவராவது காங்கிரஸ் கொள்கைகளை ஒப்புக்கொள்வதில்லை. ஐந்தாவதாக சீக்கியர்கள் 2½ லட்சமபேர் (ஆண்கள்) இருக்கிறார்கள். இவர்களில் காங்கிரசை பொதுஸ்தாபனம் என்று ஒருவர்கூட ஒப்புக்கொள்வதில்லை. இவர்கள் போக 'ஜாதி இந்துக்கள்' என்று சொல்லப்படும் பார்ப்பனரல்லாதாரில் (ஆண்கள் மாத்திரம்) சுமார் 9 கோடி. இவர்களும் காங்கிரசை பொதுஸ்தாபனம் என்று ஒப்புக்கொள்வதில்லை. ஆகவே இவைகளைக்கூட்டி மொத்த ஜனத்தொகையிலிருந்து கழித்துப்பார்த்தால் காங்கிரஸ் இந்தியாவிற்குப்பொதுஸ்தாபனமா இல்லையா என்பதை நீங்களே சொல்லுங்கள்.

ஃ ஃ

காங்கிரசால் இப்போது நடத்தப்பட்டுவரும் சட்டமறுப்பு இயக்கமானது வெகு மும்முரமாக நடந்துவருவதாகச்சொல்கிறார்கள். அதிலும் முக்கியமாக 'அன்னிய'த்துணிக்கடை மறியல் நிச்சயம் வெற்றிபெற்று விடுமென்றும் சொல்கிறார்கள். எல்லாத்தடவைகளைவிட இந்தத் தடவையில் படேபடே ஆசாமிகளெல்லாம் ஜெயிலுக்குப்போயிருப்பதால் நிச்சயம் 'அன்னிய' ஜவுளியெல்லாம் இத்துடன் அடியோடு தொலைந்துபோகும் என்று பேசிக்கொள்கிறார்கள்.

ஆம் ரொம்ப நிஜந்தான், இதுவரையில் காங்கிரஸ் அடைந்த வெற்றிகளைக்கீழே தருகிறோம்.

1. பஞ்சாப்படுகொலைக்கு நிவர்த்தி தேடியாகிவிட்டது.

2. கிலாபத் விஷயத்தில் காங்கிரசுக்கு பெரும் வெற்றி கிடைத்துவிட்டது.

3. தென் ஆப்பிரிக்கா இந்தியர் துயர் தீர்க்கப்பட்டுவிட்டது.

4. 'அன்னிய' பாஷைப்பள்ளிக்கூடங்கள் அடியோடு அடைபட்டுவிட்டன.

5. வக்கீல்களெல்லாம் கோர்ட்டுக்குப்போகாததால் கோர்ட்டுகள் அடைபட்டுப்போய்விட்டன.

6. போலீஸ், ராணுவம் முதலிய உத்தியோகங்களுக்கு இந்தியர்கள் போகாமல் பகிஷ்காரம் செய்துவிட்டார்கள்.

7. 'தீண்டாமை' அடியோடு ஒழிந்துபோய்விட்டது.

8. இந்து முஸ்லீம் ஒற்றுமை அசைக்கமுடியாமல் ஏற்பட்டுவிட்டது.

9. இந்தியாமுழுதும் கதர் கட்டுவதால் 32 கோடி கைராட்டினங்கள் தினம் சுற்றிக்கொண்டேயிருக்கின்றன.

10. கள்ளுக்கடையை மிகவும் மும்முரமாக மறியல் செய்ததின்படியால் சர்க்காரின் கலால் வருமானம் தொலைந்து கள்குடியும் அடியோடு ஒழிந்துவிட்டது.

11. தேசிய பாஷையாகிய ஹிந்தியாஷையை 35 கோடி மக்களும் கற்க ஆரம்பித்துவிட்டதால் 'அன்னிய' பாஷையாகிய ஆங்கிலத்திற்கு மதிப்பென்பதே இல்லாமல் போய்விட்டது.

12. எல்லாரும் தாராளமாய் உப்புக்காய்ச்சும் சுதந்திரம் ஏற்பட்டுவிட்டதால் தினம் லட்சக்கணக்கான உப்புமூட்டைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

13. சென்னையிலுள்ள 'நீல்' (Neil) சிலை இந்தியர்களின் சுயமரியாதைக்கு பங்கத்தை விளைவிக்கக்கூடியதாயிருப்பதால் அதை எடுத்துவிட்டு அந்த இடத்தில் சத்தியமூர்த்தி சிலை வைக்கப்பட்டாய்விட்டது.

இப்போது கடைசியாக 'அன்னிய'த்துணிக்கடை மறியல்கடை பெற்று வருகிறது. இதிலும் சீக்கிரம் வெற்றிகிடைத்துவிடும். கிடைத்தவுடன் தூங்கிய ஜாப்தாவில் இதையும் சேர்த்துக்கொள்ளவும்.

ஃ ஃ

அமிர்தாஞ்சனம் தேசபக்தர் நாகேஸ்வரராவும், தேவதாசித் தலைவர் சத்திய மூர்த்தியும் குட்டிகாந்தி ராஜகோபாலாச்சாரியும் சட்டத்தை எப்படி மீறினார்கள் தெரியுமா? இரவல் மோட்டார் காரில் தண்டுப்பிரசாரம் கொடுத்து நாசூக்காய் அரஸ்ட் செய்யப்பட்டார்கள். ஆனால் நமது பார்ப்பனரல்லாத தோழர்களான முத்துரங்க முதலியாரும், பக்தவத்சலமும் எப்படி மீறினார்கள்? கொடி பிடித்துப் பாட்டுப் பாடி, தடியடி பட்டு, சிறைக்குப் போனார்கள். ஐயோ! பாவம்! காங்கிரஸ் வேஷம் போட்டாலும் நம்ம ஆட்களுக்கு சரியாய்ப் போடத் தெரிகிறதா? நந்தனார் வேஷம் போடுகிறவன் தியாகராஜய்யர் கீர்த்தனை பாடுகிறமாதிரி சக்கச் சக்கமாய் அகப்பட்டு அடி படுகிறார்களே! நம்ம ஆளில் பரம ஏழையாயிருப்பவன் உடம்பு நோகாரிக்ஷா இழுத்தும், விறகு உடைத்தும் சம்பாதிக்கிறான். ஆனால் பார்ப்பனில் பரம ஏழையாயிருப்பவன் உடம்பு நோகாமல் உள்ளிருந்தபடியே, "மூணு பேர்; ஆறரை அணா" என்று சத்தம் போட்டுவிட்டு சம்பாதிக்கிறான். இந்த விஷயம் காங்கிரசில் கூட சரியாய்த் தான் இருக்கிறது. சத்திய மூர்த்தி அய்யர் வீட்டில் கொடியுமில்லை; கிடியுமில்லை. ஜெயிலுக்குப் போக வேண்டியதற்கு 15 நாளைக்கு முந்தியே வீட்டைக் காலி செய்துவிட்டு, வேண்டிய ஏற்பாடு செய்து வைத்துவிட்டுப் போனார். ஆனால் பக்தவத்சலம் வீட்டிலோ, கொடி பறந்து அதைப் போலீசார் இழுத்துப் போட்டு, வீட்டையும் பரிசோதனை செய்து-பிறகு ஜெயிலுக்குப் போனார். எப்படி?—இரண்டு தேசியங்களுக்கும் வித்தியாசம்! "ஆரியன் (பார்ப்பனன்) கூத்தாடினாலும் காரியத்தில் கண்"

ஃ ஃ

போலீசார் மறியல் செய்யும் பெண்கள் மீது தண்ணீரால் அடிப்பது மிகவும் பரிதாபகரமானதாய் இருக்கிறதாம். ஆம்: பெண்களை அங்கே அழைத்துப் போகச் சொன்னது யார்? எந்த தேசத்திலாவது இது வரையில் பெண்களை யுத்தகளத்திற்கு அழைத்துப் போயிருக்கிறார்களா? இல்லை. "புதிதாக அழைத்துப் போவோம்," என்றால், புதிதாக அடிடடுவதும் நியாயம் தானே! படை முகத்தில் ஒப்பாரி எதற்கு? வீரப்பெண்கள் உயிரையும் தியாகம்செய்து மறியல்செய்து "சுயராஜியம்" வாங்கப் போகும்போது, தண்ணீரால்அடிபடுவது என்ன ஆச்சரியம்? ஆனால் போலீஸ்போது பெண்கள் ஆண்களோடு சமமாகப் 'போருக்கு'ப் புறப்படு விட்டார்களோ, அதன் பிறகு அவர்களுக்கு விசேஷசலுகை காட்ட வேண்டுமென்பதில் அர்த்த மிருக்கிறதா? சலுகை காட்டுவதாயிருந்தால் நானேக்கு மறியல்காரர்கள் தங்கள் வீட்டுக் குழந்தைகளைக் கொண்டு வந்து அன்னியத் துணிக்கடைக்கு எதிரில் குமித்து விட்டு, "ஐயையோ! குழந்தைகளைத் தாண்டுகிறார்களே! மிதிக்கிறார்களே! கையைப் பிடித்துத் தூக்கிப் பக்கத்தில் போடுகிறார்களே! தெய்வமே! கண்ணில்லையா? சக்கார் மனது கல்லா! இரும்பா? என்று கூச்சல் போடுவார்கள். உடனே, நமது சட்ட சபை மேதாவிகள் தங்கள் வாய்கிழியப் பேசி அடுத்த எலெக்ஷனுக்கு பொதுஜன ஆதரவு தேடுவார்கள். இதன் என்ன? கல்லுளி மங்கன் வேஷமா? கேலிக்கூத்தா? என்றுகேட்கிறோம்.

ஃ ஃ

மாஜிஸ்ட்ரேட் ஒரு பெண் தொண்டரினுடைய "தாலி"யைக் கேட்டாராம். அதற்காக நாடு பெறுதூளி படுகிறது. இதுதான் சந்தர்ப்ப மென்று தாலிப்பிச்சைப் பிடித்த பல தாலி பக்தர்கள் "ஐயோ! தாலியைக் கேட்டானே! தாலியைக் கேட்டானே!" என்று ஓலமிடுகிறார்கள். உயிரை வெறுத்து மறியலுக்குப் போன பெண்ணுக்கு, "தாலியின்" மேல் வந்த காதலுக்குக் காரணம் தான் விளங்கவில்லை. "காலைப் பிடுங்கிக் கொண்டு செத்து விடுவேன்; ஆனால் கை எச்சிலாய்ப் போகுமென்று பார்க்கிறேன்" என்ற கதையைப் போலிருக்கிறது இந்தத் தாலிக் கூக்குரல் இதுதான் தருண மென்று பலர் தாலியின் "மகாத்மீய"த்தைப் பற்றி பிரசாரம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். "நகையைக் கேட்பது பிழை" என்று சொன்னால் சிறிது அர்த்த முண்டு. அதை விட்டு விட்டு "தாலியைக் கேட்டானே! தாலியைக் கேட்டானே!" என்று சிறுப் பெண்டுகள ஒப்பாரி வைப்பது போல

தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க

ஏஜண்டுகள் தேவை

நமது பத்திரிகைக்குக் கீழ் கண்ட நகரங்களில் டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. மற்ற விபரங்கள் எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

சேலம்.
திருப்பூர்.
பொள்ளாச்சி.
உடுமலைப்பேட்டை.
தஞ்சாவூர்.
கள்ளிக்கோட்டை.
திருவனந்தபுரம்.
ஜோலார்ப்பேட்டை.
நன்னிலம்.
பாமக்குடி.
கரூர்.
திருமங்கலம்.

பிரிண்டர் அண்டு பப்ளிஷர்
"குடி அரசு" ஈரோடு.

குடி அரசு

ஈரோடு 1932 பிப்பரவரிமீ 14உ

உணர்ச்சி வீண் போகாது.

—:0:—

எல்லா மக்களும் தாங்கள் இருக்கும் நிலையை விட்டு இன்னும் உயர்ந்த நிலையை அடைவதற்கே ஆசைப்படுவார்கள். கீழான நிலையை அடைவதற்கு விரும்புகின்ற மனிதர்கள் உலகில் யாரும் இருக்கமாட்டார்கள். கீழான நிலைக்குச் செல்ல வேண்டுமென்னும் கருத்தடையவர்கள் யாராவது இருந்தாலும், அவர்கள் கருத்தும், அதனால் தமக்கு நன்மையுண்டாகும் என்ற நம்பிக்கையைக் கொண்டதாகத்தான் இருக்கக் கூடும். இது மனித சமூகத்தின் இயற்கையாகும். இத்தகைய ஆவலும் முற்போக்குணர்ச்சியும் இருந்த காரணத்தால் தான் மனித சமூகமானது பண்டைக் காலத்திலிருந்த மிருகப் பிராயத்திலிருந்து முற்றும் மாறுதல் அடைந்து தற்கால முள்ள நாகரீகமான நிலைக்கு வந்திருக்கின்றது.

"மனிதன் அறிவுடையவனாகவே படைக்கப் பட்டான்" என்னும் மத வாதிகளின் கட்டுக் கதையைத் தள்ளி விட்டுச் சரித்திர மூலமாகப் பண்டைக் காலத்தில் மக்கள் எந்த நிலையிலிருந்தனர் என்பதை ஆராய்ந்து பார்த்தால் இவ்வுண்மை விளங்கும். மக்கள் உண்டான காலத்தில் அவர்கள் குரங்குகளைப் போலவே மரங்களிலும், மலைகளிலும் வாழ்ந்து, பிறகு தழை மரப்பட்டைகளை எடுத்து, மிருகங்களை வேட்டையாடி உண்டு வாழ்ந்தவர்கள் நாளடைவில், கல்லுடைகளைச் செய்து அணியக்கூடியவர்களாகவும், அகாரங்களைப் பக்குவப் படுத்தி உண்ணக் கூடியவர்களாகவும் இருந்து இடங்களமைத்துக் கொள்ளக் கூடியவர்களாகவும் சிறப்படைந்தனர் என்பது சரித்திர உண்மை.

இத்தகைய மக்கள் எல்லோரும் பண்டைக்காலத்தில் அறிவுடையவர்களாக இருந்திலர். அறிவுடையவர்கள் சிலரும், அறிவில்லாதார்கள் பலருமாக இருந்தனர். இந்த அறிவுடைய சிலரே மற்ற எல்லா மக்களையும் ஒரு கட்டுக்கு உட்படுத்தி அவர்களை யெல்லாம் ஆண்டு வந்தனர். தமது அறிவின் திறமையால் பல சட்டங்களை ஏற்படுத்தி மக்களை அதற்குக் கட்டுப்பட்டு ஒழுகும் படி செய்து வந்தனர். அக்காலத்திலிருந்த அறிஞர்களின் எண்ணம் மிகவும் முன்னேற்ற முடையதாகத்தான் இருந்தது. ஆனால் அவர்கள் எண்ணக் கூடிய எல்லாக் காரியங்களையும் செய்து முடிக்கும் ஆற்றல் அவர்களுக்கில்லை. தற்காலத்தில், ஆகாயத்தில் பறக்கவும், இயந்திரங்களால் ஆகிய மோட்டார் ரயில் முதலிய வைகளை உபயோகிக்கவும், இயந்திரங்களைக் கொண்டு சண்டை போடவும், மனிதர்கள் கண்டு பிடித்திருப்பது போலவே அவர்களுக்கும் இம்மாதிரியான விஷயங்களின் மேல் ஆசை மாத்திரம் இருந்தது. ஆகையால் சாதாரணமாக நடந்து திரிந்த மனிதர்கள், மாடு, கழுதை, குதிரை முதலியவைகளின் மேல் ஏறிக் கொண்டு சவாரி செய்யவும், பிறகு அவைகளை வண்டிகளிற் பூட்டிப் பிரயாணம் பண்ணவும், தண்ணீரில் கட்டைகளை மிதக்க விட்டுக் கொண்டு அதன் மூலம் நீர் நிலைகளைத் தாண்டவும், பிறகு அவைகளைப் பாய்க் கப்பல்களாகச் செய்து கொள்ளவும் தான் கற்றுக் கொண்டார்கள். சரீர பலத்தால் சண்டை செய்தவர்கள் வில், ஈட்டி முதலிய ஆயுதங்களைக் கொண்டு சண்டை செய்யவுந்தான் கற்றுக் கொண்டார்கள். அக்காலத்தில் அவர்களுடைய அறிவினாலும் முயற்சியினாலும் இவ்வளவு தூரந்தான் நாகரீக மடையமுடிந்தது. ஆகவே அதற்கு மேல் உண்டான அதாவது தாங்கள் செய்ய முடியாத எண்ணங்களை யெல்லாம் செய்வதற்கு ஏதோ ஒருபொருள் இருக்க வேண்டுமென்று கருதி விட்டார்கள். அப்பொழுதுதான் "கடவுள்" "தெய்வம்" "வேறுலகம்" என்ற எண்ணங்கள் எல்லாம் உண்டாயின. அவ்வெண்ணத்தின் பயனாகவே சாஸ்திரங்களும் மதங்களும் ஏற்பட்டு விட்டன. அது முதல் மக்களுடைய மனத்தில் உள்ள தன்னம்பிக்கை குறைந்து தங்களுக்குத்தெரியாத ஒரு பொருளின் சக்தியினால் தான், தங்களால் முடியாத காரியங்கள் எல்லாம் கடை பெறுகின்றன என்ற நம்பிக்கையில் வீழ்ந்தார்கள்.

பண்டைக்காலத்தில் ஆகாய விமானம் இருந்ததாகவும் அது பறந்து சென்றதாகவும் இராமாயணத்தில் கூறப்படுகிறது. "மயில் பொறி" என இயந்திரத்தினால் மயில் போல ஒரு வாகனம் இருந்ததாகவும் அதன் மீது ஏறிக் கொண்டு சென்றதாகவும் சீவக சிந்தாமணி என்னும் நூலில் சொல்லப் படுகிறது. மகா விஷ்ணு என்னும் தெய்வத்துக்கு விரோதமாக இருந்த ஒருவன், மகா விஷ்ணுவைப் போலவே சங்கு, சக்கரம், வில், வாள், கதை முதலிய ஆயுதங்களையும், இயந்திரத்தினால் கருடன் போல ஒரு வாகனமும் செய்து கொண்டு அதன் மேல் ஏறி ஆகாய மார்க்கமாக பிரயாணம் செய்ததாகவும் பாகவதம் கூறுகிறது. மற்றும் பல புராணங்களில், கோட்டைச் சுவர்களின் மேல், பகைவர்களுடன் தானே சண்டை போடக் கூடிய அனேக விதமான இயந்திரங்கள் இருந்ததாகவும் சொல்லப்படுகின்றன. ஆனால் இவையெல்லாம் அக்காலத்தில் உண்மையில் இருந்தனவா வென்றால் இல்லை யென்று திடமாகக் கூறலாம். அப்படியானால் இவற்றைப் பற்றிய பிரஸ்தாபம் உண்டாவதற்குக் காரணம் என்ன வென்றால், எண்ணமே காரணமென்று கூறுவோம் இவ்வாறு இருக்க வேண்டுமென்ற ஆசை அக்காலத்தில் அறிஞர்களுக்கு இருந்தது. அந்த ஆசையினாலும், மனோ பாவத்தினாலுமே அதைகள் எழுதி விட்டார்கள் என்பது தான் உண்மை. இவ்வாறே ஒரிடத்திலிருந்து பேசுவதை நெடுந்தூரத்தில் உள்ளவர்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசையும் இருந்தது. இந்த மாதிரியான பல ஆசைகள் இன்றும் சிறு குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை எல்லோருடைய மனத்திலும் இருப்பதைக்காணலாம்.

இவ்வாறு மக்களுடைய மனத்தில்பல காலமாக நிகழ்ந்துவந்த ஆசையே முதிர்ச்சி யடைந்து அதன் பயனாகத் தற்காலத்தில் அவைகளெல்லாம் நிறைவேறி வருகின்றன. ஆகையால் மக்களுடைய மனத்தில் உண்டாகும் முன்னேற்றமான எண்ணங்கள் நாளடைவில் நிறைவேறாமல் போவதில்லை.

இதுபோலவே பண்டைகாலத்திலேயே எல்லா மக்களுடைய அறிவும் வளர வளரப் பல வகையான அபிப்பிராய பேதங்களும் வளரத் தொடங்கின. மக்களை அடக்கியாளும் பொருட்டு அறிஞர்களால் ஏற்படுத்தப்பட்ட தெய்வங்கள், கடவுள்கள், சாஸ்திரங்கள் முதலியவைகளின் உண்மையற்ற தன்மைகளையும் உணர்ந்து வெளிப்படுத்தவும், மக்களுக்கு அவைகளின் மூலம் உண்டாயிருக்கும் பயத்தையும் அடிமைப்புத்தியையும் அகற்றி ஒவ்வொருவரையும் தன்னம்பிக்கையுடையவராகவாழச்செய்யவும் முயன்றனர். இதன் பயனாகத் தோன்றியவைகள் தான் நாஸ்திக மதம், புத்த மதம் சித்தர்களின் கொள்கைகள் முதலியவைகள்.

பொதுவாக அறிவுடைய மக்கள் அனைவரும் தாமே கடவுள், சாஸ்திரம் இவைகளைப்பற்றிச்சிந்திக்கும் போது அவைகள் பொய் யென உணரத் தொடங்கினர். ஆகவே அவர்கள், அவைகளின் கட்டுப்பாடுகளிலிருந்து விலகிச் சுயேச்சையாகவும், சுகமாகவும், கவலையின்றியும் வாழ முயற்சி செய்தனர். நாளடைவில், ஒரு வரை ஒருவர் அடக்கி ஆளுவதற்கும், செல்வமும் சுகமும்உடையவர்கள் எப்பொழுதும் செல்வமும் சுகமும் உடையவராகவே வாழ்வதற்கும், அவையில்லாமல் அடிமையாக இருந்து துன்புறுவோர்கள் எப்பொழுதும் அடிமையாக இருந்து துன்புறுவதற்குமே, நம்மால் ஒரு காரியமும் ஆகாது என்று இருக்கும் சோம்பேரிகளுக்குமே மதமும், கடவுளும் சாஸ்திரங்களும என்ற உணர்ச்சி உண்டானபின் அவைகள் சிறிது சிறிதாக ஒழிந்து வருகின்றன.

"மதங்களையும் சாஸ்திரங்களையும், கடவுளுக்குச் செய்யப்படும் காரியங்களையும் அழிக்க ஒரு கா

லத்திலும் முடியாது. அவைகளுக்கு அழிவு வருகிற காலத்தில் கடவுளே அவதாரம் பண்ணி அவைகளை நிலை நிறுத்துவார்" என்று மத வாதிகள் கூறும் சொல் பொய்யாகப் போகுமாறு ருஷியா போன்ற தேசங்களில் மதங்களும், கடவுள்களும், அவைகளுக்குச் செய்யப்படும் காரியங்களும் இருந்தவிடம் தெரியாமல் போய்க் கொண்டிருக்கின்றன. மக்களுடைய முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கும் மதங்கள், கடவுள்கள், சாஸ்திரங்கள் இவைகளை அழிக்கவேண்டுமென்ற கொள்கை பரவாதநாடு ஒன்றுமேயில்லை. எல்லா நாடுகளிலும் இக்கொள்கையுடைய மக்கள் இருந்து வருகின்றனர்.

இன்னும் சில ஆண்டுகளுக்குள் உலக முழுவதும் இக்கொள்கைகள் பரவி தற்போதுள்ள மதங்களும், கடவுள்களும், சாஸ்திரங்களும், இவைகளின் மூலம் ஏற்பட்டுள்ள உயர்வு தாழ்வு வித்தியாசங்களும் அடியோடு மாண்டொழியும் என்பதற்கு ஐயமில்லை. மக்களுடைய மனதில் உண்டாகும் உணர்ச்சிகள் நாளடைவில் முதிர்ச்சியடைந்து சித்திபெறுவதே இவ்வுலகில் இதுவரையிலும் நடைபெற்று வரும் இயற்கை நிகழ்ச்சியாக இருந்து வருகின்றது என்ற உண்மையை அறிந்தவர்கள் எவரும் நாம் கூறுவதைப்பற்றிச் சிறிதும் ஐயமுற மாட்டார்கள் என்பது நிச்சயம்.

இப்பொழுது, கடவுள், சாஸ்திரம், மதம் முதலியவைகளைப் பற்றிய பயமும், நம்பிக்கையும் யாரிடத்திலிருக்கின்றது என்று பார்த்தால் உண்மை விளங்கும். கல்வி அறிவும், உலக நாகரிக உணர்ச்சியும், பகுத்தறிவும் இல்லாத சாதாரண மக்களிடத்தில் தான் இவைகளைப்பற்றிய நம்பிக்கை இருக்கின்றதே தவிர, வேறு படித்தவர்களிடத்திலோ, நாகரிக மூடையவர்களிடத்திலோ, பகுத்தறிவுடையவர்களிடத்திலோ இவைகளைப்பற்றிய நம்பிக்கையோ பயமோ, இருக்கிறதென்று கூற முடியவே முடியாது. நம்பிக்கையிருப்பதாகக்காட்டிக்கொண்டு, வைதீகர்கள் போல் நடிப்பவர்களெல்லாம், சுயநலத்தினால் பொருளையோ, புகழையோ, பிறரை ஏமாற்றுவதையோ கருதித்தான் அவ்வாறு நடிக்கின்றார்கள் என்று தான் சொல்லவேண்டும். உண்மையில் அவைகளில் நம்பிக்கையுடையவர்களாயிருந்தால், அவைகளில் சொல்லுகின்றபடி நடக்கவேண்டும். இவ்வாறு சாஸ்திரங்கள் சொல்லுகிறபடியோ, மதங்களின்கட்டளையின்படியோ, கடவுள்களின் அபிப்பிராயப்படியோ முற்றிலும் நடந்து வருகின்ற ஒரு மனிதனுவது இவ்வுலகில் இல்லை. ஆகையால் அவைகள் யாருடைய நம்பிக்கைக்கும்உரியதாக இல்லாமையால் அடியோடு அழியக்கூடிய காலமும் தூரத்தில் இல்லை யென்று சொல்லுகிறோம். இவ்வாறு நடைபெறுவது இயற்கையே யாகும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இரண்டு மசோதாக்களின் கதி

இந்திய சட்ட சபையில் இம்மாதம் 4-ந் தேதி நடந்த நிகழ்ச்சிகள், நமது நாட்டுச் சீர்திருத்தவாதிகள் எல்லோராலும் கவனிக்கக் கூடிய தொன்றாகும். அன்று நமது நாட்டுப் பெண்மக்களுக்கு விடுதலையளிக்கக் கூடிய இரண்டு மசோதாக்கள் விவாதத்திற்கு வந்தன. அவைகளில் "விதவைகளுக்குச் சொத்துரிமை" அளிக்கும்மசோதாவொன்று. இம்மசோதா விவாதத்திற்கு வந்த காலத்தில், வைதீகர்கள் இதைப் பற்றிக் கூறிய அபிப்பிராயத்தையும் சென்ற வாரம் எடுத்துக் காட்டிக் கண்டித்திருந்தோம். கடைசியாக இம்மசோதா தனிக்கமிட்டிக்கு அனுப்பப்படாமல் தோற்றது. இரண்டாவது "விவாக விடுதலை மசோதா" ஒன்று விவாதத்திற்கு வந்தது. கடைசியில் இம்மசோதாவைப் பற்றிய விவாதமும் ஒத்தி வைக்கப் பட்டது. இதுவும் "விதவைகளுக்குச் சொத்துரிமை" வழங்கும் மசோதாவைப் போலவே தோற்றுப் போகும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு இந்தியப் பெண்மணிகளுக்குச் சுதந்தரம் அளிக்கும் மசோதாக்கள் தோற்றுப் போவதற்குக் காரணம் என்ன வென்று பார்ப்போம். முதற் காரணம் வைதீகர்கள்; இரண்டாவது காரணம் அரசாங்கத்தார்கள்.

இவர்களில் வைதீகர்களைப் பற்றி நாம் குறை கூறுவதில் ஒன்றும் பயன் உண்டாகப் போவதில்லை. அவர்கள் எப்பொழுதுமே சீர்திருத்தங்களுக்கு மூட்டுக்கட்டைகளாகவே இருந்து தீருவார்கள். பொருள் சம்பாதிப்பதிலும், பட்டம், பதவி பெறுவதிலும் சாஸ்திரம், மதம் முதலிய வைகளைப் பார்க்காமல் எந்தக் காரியங்களையும் செய்யப் பின் வாங்க மாட்டார்கள். ஆனால், அவர்களைத் தவிர, மற்றவர்களுக்கு உண்டாகும் நன்மைகளை மாத்திரம் தடுக்க, முன் வாராமல் இருக்க மாட்டார்கள். பிறருடைய சுதந்திரத்திற்கும், சமவுரிமைக்கும் தடை செய்வதற்காக, மதத்தையும், சாஸ்திரங்களையும் கொண்டு வந்து நடுவில் போட்டு குழப்பம் பண்ணுவார்கள். இவ்வாறே தான் எந்தச் சீர்திருத்தங்களுக்கு முயற்சி செய்கின்ற காலங்களிலும் வைதீகர்கள் செய்து கொண்டு வருகிறார்கள். ஆகவே அவர்களுடைய நோக்கம்சுய நலத்தைத் தவிர வேறு ஒன்றுமில்லை. ஆகையால் சீர்திருத்தம் புரிய விரும்புகிறவர்கள் வைதீகர்களுடைய அபிப்பிராயங்களையும் கூச்சல்களையும் பொருட்படுத்தாமல் தங்களுடைய காரியத்தை நிறை வேற்றுவதில் நோக்க முடையவரா யிருந்தால் தான் சீர்திருத்தம் பண்ண முடியும்.

அடுத்த படியாக அரசாங்கத்தாரும் மேற் கூறிய மசோதாக்களுக்கு ஆதரவு அளிக்காமல் எதிர்த்தார்கள். ஒரு நாட்டு மக்களைச் சீர்திருத்தி அவர்களுக்குச் சுதந்திரத் தன்மையும், சமத்துவத் தன்மையும் உண்டாகும்படி செய்வதற்கு அரசாங்கமே கடமைப் பட்டதாகும். அரசாங்கத்தின் ஆதரவு இல்லாமல் நாட்டில் எந்த விதமான சீர்திருத்தங்களையும் செய்ய முடிய வில்லை. ஒரு தருக்கி தேசத்தை எடுத்துக் கொண்டால் அந்த நாட்டில் இன்று நடைபெற்று வரும் சமூகச் சீர்திருத்தங்கள் எல்லாம் அரசாங்கத்தாராலேயே செய்யப்பட்டு வருகின்றன. இது போலவே ருஷியா, ஸ்பெயின் முதலிய நாடுகளிலும் நடை பெறுகின்றன. மற்றய இங்கிலாந்து, ஜெர்மனி, அமெரிக்கா, பிரான்சு, இட்டாலி முதலிய எல்லாத் தேசங்களிலும் அரசாங்கத்தாராலேயே சமூகச் சீர்திருத்தச் சட்டங்கள் செய்யப் பட்டன வென்பது அறிந்ததாகும். ஆனால் நமது நாட்டு அரசாங்கமோ "நாங்கள் மதத்தில் தலையிட மாட்டோம்" என்று சொல்லிக் கொண்டு வைதீகர்களுக்குச் சாதகமாகவே இருந்து கொண்டிருக்கிறது.

இந்திய அரசாங்கம் இவ்வாறு வைதீகர்கள் கூச்சலுக் கண்டு அஞ்சுவதற்குக்காரணம், அவர்களைத் திருப்தி செய்து விட்டால் அரசியல் கிளர்ச்சி அதிகமாக நடை பெறுது என்று நினைத்திருக்கலாம். உண்மையில் அரசாங்கம் இவ்வாறு நினைத்திருக்குமா யின் அது மிகவும் தவறுனதே யாகும். இதனால் அரசியல் கிளர்ச்சிக்காரர்கள் ராஜ விசுவாசிகளாக மாறி விடப் போவதில்லை. அவர்கள் எப்பொழுதும், அந்தக் கிளர்ச்சியைச் செய்து கொண்டு தான் இருப்பார்கள். இந்தியாவுக்குச் சுயராஜ்யம் கொடுத்து விட்டு வெள்ளைக்காரர்கள் நமது நாட்டை விட்டுப் போய் விட்டாலும், அப்பொழுதும் அரசாங்கத்தாரை எதிர்த்துக கொண்டிருக்கும் ஒரு கூட்டம் நாட்டில் இருந்து கொண்டு தானிருக்கும். ஆகையினால் ஏதோ ஒன்றை நினைத்துக் கொண்டு வேறு ஒன்றைச் செய்வது ஒழுங்காகாது என்று சொல்லுகிறோம்.

அடுத்தபடியாக நமது நாட்டு அரசியல் வாதிகள் சீர்திருத்த விஷயங்களில் எந்த விதமான அபிபிராய முடையவர்களாயிருக்கின்றார்கள் என்று பார்த்தால், அவர்களும் வைதீகர்களின் "வக்காலத்து"க்காரர்களாகத் தான் இருந்து வருகின்றார்கள் என்பது விளங்கும். சீர்திருத்த வாதிகளை ஏமாற்ற, வாய்பேச்சுக்காக மாத்திரம் சுயராஜ்யம் பெற்ற பின் எல்லா சீர்திருத்தங்களையும் செய்து கொள்ளலாம் என்று மாத்திரம் பேசுகின்றார்களேயொழிய சாதாரணமாகச் சீர்திருத்தங்களைப்பற்றிப் பிரசாரங்கள் கூடச் செய்வதில்லை. இவர்கள் கேட்கும் சுயராஜ்யமோ "மதநடு நிலைமை" வகிக்கக்கூடிய சுயராஜ்யமாக இருக்கிறது. இதுமாத்திரம் அல்லாமல் ஒவ்வொரு மதத்திற்கும், மத நூல்களுக்கும், நாகரீகங்களுக்கும், பழக்க வழக்கங்களுக்கும் பாதுகாப்பு அளிக்கக் கூடிய சுயராஜ்யமாக இருக்கவேண்டுமென்றும் சொல்லுகிறார்கள். தற்போதுள்ள வெள்ளைக்காரர் அரசாங்கத்திலாவது, ஜனப் பிரதிநிதிகளாகச் செல்லும் "மெஜாரிட்டி"யான சட்டசபை அங்கத்தினர்கள் சீர்திருத்த நோக்க முடையவர்களாயிருந்தால் எந்தச் சீர்திருத்தச்சட்டங்களையும் நிறைவேற்றக்கூடிய சௌகரியமிருக்கிறது. ஆனால் அந்த அரசியல் வாதிகள் கேட்கும் சுயராஜ்யத்தில் மதக்கொள்கைக்கு விரோதமான எந்த சீர்திருத்த மசோதாக்களையும் சட்டசபையில் கொண்டுவரவேபோமில்லையே. ஆகையால் அரசியல் இது

ர்ச்சிக்காரர்களையும் சமூக சீர்திருத்த விரோதிகளாகத்தான் நாம் நிர்மானமாகக்கருதுகின்றோம்.

இவ்வாறு வைதீகர்களும், சனாதானத்தாரும், அரசியல் வாதிகளும், சமூகச்சீர்திருத்தத்திற்கு விரோதிகளாயிருப்பதனால் சீர்திருத்தக்காரர்கள் யாருடைய தயவையும் எதிர்பார்ப்பதில் பயனில்லை. தம்மைத்தாமே நம்பி ஜன சமூகத்தின் பழய மனப்பான்மைகளை மாற்ற முயற்சிப்பதைத் தவிர தற்காலத்தில் வேறு ஒன்றும் செய்வதற்கில்லை. மக்களுடைய மனத்தைச் சமூக சீர்திருத்தத்தில் மாற்றினால், சட்டசபைக்குச் செல்லும் பிரதிநிதிகளும், சீர்திருத்த நோக்கமுடையவர்களாகவேயிருக்கக்கூடும். அவர்களைக்கொண்டு நாம் விதமான சட்டங்களையும் நிறைவேற்றிக் கொள்ளலாம் என்பதே நமது அபிப்பிராயமாகும்.

"முன்னேற்றம்"

—:0:—

சிங்கப்பூர், பினாங் முதலியவெளிநாடுகளில் நமது இயக்கம் எவ்வளவு தீவிரமாகப் பரவி வருகிறதென்பதும், ஐக்கியசங்கங்கள் உருவான வேலைகள் செய்து வருகிறதென்பதும் நேயர்களறிந்ததே. இத்தகைய இயக்க வளர்ச்சிக்கு அங்கிருந்து தொண்டாற்றி, பிரசாரம் செய்துவரும் நமது இயக்க அபிமானிகளும், பத்திரிகைகளுமே முக்கிய காரணமாகும். தோழர் சரசுவதிபாணி அவர்களால் சிங்கப்பூரிலிருந்து நடத்தப்படும் "முன்னேற்றம்" பத்திரிகையைப்பற்றி நேயர்கள் அறிவார்கள். பல எதிர்ப்புகளுக்கும், கஷ்டங்களுக்குமிடையில் "முன்னேற்றம்" சமாளித்து வளர்ந்து வந்தது. இப்போது அது பெரிய அளவில் அதாவது தாயல் சைசில் 12 பக்கங்களோடு பல சிறந்த கட்டுரைகளுடன், சேதிகளுடனும் வெளிவருகிறது. அதன் முதல் இதழ் வாசகண்டு மகிழ்ந்தோம். திரு. சரசுவதிபாணி அவர்களின் பெருமுயற்சி மிகப் பாராட்டற்குரியதாகும்.

மலேயா தமிழர்களின் சுயமரியாதையை நிலைநாட்டுவதிலும், சீர்திருத்தக்கொள்கைகளை மக்களிடை புகுத்தி, வாழ்க்கைத்தரத்தையும் உற்சாகத்தோடும் "முன்னேற்றம்" தொண்டாற்றி வரப்பெரிதும் விரும்புகிறோம்(

சுயராஜ்யமா? முதலாளி ராஜ்யமா?

"ஜான்புல்" அபிப்பிராயம்.

திரு. காந்தியவர்கள் கோடிக்கணக்கான ஏழை இந்து மக்களுடன் பிரிட்டிஷ் ராஜியத்தை எதிர்த்து ஒரு மதச்சண்டை செய்வதாக இந்நாட்டில் கருதப்படுகிறது. இந்த விதமான வொன்னை மிகவும் பொருத்தமானது என்று இவ்வெள்ளோர்களால் சொல்லப்பட்ட போதிலும் திரு. காந்தியின் மதச்சண்டையே அதாவது இந்திய முதலாளிகள் தாங்கிக் கொண்டு இருக்கிறார்கள் என்ற அபிப்பிராயமும் காணக்கிடக்கிறது. அந்த பெரிய முதலாளிகளின் உதவியில்லாவிட்டால் இந்த சண்டை இவ்வளவு தூரம் வலுத்திருக்காது என்ற அபிப்பிராயமும சொல்லப்படுகிறது. அவர்கள் லட்சக் கணக்காகவும், கோடிக்கணக்காகவும் இந்த சண்டையை நடத்துவதற்கு உதவி செய்யாவிட்டால் இந்தியாவின் நிலைமை இன்று உள்ளபடி ஏற்பட்டிருக்காது என்ற அபிப்பிராயமே இங்கு அதிகமாகக்காணப்படுகிறது. திரு. காந்தியவர்களின் பின் நின்று அவர்களை உதவிக்கொண்டிருக்கிற அவர்கள் யார்? அவர்களுக்கும் திரு. காந்தி அவர்களுக்கும் என்ன சம்பந்தம்? திரு. காந்தி அவர்களை, அவர்கள் நினைப்பது போல் எல்லா விஷயங்களிலும் ஆட்டிவைக்க அவர்களால் முடியுமா? திரு. காந்தி அவர்கள் கருத்தின்படி இந்த இந்திய முதலாளிகள் எப்பொழுதும் நடந்து கொள்ளுவார்களா? இந்தக் கேள்விகள் எல்லாவற்றையும்விட திரு. காந்தியின் அபிப்பிராயங்களை அதிகமாக்கொண்ட காங்கிரசை நடத்திச் செலவதற்கு மிகுந்த பொருள் வேண்டியதாக விருக்கிறது.

காங்கிரஸ் தொண்டர்களுக்கு ஆயிரக்கணக்கான ரூபாய்களை சம்பளமாக கொடுக்க வேண்டியிருக்கிறது. சுதேச சமாச்சாரப்பத்திரிகைகளுக்கு வேறு, பொருளுதவி செய்யவேண்டியிருக்கிறது. அவைகள் இப்பொழுது காங்கிரசைப்பற்றி ஆகரிக்கக் கூடிய விஷயங்களை நன்கு விளம்பரப்படுத்தக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஐரோப்பா அமெரிக்கா முதலிய அந்நியதேசங்களில் காங்கிரசைப்பற்றி பிரசாரம் செய்கிறவர்களுக்கு வேறு பொருளுதவி செயயவேண்டியிருக்கிறது. இதைத்தவிர எத்தனைத்தக்காரணங்களைக்கொண்டோ திரு. காந்தி அவர்கள் காங்கிரசிலிருந்து பொருளுதவி பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவைகளை யெல்லாம் இங்கு எழுதுவதென்றால் முடியாத காரியம்.

திரு. காந்தியவர்களின் பின் நின்று அவரை தாங்கிக்கொண்டிருக்கிற இந்திய முதலாளிகள் தங்களின் நாசபக்திக்காகவே தங்களின் பொருள்களையும் தர்மத்தையும் செலவிடுவதாகச் சொன்ன போதிலும், அந்த இந்திய முதலாளிகளுக்கும் பணக்காரர்களுக்கும் வேறு உட்கருத்து இல்லை என்றும் சொல்லிவிட முடியாது.

ஆகையால் திரு. காந்தியவர்கள் இன்று எதற்காக பாடுபடுகிறார் என்று சொல்லப்படுகிறதோ அதற்காக அவருக்கு மிகுந்த பொருளுதவி செய்கிறவர்களும் உண்மையில் பாடுபடுகிறார்கள் என்று சொல்லிவிட முடியாது. ஆனால் அவர்கள் திரு காந்தியவர்களை ஒரு ஆயுதமாகத்தான் உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்களே அல்லாது வேறு ஒன்றுமில்லை.

இவைகளை யெல்லாம் சுருங்கக் கூறுமிடத்து திரு. காந்தியவர்களை ஆட்டிவைப்பது இந்திய முதலாளி னின் பணப்பெட்டியைத்தவிர வேறொன்றுமில்லை ஆனால் அந்த "மகாத்மா" தான் சம்பந்தப்பட்டவர்களுடன் சேர்ந்து காரியங்களைச் செய்கிறோம், அவர்கள் தனது கொள்கைகளுக்கு எவ்வளவு முரணானவர்கள் என்பதை கவனிக்க வேண்டும். அவர்கள் (இந்திய முதலாளிகளை) இப்பொழுதுள்ள பிரிட்டிஷ் ராஜியத்தை எப்படியாவது தொலைக்க வேண்டுமென்றிருக்கிறார்கள் என்றால் அந்த இடத்தில் சந்தேகமில்லையல்லவா? நாங்கள் உட்கார்ந்து கொள்வதற்கே.

(9-ம் பக்கத்தொடர்ச்சி)

நம் நாட்டு தேச பக்தர் சிகாமணிகள் ஒப்பாரி வைத்து அழுவதைக் காண நமக்கு ஆச்சரியமாகவே இருக்கிறது. "சத்தியாக்கிரக தினம்" "காந்தி ஜயந்தி தினம்," என்பவைகளைப் போல் இதற்கும் இனிமேல் "தாலி தினம்" என்று தேச பக்தர்களின் "புண்ணியதினங்களுடனில் சேர்த்துக் கொள்வார்களென்று எதிர் பார்க்கிறோம்.

பாலியமணத் தடை.

கூர்ஜர சீர்திருத்த சங்கத்தின் முயற்சி.

இரண்டு தினங்களுக்கு முன் அஹமதாபாத் நகரில் 6 வயது பெண்ணுக்கும் 50 வயது கிழவனுக்கும் விவாகம் நடத்த நிச்சயிக்கப்பட்டிருந்தது.

கூர்ஜர சமூக சீர்திருத்த சங்கத்தலைவி திருமதி வித்யா கௌரி தமது வக்கீல் மூலம் இம்மணத்தைத் தடை செய்ய வேண்டுமென்று ஜில்லாக்கோர்ட்டுக்கு மனுக்கொடுக்க, கோர்ட்டார் நடக்க வொட்டாது தடையுத்திரவு பிறப்பித்து விட்டனர். சாதாரண சட்டத்தை மீறி சுமார் 12 கலியாணங்கள் வரை செய்யப்பட்டிருப்பதாயும், அவைகளுக்குச்சட்டமூலமாய் பரிகாரம் தேட வாலிபர்கள் முயற்சி செய்து வருகிறார்கள்.

தூத்துக்குடி.

நிறைவுவிழா:— திருச்சி திரு. மரி எஸ். நீலாவதியம்மையார் தலையில் சுண்முகவேல் ஞாபகார்த்த வாசகசாலையின் 6-வது நிறைவு விழா காங்கேட்டையில் விமரிசையாய் கொண்டாடப்பட்டது. ஸ்திரீகள் பலர் வைபவத்தில் பிரசன்னமாயிருந்தது குறிப்பிடத்தக்கது. அவைத்தலைவிக்கு வாலேற்புப்பத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டபின்வருஷாந்திர அறிக்கை காரியதரிசி திரு. பெ. ரா. பெரியசாமியால் சமர்ப்பிக்கப்பட்டது. காலஞ் சென்ற திரு. சுண்முகவேல் தாடாரின் புத்திரி திருமதி மீனாம்பாள் "பெண் கல்வி" என்னும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றினார். இதையடுத்து இருபிரசங்கங்கள் நிகழ்ந்தபின் கூலவர் முடிவுரையுடனும் வந்தேமாதரத்துடனும் விழா பூர்த்தியாயிற்றென ஒரு நிருபர் எழுதுகிறார்.

விருதுநகர்.

சுயமரியாதைத்திருமணம்:— 8-2-32 தேதி காலை 11 மணிக்கு திரு. பி. பி. வி. திருவண்ணுமலையின் சகோதரர் திரு. வையாபுரிக்கும், திருமதி மனோன்மணி தம் அம்மாளுக்கும், சுயமரியாதைக்கொள்கைப்படி சிங்கனேந்தல் டன் சீர்திருத்தத்திருமணம் திரு. வி. வி. இராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் பல சுயமரியாதை பிரபலஸ்தர்கள் வந்திருந்தார்களென ஒரு நிருபர் எழுதுகிறார்.

நான் யார்?

(விகடை)

I.

நான் பெரிய "தேசபக்தன்" எனக்கு உத்தியோகம் ஆசையே கிடையாது. ஆனால் எனக்கு மாதம் வேறு தொழிலில் மாதம் 2000 ரூபாய் வரும். எனது தம்பி, முதலிய நெருங்கிய சுற்றத்தார்களுக்கு சர்க்காரில் பெரிய பெரிய வேலைகள் சம்பாதித்துக் கொடுப்பதே எனது பொது வாழ்வின் லட்சியம். எனக்கும் காந்தியாருக்கும் வெகு ஸ்நேகம். ஆனால் எனது கொள்கை அவருக்குப் பிடிக்காது. அவர் கொள்கை எனக்குப் பிடிக்காது. நான் தன்னைப்பற்றி விசேஷமாய் எழுதுவேன்; ஆனால் நான் கட்டமாட்டேன். சில சமயங்களில் மாத்திரம் சாரியார்த்தமாகக்கட்டுவேன். காந்தியாரை எப்படி ஏமாற்றுவதென்பது எனக்குத் தெரியும். அதுவுமல்லாமல் அவர் என்னை விரோதம் செய்து கொள்ளவே முடியாது. செய்தால் தென்னாட்டில் காலடி எடுத்து வைக்க முடியாமல் பண்ணிவிடுவேன்; பண்ணியும் இருக்கிறேன். எப்படியென்றால் என் பொருப்பில் 2 பெரிய ஆயுதங்கள் வைத்திருக்கிறேன். அவைகள்வேட்டைநாய்களைப்போல எதிரியின்மேல்சீறிவிழும்.காந்தியாரும்ஒருபக்கமிருக்கம்; சர்க்காரும் ஒரு பக்கம் இருக்கம். சர்க்கார் காந்தியார் விஷயத்தைப்பற்றிக் கேட்டால் கண்ணைச் சிமிட்டி விடுவேன். நான் சட்டமறுப்பு இயக்கத்தை மறைமுகமாக ஆதரிப்பதுபோல் இருக்கும் ஆனால் சட்டத்தை மீற மாட்டேன், சர்க்கார் அடக்குமுறையையும் கண்டிப்பேன். கண்டிப்பதென்றால் காசுக்காய் வழ வழவென்றளைந்திடுவேன். ஜனங்களும் என்னை தேச பக்தர்கள் என்று சொல்லி விடுவார்கள். படித்தவர் முதல் பாமரர் வரையிலுள்ள பார்ப்பனரெல்லாம் என்னையே ஆதரிப்பார்கள். தேர்தலுக்கு நின்று நான் தோற்றதே கிடையாது. தோற்கவும் மாட்டேன். தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள முழு மூடர்களான பார்ப்பனரல்லாத மிராசுதாரர்களில் பலரை என் கையில் போட்டு வைத்திருக்கிறேன். தேர்தல் என்றால் அவர்களே வேலை செய்து விடுவார்கள்.

நான் வைத்திருக்கும் 2 வேட்டை நாய்களும் உஸ்மான்சாகிப், ஜஸ்டிஸ் கட்சி முதலியவர்கள் மீது ரூ பிடித்து விட்டால் விடாமல் கொலைத்துக்கொண்டேயிருக்கும் ஜூனி 2 நாய்களும் சர்க்காரிடத்தில் சிநேகமாயிருப்பதற்காக ராஜாங்க 'டிரேட் மார்க்" போட்டிருக்கிறேன். சர்க்கார் மிரட்டினால் டிரேட் மார்க்கைக் காட்டுவேன். காங்ரஸ் காரன் மிரட்டினால், "எழுதியிருப்பதைப் படித்துப்பார்" எனவேன். "அன்னிய காட்டுக்காரன்களை பகிஷ்கரிக்க வேண்டு" மென்று உள்ளே எழுதவேன். வெளியே "ஸ்பென்சர்", "ஹாரிட்வே" முதலிய கம்பெனிகளின் விளம்பரம் போடுவேன். இவர்கள். கேட்டால் அதைக்காட்டுவேன்; அவர்கள் கேட்டால் இதைக்காட்டுவேன். காங்கிரஸ் காங்கிரஸ் என்று கூச்சல் போடுவேன். தபால் மோட்டார் (போண்டல் வான்) கண்டாக்டர் எடுப்பேன். காந்தியைப் புறக்கணித்து விடுவேன்; பிறகு அவசரமாக போய் தெரிஞ்சுமுள் மாதிரி அப்பிக்கொள்வேன். என் ஜாதியானில் எவனுவது ஒருவனுக்கு சர்க்கார் தீவுகு இழைத்து விட்டால் பார்லிமெண்டு வரையில் கூப்பாடு போட்டுக் கதறுவேன். சர்க்காரோடு ஒத்துழைக்காதது போல் பேசுவேன்; எழுதுவேன். ஆனால் இட்லாவுக்கும் வீட்டிற்கும் சதா காங்கிரசுத்தொங்கவிட்டுக்கொண்டு ஓடிக்கொண்டேயிருப்பேன். எதாவது ஒன்முயற்சியில் தவறிப்போய் விட்டால், "சீ! இது வேண்டாம்", என்று பகிரங்கப்படுத்தி விடுவேன். நாட்டில் ரெம்பவும் நெறுக்கடியான விஷயங்கள் நடந்து கொண்டிருக்கும் போது, "மடகாஸ்கர் தீவிலுள்ள பொருளாதார நிலைமை" என்று எழுதி விடுவேன். எனது ஆபீசில் சர்க்கார் C I D யை வைத்து, வெகு ஜாக்கிரதையாகப்பத்திரிகை நடத்துவேன்; ஆனால் "தேசிய அச்சுக்கூடம்" என்று பெயர் வைத்திருப்பேன். ..... இன்னும் லக்ஷம் வேலைகள் உண்டு. அவைகளைச்சொல்லமாட்டேன். அவைகளைச் சொல்ல மாட்டேன்,

இப்போது சொல்லுங்கள் நான் யார்என்பதை?

விவாக விடுதலை சட்டம்.

பாரசீக மாதர் முயற்சி.

மிக முக்கியமான ஒருவிஷயத்தை வண்ணுக்கு விவாக விடுதலை உரிமையளிப்பதைப்பற்றியதாகும்.

இதுவரையில் பாரசீகத்தில் புருஷர்களுக்கு மட்டுமே விவாக விடுதலை உரிமை இருந்து வருகிறது.

பார்லிமெண்டில் கொண்டு வரப்பட்டிருக்கும் மசோதா சட்டமாக்கப்பட்டு விட்டால் தமக்கு இஷ்டமான போது விவாக விடுதலை செய்து கொள்ள பெண்களும் உரிமை பெற்றுவிடுவார்கள்.

அந்தச் சட்டம் அமுலுக்கு வரும் போது புருஷர்களும் கற்புடையவர்களாக இருந்தாதான் நிலைக்கும்.

கலியாண வயது வந்தப்பெண்களை வைத்திருக்கும் தேசாபிமானிகளும் ஆதரிக்கத் தொடங்கி விட்டார்கள்.

மசோதா சட்டமாகி அமலுக்கு வருமுன்னமேயே இளம் பெண் மணத்தை, போலீசார் உதவி கொண்டு பொது ஜனங்கள் நடத்த ஆரம்பித்து விட்டார்கள்.

அநேகர்கள் இரு பெண்ணுக்கு கலியாணம் செய்யக்கூடாதென்று சட்டம் செய்து விட்டார்கள்.

சட்டத்தை நிறை வேற்றவும், உடனே அமுலுக்குக் கொண்டு வரவும், பாரசீகமாதர் தீவிரமாய் உழைத்து வருகின்றனர்.

சுயமரியாதை இயக்க அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்.

நமது இயக்கத்தைத்தமிழ் நாட்டில் பரப்ப தமிழ் பத்திரிகைகள் உழைத்து வருவதுபோல், ஆந்திரநாடு, பாஞ்சாலம், வங்காளம், அமெரிக்கா முதலிய நாடுகளில் உள்ள மக்களிடம் பரப்புவதற்கு "சுயமரியாதை" (Self-Respect) என்னும் பெயருடன் ஒரு ஆங்கில வாரப்பத்திரிகை நடத்த நமதுசுயமரியாதை இயக்கத்திலுள்ள பெரியார்களிற் சிலர் எற்பாடு செய்து பணமும் ப்ராயங்களையும் எழுதி கேட்டுக் கொண்டு வருகிறார்கள். பத்திரிகை ரிஜிஸ்டர் செய்யப்பட்ட லிமிடெட் கம்பெனியால் பொறுப்புவாய்ந்த டைரக்டர்களின் நிர்வாகத்தில் நடத்தப்படும். ஆசிரியர் கழகம் (Editorial Board) ஒன்று நிறுவப்படும். பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப் அவர்கள் நிர்வாக ஆசிரியராக இருப்பதாக ஒப்புக் கொண்டுள்ளார்கள். பத்திரிகை காகிதம் சைஸில் 8 பக்கங்களாகவும் தனிப்பிரதி அரையணாவும் வருட சந்தா ரூ. 2—4—0 ஆகவும் நிச்சயமாக்கப்படும். இது சம்பந்தமாக ஒவ்வொருவரும் தங்கள் அபிப்பிராயங்களை 20—2—32க்குள் எனக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறேன். அன்று நடக்கும் கூட்டத்தில் முடிவு செய்யப்படும். பத்திரிகை ஏப்ரல் மாதம் முதல் வெளிவரும்.

A. S. அருணாசலம்,
C/o சுயமரியாதைச்சங்கம்,
146 கீழமாசி வீதி மதுரை.

மதுரை.

சுயமரியாதை சங்கம்:— இவ்வூர் சுயமரியாதைச் சங்கத்தில் ஒரு பொதுக்கூட்டம் 9.2.32ல் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு திரு. பி. இரங்கசாமி பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமை வகித்தார். அதுசமயம் திரு வாளர்கள் நீலாவதி, ராமசுப்பிரமணியம் முறையே மதமும் மக்களும் என்பதுபற்றியும், 'சுயமரியாதை' இயக்கம் என்பது பற்றியும் பேசினர்கள். பின் திரு எஸ். வி. தொக்தி அவர்கள் மக்கள் நிலை என்பதுபற்றி பேசினர். பின் தலைவர் முடிவுரையாக சீர்திருத்தம் என்பது பற்றி பேசியபின் கூட்டம் கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

(8ம் பக்கத் தொடர்ச்சி)

"மகாத்மா"வின் ஆத்ம சக்தி, சத்தியாக்கிரகம், அஹிம்சா தர்மம் இப்பொழுது உலகத்தை ஆட்டி வைக்க வில்லையா? என்று கேட்பீர்கள்? "இல்லை, இல்லை, இல்லை" என்று மலையுச்சியில் நின்று கொண்டு சத்தியம் பண்ணுவேன். பிறகு எதனால் அவருடைய வார்த்தையை ஜனங்கள் என்று கேட்பீர்கள்! அதற்கு நான் சொல்லும் பதில், மக்கள் மூட்டாள் தனத்தினால் மகாத்மாவின் வார்த்தையை நம்புகிறார்கள். பூதம், சாமி, மோட்சம், நரகம், ரிஷி, மகாத்மா, சந்நியாசி இவற்றை நம்பியிருக்கும் குருட்டுத் தனத்தினால் மகாத்மாவின் வார்த்தைகளை நம்புகிறார்கள்" என்று தான் சொல்லுகிறேன். மக்கள் மனத்தில் குருட்டு நம்பிக்கை ஒழிய வேண்டும், மத நம்பிக்கை ஒழிய வேண்டும், ரிஷி நம்பிக்கை, மகாத்மா நம்பிக்கை ஒழியவேண்டும். பகுத்தறிவு வளர வேண்டும். இப்படியானால், மகாத்மா கூறும் சோம்பேரித்தனமான வார்த்தைகளைக் கேட்டு மக்கள் ஏமாற மாட்டார்கள் என்பது உறுதி! உறுதி!! உறுதி!!!

ஆகவே அஸ்ப்ருசியை நாம் விரட்ட வேண்டுமானால் அதற்குச் சாத்மீகம் ஒரு காலும் துணை செய்யாது; ஆத்ம சக்தி ஒருக்காலும் உதவி செய்யாது. பிறகு எது உதவி செய்யும்? தன்மானம், உதவி செய்யும், வீரத் தன்மை உதவி புரியும், என்று சொல்லுகிறோம். "தெய்வீகம்" என்ற நினைப்பையே ஒழியுங்கள்! சாதி வேற்றுமைகளை ஒழியுங்கள்! அதை அறுபதடி ஆழமாகக் குழி வெட்டி அதில் போட்டுப் புதையுங்கள்! அல்லது "ஜட்லாண்ட்டிக்" சமுத்திரத்தில் எறியுங்கள்! சாஸ்திரங்களை யெல்லாம் சுட்டுப் பொசுக்குங்கள். அல்லது தனித் தனி எடுகளாய் எடுத்துத் துண்டு துண்டாகக் கிழித்துப் பல் பொடி மடிக்க வைத்துக் கொள்ளுங்கள். அல்லது நாட்டு வைத்தியர்களிடம் கொடுப்பீர்களானால் அவர்கள், பூரம், வீரம், லிங்கம், தாளகம், மூதலிய சென்தூரங்களை மருந்துக்குக் கொடுக்க வைத்துக் கொள்ளுவார்கள்! சமயம் மென்ற பைத்தியத்தை நீக்கிக் கொள்ளுங்கள்! பகுத்தறிவு என்ற மருந்தை உட்கொள்ளுங்கள்! சமயப் பைத்தியம் தானே ஒழியும் சுரக்காயைக் கூறுனால் ஜாதியும் மதமும் தொலைத்தால் ஒழிய அந்நியர் நமது நாட்டை விட்டுப் போக மாட்டார்கள்!

நாம் ஒற்றுமை யுடையவர்களாகி விட்டால் வீரர்களாகி விட்டால் நமது நாட்டை அன்னியர் படையெடுப்பிலிருந்து காப்பாற்றக்கூடிய நிலைமை பெற்று விட்டால் வெள்ளைக்காரர்கள், நாம் கேட்காமலே நம்மிடம் பொறுப்பை ஒப்பித்து விடுவார்கள். இன்று நாம் சுயராஜ்யம் கேட்கும் போது, நமது நண்பர் 'சர்ச்சில்" என்ன சொல்லுகிறார்! நமது நண்பர் "சர், கிரேட்" என்ன சொல்லுகிறார் என்று கவனித்தீர்களா? விரோதிகள் என்று அவர்கள் வார்த்தையை அலட்சியம் பண்ணுதீர்கள், உங்கள் சாத்மீகத் தன்மையைக் கொண்டு கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்? "நீங்கள் ஜாதி வேற்றுமையை ஒழித்து விட்டீர்களா? உங்களுக்குக் கீழிருப்பவரையும் உங்களைப் போல் மனிதராக நினைக்கிறீர்களா? உங்கள் மதச் சண்டைகள் ஒழிந்தனவா? இவற்றை ஒழித்து நீங்களெல்லாம் ஒற்றுமையாக இருக்க எதாவது தான் செய்தீர்களா? இன்னும் ஒரு வருஷ கொருவர்சாதியினரும், சமயத்தினரும் மயிரைப் பிடித்துக் கொண்டு தெருவில் கிடந்து கொண்டு புரளுகிறீர்களே! உங்களுக்கா சுயராஜ்யம்?" என்று தானே சொல்லுகிறார்கள்? இதைக் கேட்டதும் உங்களுக்கு வெட்க மிருந்தால் நகத்தைப் பிடுங்கிக்கொண்டு சாக வேண்டாமா? மானமுள்ளவர்களைப் போல நடந்தால் சுயராஜ்யம் ஆளத் தெரியும். என்ன "பூரண சுயேச்சை" கேட்கிறீர்களே!

ஏ சோம்பேரிகளே! இன்னும் ஆத்ம சக்தியையும், பிரார்த்தனையையும், சத்தியாக்கிரகத்தையும் தெய்வீகம் என்று நம்பிக்கொண்டிருக்கிறீர்களே! "கேழ்வரகில் நெய் வடிகிற தென்னால் கேட்பாருக்கு மதியில்லையா?" என்பது நமது நாட்டுப் பழமொழி. இது உங்களுக்குத் தெரியாதா? ஆகையால், இன்னும் ஏன் சோம்பேரியாகிறீர்கள்! வீணாக உங்கள் வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்ளுகிறீர்கள்?

ஆத்ம சக்தி பிரார்த்தனை சோம்பேரிப் பேச்சை இன்றே விட்டு விடுங்கள்! நாட்டு மக்களுக்குப் பகுத்தறிவும், தன்மானமும், ஒற்றுமையும், வீரத்தன்மையும், உண்டாவதற்கான வழியைத் தேடுங்கள்! இவைகளைப் பிரசிட்டிஷ் ஆசாங்கத்தின் உதவியைக்கொண்டே தேடிக்கொள்ளுங்கள்! பிறகு நீங்கள் சுதந்திரம் பெறலாம் என்று சொல்லுகிறேன்.

'நாளைக்குக்கிடைக்கும் பலாக்காயைவிட இன்றைக்குவரும் களாக்காய் நல்லது' என்பதை உணருங்கள்! வட்டமேஜை மகாநாட்டுமீட்டிங்களுடன் ஒத்துழைத்து வருவதைப் பெற்றுக் கொள்ளுங்கள்! அதன்பின் இந்திய சமூகத்தைத்திருத்தி அமையுங்கள்! சுயமரியாதை உள்ள பிரஜைகளாக்குங்கள்! வீணாக்கொதிக்கும் இயக்கத்தில் கலக்கவேண்டாம்! இருக்கும்மூட நம்பிக்கைகள் போதாதென்று இன்னும்பல மூடநம்பிக்கைகளை உண்டாக்கும் சத்தியாக்கிரக இயக்கத்தில் கலக்கவேண்டாம்; நாட்டை விண்ணரசுக்குத் திற்கு இளாக்கவேண்டாம்; என்று நான்சொல்லுகிறேன். 'ஸ்க்ருரூடேஸ்' தானே என்று என்வார்த்தையை அலட்சியம் பண்ணுதீர்கள்! 'பைத்தியக்காரன் கிழிப்பதும் கௌபீனத்திற்கு உதவும்' என்றுநினைத்துக்கொள்ளுங்கள்! ஆடே அப்பா! எனது நாவும் அலுத்து விட்டது! வந்தனம். பிறகு சந்திக்கிறேன்.

திருச்சேந்தூர் சுயமரியாதைத்திருமணம்.

புதன்கிழமை காலை திருவாளர் நேட்டிவ் டாக்டர் நயினார் அவர்கள் சகோதரர் மாட சாமி அவர்கள் குமாரர் திரு. திரவியத்திற்கும் வண்ணார்பேட்டை திருவாளர் பலவேசம் அவர்கள் குமாரத்தி சுப்பம்மாளுக்கும், திருவாளர் டாக்டர் சங்கரசுப்பு அவர்கள் தலைமையில் பிராமணீயத்தை ஒழித்து சுயமரியாதை திருமணம் நடந்தேறியது. பின்பு எல்லோருக்கும் சமபந்திபோஜனம் அளிக்கப்பட்டது. அன்று மாலை 7-30 மணிக்கு டாக்டர் சங்கரசுப்பு அவர்கள் அவைத் தலைமையின் கீழ் ஓர் கூட்டம் நடந்தது. அதில் பாளையங்கோட்டை திரு. பி.பாலையா அவர்கள் முன்னாலத்தில் ஆபாசமாய் நடந்த திருமணத்தை ஒழிக்கவேண்டுமென்றும் பழம்வழக்கங்களை ஒழிக்கவேண்டுமென்றும் பல உதாரணங்களுடன் சொற்பொழிவாற்றினர் அதன்பிறகு தலைவர் அவர்கள் முடிவுரையாக 9-மணிக்கு கூட்டம் இனிது கலைந்ததென ஒருநிருபர் எழுதுகிறார்.

திருப்பூர் டி. மு. கோர்ட்டு

1931வது அசல் நெ. 844.

ஈரோடு தாலூகா செங்கப்பள்ளி கிராமம் செட்டியாளையத்திலிருக்கும் கொளத்தவேலு செட்டியார் குமாரர் சுப்பராய செட்டியார்—வாதி.

இப்போது மதுரை ஜில்லா பட்டிக் கோட்டையிலிருக்கும் நிதம்பரம் பிள்ளை மகன் அருணாசலம் பிள்ளை—7ம் பிரதிவாதி.

மேலே நெம்பர் 7ம் பிரதிவாதிக்கு தெரிவிப்பதாவது:—

மேலே வாதியானவர் கருப்பண செட்டியார் எழுதிக்கொடுத்திருக்கும் 9—10—18 தேதி அடமானப்பத்திரப்படி ரூ. 3000க்கும் பின் வட்டிக்கும் செலவுக்கும் தாவா செய்து அது இப்போது மேலே கோர்ட்டில் 2—3—1932ல் வாய்தா ஏற்பட்டிருக்கிறது. மேலே வாய்தாவில் மேலே 7ம பிரதிவாதி நேரிலாவது வக்கீல் மூல்யமாகவாவது ஆஜராகி மேற்படியை தெரிவிக்காவிடில் ஒரு கட்சியாய் தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

S. ராஜம் அய்யர் B. A., B. L.,
வாதியின் கவுன்சல்.

திருப்பூர், 11-2-32.

குழந்தைகள், பற்றி ஜோக்ஸ்,

சரீரசுகத்தை, உடல்வளர்ச்சியை, ஆரோக்கியத்தை, நோயின்மையை, தேக புஷ்டியை விரும்பும்

எங்கள் மருந்தை ஒரு முறை வாங்கிப் பரீட்சத்தால் உண்மை விளங்கும். பரம்பரையாய் குழந்தை வைத்தியத்தில் கியாதி வாய்ந்ததும், அறிவின்மையால் எற்படும் அதிக அகால சிசுமரணங்களைத் தவிர்த்துப் பெற்றோரைக் களிப்பித்து இன்புமூட்டியதும் நற்புகழ்ச்சி பென்றுல், ஒரு முறை எங்கள் வைத்தியசாலையை பார்வையிடுங்கள். உண்மை விளக்கும்.

சி பி. சாமி,
நித்யானந்த வைத்தியசாலை,
பழனி, S. I.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

பார்ப்பனரல்லா இளைஞர்களே! பயனுண்டா?

(ஆர். கே. பெருமாள்)

தோழர்கள், அன்றும், இன்றும், என்றும் எவராலுங் கண்டுங் காணவும் இயலாததும் இல்லாததும், எவனே, எண்ணுளோ, கட்டிவிட்ட ஒன்றும், கடவுள் போல் கல்லுக்கும், கட்டைக்கும் பல கோடி, மண்ணுக்கும், மரத்துக்கும் பல கோடி, நிலத்துக்கும் நீருக்கும் பல கோடி, இருப்புக்கும் நயத்தக்கும் பல கோடி, பாழாக்கும் நம் இந்தியாவை-தாயுடன் தமக்கையுடன் தங்கையுடன் தானீன்ற மகளுடன் படுத்தின்பம் துய்த்த தடியர்களைத் தகைமை சான்றோர் என்றும், கொண்ட துணைவியரைமுடக்கூலிக்கு விட்ட கோவணதாரிகளையும், பட்ட கடன் தீர்க்க வழியின்றி பாரியை, பாலனை விற்ற பாவிகளையும், தானீன்ற சிசுவை உரலிலிட்டு உலக்கை தீட்டி கசக்கிப் பிழிந்த கயவத்தாய் தந்தையரையும், நிராயுதர்களாம் பல்லாயிரம் பெயரைப் படுகொலை புரிந்த படுபாதகக் கொலைஞர்களையும், கொஞ்சமும் கூசாது, மானம ஈனம் மரியாதை மருந்துக்குமின்றி, மகாத்துமாக்கள், ஆத்மஞானிகள், அவதார புருடர்கள் எனப்போற்றிப் புகழும், பொய்ச்சுவடாம் புராணக் குப்பையை மோப்பமிட்டலேயும் மொந்தை மூளைகளின் மந்தையாம் இந்தியாவை-மக்களில் ஒரு சாராரைத் தொட்டால் தீட்டு, பார்த்தால் பாவம் என்ற பாழும் வழக்கங் கொண்ட பாதகர்கள் வாழும் நம் இந்தியாவை-ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதி வகுத்த பெண்ணடிமை கொண்ட, பேயர்கள் நிறைந்த இந்தியாவை-மதம் மதம் என மாரடித்து, மண்டைகளுடைந்து உருண்டு, மக்களை மாக்களாக்கும் மதியிலிகள் மிகுந்த இந்தியாவை-இன்னோன்ன இன்னுயின்னப்பட்டு, சீரழியும் இந்தியாவை-பாழும் இந்தியாவை-பயகர இந்தியாவை - மட்டி இந்தியாவை - மயக்க இந்தியாவை-மாற்றார் கைப்பற்றி ஆட்சி புரிவதில் அதிசயம் யாதுளது? நம்மை உலகு, மனிதராக மதிக்க வேண்டு மென்றால், நாம் மனிதர் என்ற உணர்ச்சி உண்மையில் உள்ளவரென்றால், நாம் விதிகளை வேட்டை கொண்டவரென்றால், நமக்குள், எவராலும் எப்பொழுதும், பிரிக்க முடியாத அத்துணை சமத்துவம், சகோதரத்துவத்தோடு கூடிய, ஒற்றுமை வேண்டும்; அவ்வொற்றுமை ஒளியை ஒழித்து, வேற்றுமை இருளை மிளிரச் செய்வது, ஜாதி. அச்சாதியை வளர்ப்பது பாழும், மதம். ஆகவே, அக்கொடிய, மதத்தை அடியுடன் அழித்தால் ஒழிய-அழுக்குத் தொண்டில் ஆக்கங் கொண்டிபட்டாலொழிய-இந்தியா என்றென்றும் மாற்றார்க்கடிமைப் பட்டு, மதியிழந்து வலியிழந்து-மிகியுண்டு என்றும், எனாலும், எழுப்ப வலாத இருட்குழி புக நேரிடுமெனக் கொண்டே நம் ஈரோட்டேந்தல் எந்தமிகு, ராமசாமியார், அறிவும் ஆற்றலும் செறிந்திலங்கும், சுயமரியாதை இயக்கம் கண்டு கம் தென்னுலி சம்பந்தப்பட்ட மட்டிலும், மக்களைப் பீடித்துள்ள பெரும் பிணியாம், சாமி, சமய, சாதியகைனையும், தீண்டாமை, பாராக்காமை, தெருவில் நடவாமை, போன்ற பாதகப்பழக்க வழக்கங்களையும், தவிடு பொடியாக்கி, உண்மை விடுதலைக்கு வித்திட்டு வரும் இந்த நல்ல சமயத்தில், சின்னக் கருப்பனே, பெரிய கருப்பன் ஆகிலுன் என்பதிற்கேற்ப மக்களை மீண்டும் என்றும் மீளாக் குழி புகுத்த வல்லதாம் வருணாசிரமத்தை வளர்க்கும் தொழிலாம், கதர், காங்கிரசு, தேசம், சுய அரசு என்ற புரடகளாலும் மதத்திறக்கைப் பெருக்கவும காங்கிரசால் இன்று கனத்த போர் ஆரமபிக்கப்பட்டு அவற்றால் இந்தியா மக்கள் அடையும அல்லோல கல்லோலதனை அளவிடுரைக்க எவராலும் மூடியாது. காங்கிரசால் ஆரமபிக்கப் பெற்ற அரசியல் சண்டமினாச்சியால் நம் பார்ப்பனரல்லா மக்கள் காணும் பயனுண்டா? பயனில்லை எனாலும் பழுதாகிலும் இல்லாதிருக்க இயலுமா? அடி அறுபது கோணலும், நுனி நூறு கோணலுமுள்ள காங்கிரசின் காசக்குதவா, அரசியல் இளாச்சியால், நம் பார்ப்பனரல்லா மக்கள், பாதிக்கப் பெறுவதை என்னனுபவங் கண்டதில் சில வற்றை அடியில் தருகின்றேன்.

அரசியலின் பேரால் பிச்சை எடுப்பது நாம்; பிழைப்புக்கு வழிகோலிக் கொள்வது பார்ப்பனர். வயோதிக தாய் தந்தையரை வயிறு எரியவிட்டுப் பிரிவது நாம; வர்ணாச்சிரமத்தை வளர்க்கப் பார்ப்பது பார்ப்பனர். மனைவி மக்களைத் தெருவில் திண்டாட விடுவது நாம்; மலர் துவிய மஞ்சதில் கொஞ்சிக் குலாவுவது பார்ப்பனர். சிறை சென்று செக்கிழுப்பது நாம்; சேவகா விருத்தியை சேமித்துக் கொள்வது பாரப்பனர். தடி அடி பெறுவது நாம்; தலையராகுவோர் பார்ப்பனர். மண்டை உடைந்துமாக்க வோர் நாம; தொந்தி கொழுத்த நின்று ருளுவோர் பாரப்பனர். உத்தியோகதனை உதறித் தள்ளுபவர் நாம்; அதை உறக்கப் பிடிப்பவர் பார்ப்பனர், காடுமாடு கத்தல் அணிபவர் நாம்; காசு பறிப்பவர் பார்ப்பனர். நாட்டை சுற்றிப் பாட்டை இழுத்து ஓட்டையாஞோர் நாம்; மோட்டார் ஏறி வீட்டாருடன் விளையாடித் திரிபவர் பார்ப்பனர். றின்னும் பல உள்ளன. விரிவு கஞ்சி வீடுத்தேன், எம் பார்ப்பனரல்லாத் தோழர்களே! இளைஞர்களே!!

சாதி மத பேதகளுக்காக்வே கொடுக்கும் வர்ணச்சிரமப் பிரியராம், திரு. காந்தி அவர்களின், மலஜலம் கழிப்பதும் கடவுள் சித்தமென நம்பும் தன்னம்பிக்கை இல்லாத திரு. காந்தி அவர்களின், உயிர் போயினும் ஒடுக்கப் பட்டாருக்கு உரிமை கொடேன் என்ற கொள்கையும் மெயலுமுள்ள திரு. காந்தி அவர்களின் கண்ணை நீர், காலை மோர், களி மண் பிரியரும், நீட்டி நீட்டெனை நீட்டித்திரிபும் மக்களை மீனவய்யா, மாளவய்யாக்களைத் துணையாகக் கொண்ட திரு. காந்தி அவர்களின், கொல்லி வாய்ப்பட்ட எலும்பை ஆற்றில் விட்டு அப்பனே மோட்சவிடுதிக்கு மூட்டின்றிப் புகுத்திய கேருக்களை உடைய திரு. காந்தி அவர்கள், நம் பார்ப்பனரல்லாதாரை எவ்வழியிலும் வீழ்த்த கண்ணுங் கருத்துமாய்த்திரிபும் கபட நாடக ஆச்சாரி, மூர்த்திகளைக் கொண்ட திரு. காந்தி அவர்களின் வீண் இளர்ச்சியைக் கண்டஞ்சுவதற்கோ, அரசியல் பொறுபபை அடிகளார் தலையில் சுமத்தவோ, எல்லாம் கண்ட வல்லமை மிக்க ஆங்கில அரசாங்கம், அதிலும் வில்லிங்டன் பிரபு அரசாங்கம், முன் வரும எனக்கனவு காண்போர் காலக்கிரமத்திலறிவர்; ஒருக்கால் நம் சாந்த மூர்த்தியின், சண்டிப்போர் கண்டு, சலனங் கொள்வோர், "லயிலு இன்ட்ற கழுதே மருந்தும் தீக்குச்சி இல்லாமே நொளிச்சீண்டு விலக் போர்த்திக்கிச்சா" என்ற பேறிவாளராய் இருக்க வேண்டும், அறிவிலல் உலகு அஞ்சாது, தோழர்கள், வீணே உப்பென்றும் பப்பெனறும் உள் நாட்டுச் சரக்கென்றும் கத்தும் காக்கைக்கூட்டங்களின் கதறுதலுக்குச் செவி சாய்ந்து வீண் இளாச்சியி லீடு பட்டு மண்டை உடைந்து மாளாதீர்; தடி அடி படுவோரைக் கண்டு சலனங் கொள்ளாதீர்; நாட்டின் வீழ்ச்சிக்கு ஆக்கந் தரும் சாதி மதப் பீத்தல்களையும், வைதிக வெறியர்களையும், உயர் வுதாழ்வு கருதும் உளருவாயர்களையும், மூடப்பழக்க வழக்கமுத்தண்ணாக்களையும், வசப்படுத்தி அவர் தம் கொள்கைகளைச் சிதற அடித்து மக்களுக் குண்மை விடுதலை, அழிக்க வல்ல சமரியாதை இயக்கத்தில் இரண்டாரக் கலந்து தொண்டாற்ற எழுங்களே! எழுங்கள்!! வீறு கொண்டெழுங்கள்!!!

உங்கள்

கண்ணையும்

காதையும்

கவனித்துக்கொள்ளுங்கள்

பூவிழல்!!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத்தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

செவிடு!!

பாதி அல்லது முழுவதும் செவிடாகயிருந்தால் கூடப்பரவாயில்லை. காதிரைச்சல், தலிவலி இருந்தாலும் அக்கறையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலிஷில் விண்ணப்பித்துக்கொள்ளவும்.

"Sri" Works,
Beadon St. P. O.
Calcutta.

ஆங்கிலேயர் அன்னியரென்றால் ஆரியப்பார்ப்பனர் யார்?

சோமதேவ இருஷியின் வரப்பிரசாத ஔஷதம்.

குஷ்டம் தீராதகர்மரோயென்றெண்ணி கஷ்டப்படுவதேன்?

எக்காரணத்திலாயுமுண்டாகின்ற எவ்விதக் குஷ்ட நோய்க்கும் அனேக தொத்துவியாதிகளுக்கும் சரான சிகிச்சை முறைகளையும் சிறந்த ஔஷதங்களையும் சரத்மீகத்தோகுக்கிணங்கி அனுபவித்தானந்தபடுங்கள். நோயினால் அவஸ்தைப்படுவோர் ஸ்டாம்புடன் எழுதுங்கள்

சி. ஒ. கேசவவைத்தியர்
Bhaskara Vilasam (S. K. R.) Pharmacy
Cameron Road, Pallithottam, Quilon S. I.

இன்னும் 'பெண் பாவம்' எற்பது நன்றே?

(திருமதி எஸ். நீலாவதி)

நம் இந்திய நாட்டைப்போல் பெண்ணுரிமையை மறுக்கும் ஒரு நாடு இந்நில உலகிலேயே இலை யாதென துணிந்து கூறலாம் பெண் ணுரிமை பேணுத ஒரு நாடு தன்னுரி மையடைய முயல்வது வெட்கக்கரமா னதும், வேடிக்கையான செயலுமன் றே? தன்னிடத்தே உதித்துத் தன் னிடையே வளர்ந்து, தனக்கே பெ ரும் ஆதாவாய், தன்நலன்களுக்கே ஓர் ஆணைய் இலங்கும், பெண் சமூகத் தைப் பல விதத்தும் அடிமைப் படு குழியிலேயே, ஆழ்த்தி அவளிப்பட வைத்து, அதபற்றிய வலேல கடுகள வும் இன்றி தன் விடுதலே தாகம் கொண்டு போர் தொடங்கும் ஒரு நாட்டை நாகரீக நாடு என்று நம்மால் நவில முடியுமா? நவின்றலும், நாக ரீக உலகம் ஏற்குமா? ஏற்கதென்ப தோடு என்னி நகையாடவும் செய்யு மன்றே? இரு கண்களில், ஒரு கண் கெடால் எற்படுவது பார்வைக்கு றைவே யென்பதில் சந்தேகமென்ன வென்றே கேட்கின்றேன்? இதை மேன் வைதிகப்பித்தர்கள் அறியதில் லேயோ, அறியவில்லே, தெரிகிலேன். அக்கால நிலேயை ஆதரித்துப் பேசும் அறிவாளிகள் இக்காலதது யாங்கள் வேண்டப்படும் உரிமைகளே, இனிது ழங்காது. கடுமையாய் மறுப்பது, உண்மையிலேயே, பொதுநலமா? அன்றி தன்னலமா? என்பதை யோ சித்துப் பார்க்க வேண்டிய அவசியம் எற்படுகின்றதல்லவா? பாவிய மண மோ, பொருத்த மற்ற மணமோ, பெண்ணுரிமை மறுக்கும் தன் மையோ, அக்காலத்து இருந்ததாக எவரும் உறதிகூற முடியாதே? எவ் லாமறிந்தவர்களென இறுமாப்புறும் வைதிகக் குடக்கைகன், எக்காரணத் தைக்கொண்டு பழமையின் பேரில் பழிபோட்டுப் பெண் பாவத்தை அடி மடியில் தொந்திக்குப் பதிலாக, கன மூட்டை கட்டிக்கொள்ளுகின்றார்கள்.

சீர்திருத்த சட்டங்களும் வைதீகர்களும்.

சீர்திருத்த சட்டங்கள் எவற்றிற் காவது வைதிகர் ஆதரவு கிட்டியதா? வைதிகர் வயப்பட்டேதம் சொந்த அறி விழந்து மந்த அறிவால் மயங்கி, நிற் கும் மக்களுக்கு, சட்டங்களில்லாது சரிப்படுமா? சண்டாள வைதிகர்க ளால், மக்கள் எவ்வளவு தூரம், பி யிழந்திருக்கின்றார்கள். அடிமைக ளாக்கப்பட்டிருக்கின்றார்கள், கொடு மைகளுக்குள்ளாகி நிற்கின்றார்கள், என்பதை அறிவுடையோரும், அநுப விக்தவருமே அறிய முடியுமல்லாது மற்றவர்கள் அரிதலென்பது அசாத் தியமான காரியமே? "பட்டவர்களுக் குப் புண் படாதவர்களுக்குச் சந்த னம்" இதில் தவறென்ன? சீர்திருத் தம் என்ற யாவற்றிற்கும் முதல் மூட் டையாய் நிற்பது வைதிகப் பேய் ஒன்றே? என்பது அனைவரும் அறிந்த தொன்றும். அதிலும் பெண் மக்கள் விடயத்திலோ வெனில் பேச வேண்டியதில்லே. சாதாரண மாக ஒரு சாரதா சட்டம் பதிம்பாட் டை என்ன வென்று சொல்லுது? சீர்திருத்தத்திலும் பெண்கள் முன் னேற்றத்திலும் அக்கரை கொண்ட போறிவாளர்களுக்கு, சாரதா சட்டத் தில் நிர்ணயிக்கப்பட்டிருககும் கல் யாண வயது சம்மதமே யில்லே. எதோ தற்சமயம் இருக்கட்டும் என்ற பார்த்தால், அதற்கும் குடுக்கைகன் துள்ளிக்குதித்து ஆர்ப்பாட்டம் செய் கின்றார்கள். இப்போக்கொத்த நிலே மையில்தான் நம் இந்திய நாட்டுக்கு சுயாராஜ்யம் வேண்டுமாம். இதிய நாட்டுப் பெண்மணிகளின் நிலேமை யோ, நினைக்க நினைக்க நெஞ்சமெ நிக்கின்றது. யாதொரு உரிமையு மின்றி அடிமைப்படுத்தப்பட்டு, கொ மைபடுத்தப்பட்டுக் கண்ணீருங்கம் பலியுமாய், தவித்து நிற்பதுபற்றி இன்றய தேசியத்தலேவர்கள், கன விலுங்கருதுகின்றேம். ஆனால் ஆங் கன்தான் அவ்விதமென்றால், கற்றறி ந்தவர்கள், அறிவிற்சிறந்தவர்கள் என் றுபுகழப்படும் சில, பெண்மணிகளும் தம்இனத்தைப்பற்றிய சிந்தேயுனறி தம்சமூகவிடுதலேயை மறந்துபிரிதோ த்துறையில் இறங்கிய தாலது. உண் மையிலேயே, ஓர்பெரும் குற்றமும், வருந்தத்தக்கதுமான செயலு மென்ப தேனலு துணிந்த அபிபிராயம். தேசவிடுதலே தாகம் கொண்டு போர்க் களத்தில் இறகியதுபோல் (தம்)சமூ கவிடுதலேயில் ஆர்வங்கொண்டு சமத் துவப்போர் தொடங்கியிருப்பின் எவ் வளவுலம யிருக்கும்? பெண்களின் வாழ்வுஎந்த லிதத்தில் இப்பமாயிருக் கிறது? பூமியில்பின்லோயாய்ப்பிறந்தது முதல், மடிந்துமயானம்போய்சேரும் வரைநூற்பத்திரைகளால் மூடப்பட் டவர்கள் நமதுபெண்மணிகளல்லவா? சிற்சாரதா சட்டம் கொணர்ந்து, பெண்ணுலகக் கோதியைப் பெற்ற திரு. அரிலாசசாரதா அவர்களேயும், தற்போது அவர்கள் இந்தியசட்ட சபையில் கொணர்ந்த இந்து வித வா சொத்துரிமை மசோதாவைப் பற்றியும் அறிந்தோர் அநேகர் சமூக த்திற்கானசட்டகைள் எதுவரினும். பார்ப்பன, வைதிக வெறியர்கள் மதம் பேச்சென்னும் கூக்குரலேப் போட மறந்தார்களில்லே. மறப்பார்களில்லே. அதேபோன்ற இம்மசோதா விடயத் திலும் நடந்துவந்தார்க ளென்பது குறித்து ஆச்சரியப்படவேண்டியதல சியம்இல்லேயாயினும் அரசாங்கத்தார் போக்கைக்குறித்தே அனேவரும் வியப் புறவேண்டியதிருக்கிறது. சீர்திருத்த சட்டங்கள் விடயத்தில் வைதிகர்மட்டு அரசாங்கத்தார் காட்டும். நடுநிலேமை த்தன்மையும், சமாதானத்தன்மையும் அறிவுடையோரால், குறிப்பாக பெண் ணுரிமைபெண்களும் தேடுவோரால் அவசியம் கண்டிக்கப்பட்டே தீரும். அந்தோ; நம்நாட்டில் விதவைத்தன் மையால் பெண்கள் வதைக்கப்படுவது வைதிகர்களின் அவர்தம் வயப்பட் டோரின் கண்களுக்குப்புலனுகவில்லே யே? இதுவரை எற்றதுபோதாதென் றுஇன்னும் 'பெண்பாவத்தை' எற்கின் றனரே. இவர்கள் கதியாதாகும்? எம் மனம் கொதிப்பதுபோல் இவர்கள் மனம் கொதிக்க எக்காலம்செல்லும்? வைதிகவிருட்சத்தை வெட்டிவீழ்த்த இத்துரையில் பாடுபட ஒருகாந்தியை யோ, ஒருசரோஜனியையோ,ஒரு ஜவர்லாலேயோ, காணவில்லே யே! விதவைகளுக்கு சொத்துரிமை அளித் திடின் இந்துமதம் இறந்துபோகுமாம் என்னே? வைதிகர்கூற்று! சண்டாள வைதிகர்களே! இன்னும் பெண்பாவத் தைஎற்காதீர்! எற்காதீர்!!

(5ம் பக்கத் தொடர்ச்சி)

ஞய் காங்கிரஸ் இருந்துகொண்டு கடந்துபோன வைதிகததை செப்ப னிடப் பார்க்கிறதென்பது புலப்பட வில்லேயா? ஆதலால் காங்கிரசும் 35 கோடி இந்திய மக்களுக்கு எகப்பிரதி யாக எப்படி இருக்கமுடியும். மதத் தையும் சம்பிரதாயத்தையும் பாது காபபதென்று காங்கிரசில் முடிவு செய்துகொண்டு லட்ட மேஜர மகா நாட்டில் தனிப்பாதுகாப்பு வேண்டுவ திலே என்று திரு. காந்தியின் மூல ம்சொல்லச்செய்த காங்கிரசின் உள் ளணம் இனனும் விளங்கவில்லேயா? இவைகளினுலெல்லாம் தன்னம்பிக் ை-தன்உதவி பகுத்தறிவு உண்டாகி விடுமா என்பதை யோசித்துப்பாருங் கள். மனிதத்தன்மைக்கு இன்றிய மையாத தன்நபிக்கை-தன்உதவி முதலியவைகளே பயிற்சி செய்யமுற் படும் எவரும் காங்கிரஸ் ஸ்தாபனத் திலிருந்து தூரத்தியடிக்கப்படுகிறார் கள் அவர்களுக்கு வால்திகன் என் றும் தேசத்துரோகி என்றும் பட்டம் கட்டி விடுகிறார்கள். உதாரணமாக சுயமரியாதை இயக்கத்தை ஒழிப்பத ற்கு அரசியல் பேச்சு வீரர்களான காந்தி காவடியினரும் தேசியப்பத் திரிகைகளும் திரைமறவில் செய்து வரும் சூழ்ச்சியே போதுமானதாகும். எனவே சிறப்பாக நமதுநாடு முன் னேற்றமடையவேண்டுமானுல் ஒரு தனிப்பட்ட மனிதனே கொண்டாடு வதினுல்சுயராஜ்யம்சித்தித்துவிடாது. ஒரு தனிப்பட்ட மனிதனே அவதார மூர்த்தியாகவும் கடவுள் அம்சமாக வும் மகாத்மாவாகவும் கொண்டாடி பொதுமக்களே ஏமாற்றுவதென்ப வைதிகத்தினுடையவும் பிராமணர் களுடையவும் பரம்பரை வழக்கமாகும் இம்முறையில்தான் திரு. காந்தி அவ ர்களும் பொது மக்களுக்கு அறி முகப்படுத்தப்பதிருர். சுயராஜ்யம் காந்தி, தேசபக்தி போன்ற புனைப் பெயரோடு வைதிகத்தையும் மதத் தையும் கடவுளையும் ஸ்திரப்படுத்துவ தென்பது தற்கால புரட்சியே தவிர வேறல்ல. இச்சதியாலோசனே கூட் டம் திரு. காந்திக்கு அவதார விசே ஷம் கொடுத்து விட்டதால் ஜனசமூ கத்தின் சர்வ விடுதலேக்கும் திரு, கா ந்தியே என்பதோடு நின்றவிடுகிறார் கள். ஜனசமூகவாழ்வை மேலெழ வொட்டாமல் செய்வதற்கு காந்தியத் தையேகருவியாகக்கொண்டு குருக்கி றார்கள். ஆதலால்தான் அவர் உப தேசம் நல்லதாய் இருந்தாலும் கெட் டதாய் இருந்தாலும் பகுத்தறிந்து பாராமல் பின்பற்றுகிறார்கள். எனெ ன்றால் நமது மக்கள் 100-க்கு 90 பேர் மூடபக்திமிகுந்தவர்கள் கல்வி வாசனேயோ அறிவுவாசனேயோ யில்லே. இருந்தாலும் அறிவு சுதந் திரமில்லே. இக்கூட்டத்தினடையே என்னபேரினலும் சரிதப்பு உணரா பல் கோவிந்தாபோடுவார்கள். இவர் கள் முன் எதைச்சொன்னுல்தான் என்ன? எனவே இத்தகைய 'ஆட்டுக் குட்டி வாழ்க்கை' என்றுமாறி ஒவ் வொருவருக்கும் தனித்தனி பகுத்தறி விருக்கிறதென்பதை உணர்ந்தாலொ ழிய வெள்ளேக்காரனே விரட்டுவதெ ன்பதெல்லாம் குதிரைமுட்டைத் தேடிப்போனவன் கதையாகவே முடி யும். ஆனுல் இத்தகைய கூக்குரல் கனிஞல் நாம் காணப்போகும் முடி வென்னவென்றால் ராமானுஜர், சங் கரர், நால்வர், அறுபத்திமூவர், பதி னெண்மர்போன்ற புராதனகால மனிதர்களே இப்போது தூக்கித்நிரி வதுபோல் காந்தி, ஜவஹர்லால், படேல்போன்றவர்களேயும் கலிகால திருமூர்த்திகளாக இவர்களோடு தூக் கித்திரிய எதிர்கால இந்தியாவுக்கு ஓர் சந்தர்ப்பமளித்தோமென்கிற புகழ்தென்றால் பாத்திரப்படலாம். எனவே வாசகர்களே ஆத்மசக்தியை யும் தெய்வீகத்தையும் இன்னமுமா கட்டியழவேண்டும். அது எப்படியிரு தாலும் அதை நசிக்கும் மனத்த ளரா உத்தம சீர்திருத்தக்காரர்கள் காந்தியத்தின் மாட்சியைக்கண்டு மதிமயங்காது வேலே செய்யவேண்டு மும்.

லிங்கம்என்பது

ஆண்குறியும், பெண்குறி யும் சேர்ந்ததாகும்.

திருப்பூர் டி. மு. கோர்ட்டு.

1931-வது O S. No. 1041. 1932 வது I. A No 134.

சுப்பு செட்டியார்—வாதி,

தேவாத்தாள் வகையறு—பிரதிவாதிகள்.

ஈரோடு தாலூகா செட்டிபாளையம் கிராமம் குருவாரெட்டி
யூரிலிருக்கும் கிஷ்ணகவுண்டன் பெண்ஜாதி தேவாத்தாள் 1
பல்லடம் தாலூகா தொட்டிபாளையம் கிராமம் மஜரு மே
ட்டுக் காட்டுப்புதூரிலிருக்கும் காளியப்ப கவுண்டன்
மகன் முத்துசாமிக்கவுண்டன் 7
ஷெயூரிலிருக்கும் காளியப்பகவுண்டன் மகன் முத்துக்கவுண்டன் 9
ஷெயூர் சின்ன முத்துக்கவுண்டன் மகன் மாரப்பகவுண்டன் 17
ஷெயூர் நாச்சி முத்துக்கவுண்டன் மகன் சின்னசாமிக்கவுண்டன் 19
ஷெயூர் முத்துசாமிக்கவுண்டன் மகன் பெரியணகவுண்டன் 20
ஷெயூர் ராமே கவுண்டன் மகன் சுப்பே கவுண்டன் ... 21
ஷெயூர் பழனிக்கவுண்டன் மகன் சுப்பராயகவுண்டன் ... 22
ஷெயூர் கள்ளங்கிணர் சின்னப்ப செட்டி பெண்ஜாதி
கருப்பாத்தாள் 23
ஷெ கிராமம் ஞானப்பிரகாசம் பிள்ளை வீதியிலிருக்கும்
நாச்சி வண்ணன் பெண்ஜாதி முத்தா வண்ணாத்தி ... 24
ஷெ கிராமம் கில்மென் வீதியிலிருக்கும் குப்ப வண்ணன்
பெண்ஜாதி நஞ்சாவண்ணாத்தி 26
ஷெ கிராமம் தேவாங்கு புரத்திலிருக்கும் சாப்ஜி சாயபு
பெண்ஜாதி ஷாபீசாபீபீ 34
ஷெ கிராமம் முன்சீப் ஸ்ரீனிவாசபுரத்திலிருக்கும் கோவிந்த
செட்டியார் மகன் லக்ஷ்மிநாராயண செட்டியார் ... 36
ஷெ தாலூகா கஸ்பா திருப்பூரிலிருக்கும் மம்மத்கான்
சாயபு மகன் காதர்கான் சாயபு 41
ஷெயூர் மிஷின் வீதியிலிருக்கும் மவ்வாவு சாயபு பெண்
ஜாதி பத்தேஜா பீபீ அம்மாள் 42
ஷெயூர் முத்துசாமஞ் செட்டி முத்தசாத்து மகன்
ரங்கசாமி செட்டி 43
ஷெயூர் சங்கபோயன் மகன் ரங்கபோயன் 51
ஈரோடு தாலூகா செட்டிபாளையம் கிராமம் குருவாரெட்டி
யூரிலிருக்கும் முத்துக்கவுண்டன் மகன் கருப்ப
கவுண்டன் 68
கரூர் தாலூகா நெரூரிலிருக்கும் மாஜி கணக்கு ராகவேந்
திரய்யர் குமாரர் கணம் குருராவ் 69
கோயமுத்தூர் ஜல்லிக்குளியிலிருக்கும் தகரக்கடை பரீத்
சாயபு பெண்ஜாதி காத்தூன் பீபீ 71
பல்லடம் தாலூகா கஸ்பா அனுப்பபாளையத்திலிருக்கும்
அக்கி வண்ணன் மகன் நாச்சி வண்ணன் ... 75
ஷெ தாலூகா தொட்டிபாளையம் கிராமம் காதர் பேட்டை
யிலிருக்கும் குட்டி வண்ணாத்தி மக்கள் நஞ்சாள்
வண்ணாத்தி 81
முத்தாள் வண்ணாத்தி 82
பாராள் வண்ணாத்தி 83
ஷெ தாலூகா தொட்டிபாளையம் கிராமம் முன்சீப் ஸ்ரீனிவா
சபுரத்திலிருக்கும் ருமகிருஷ்ணநாயுடு மகன் தாலூகா
பியூன் கோபாலசாமி நாயுடு 87
ஷெ கிராமம் ஜமீன்மேட்டூர்காட்டுப்புதூரிலிருக்கும் முத்து
சாமிக்கவுண்டன் மகன் நாச்சிமுத்தக்கவுண்டன் ... 101
ஷெயூர் முத்துசாமிக்கவுண்டன் பெண்ஜாதி மாரக்காள் ... 103

ஷெ பிரதிவாதிகளுக்கு,

ஷெ நெம்பரில் வாதி மேலோவர் அடமானப்பத்திரப்படிக்கு ரூ. 1000—0—0-க்கும் பின்வட்டியும் வியாஜ்ய செலவும் கிடைக்கவேணுமாய் தாவா செய்திருக்கிறார். ஷெ நெம்பர் தாவா 1932வது பிப்ரவரி மீ 25 தேதியில் விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருக்கிறது. ஷெ நெம்பர் விஷயமாய் ஏதாவது ஆட்சேபனை யிருந்தால் ஷெ 25—2—32ம் தேதி காலை 10 மணிக்கு மகா-ரா-ரா-ஸ்ரீ திருப்பூர் டி. மு. கோர்ட்டில் ஆஜராகி தங்களுக்குள்ள எதிர்வாதத்தை தெரிவித்துக்கொள்ளவேண்டியது அந்தப்படி செய்து கொள்ளத்தவரும் பக்ஷத்தில் ஷெ தேதியில் ஷெ பிரதிவாதிகளுக்கு பொருத்தமட்டில் ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டு விசாரிக்கப்படும்.

திருப்பூர், 2—2—32. } T. R. கிருஷ்ணசாமி அய்யங்கார், வாதி வக்கீல்.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

த்துகொண்டேயிருக்கும் அக்கினியில் தான் தள்ளப்படுவோர்களெனவும் அறியாமையிலும், அந்தகாரத்திலும், மூடபக்தியிலும், சிறைந்துள்ள மக்களிடம்—அதாவது பாமரமக்களிடம்—பிரசாரம் செய்துவந்தார்கள். மக்களை அடக்கி ஆளுவதற்காகவேண்டி—அதாவது மக்கள்தங்களுக்கு உதவியளித்துக்கொண்டே வருவதற்காக வேண்டி—மதகுருக்களும், பணக்காரர்களும், அதாவது அரசர்களும், ஒன்றுகச் சேர்த்துகொண்டு தங்களுடைய மதம் ஒன்றுதான் மிக்க பரிசுத்தம் வாய்ந்ததெனவும்; போற்றுவதற்கும், புகழ்வதற்கும், கொண்டாடுவதற்கும் தகுதிவாய்ந்ததெனவும் தெய்வாம்சமும், தெய்வகருணையும், நிரம்பியுள்ளதெனவே முரைத்து மக்களையேமாற்றி அவர்களுக்குதுரோகம் செய்துகொண்டு வந்ததுமல்லாமல், அவர்களுடைய மதபுஸ்தகங்களிலுள்ள வாக்கியங்களை ஒருவன் மாற்றினாலும், அல்லது புதிதாக ஒன்று அப்புஸ்தகத்தில் சேர்த்தாலும் அவன் இவ்வுலகில் தண்டிக்கப்பட்டு தொலைப்பிவிட்டு கொலுத்தப்படுவதுமல்லாமல், அடுத்த உலகிலும் அவன் கடவுளால் அவ்வாறே தண்டிக்கப்பட்டு இம்மாதிரியுள்ளானவன் என்னவும் பலசாற்றிவந்தனர், மக்கள் தங்களுடைய கொள்கைகளினின்றும் மாறுதிருக்கவேண்டுமென்பதே மதகுருக்களினுடையவும், பணக்காரர்களுடைய யெண்ணமென்பதும், அதனே அவர்களுடைய முடிவான அபிப்பிராயமென்பதும் இதனால் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றது. இவர்களுடைய இத்தகைய கூட்டுச்செய்கைபாலேற்பட்ட பலனுமதுவேயாகும். ஆனால் நாளாவட்டத்தில் சிலமத புரோகிதர்களின் அறிவு விசாலமடைந்து மக்கள் முன்னேறிச்செல்வதற்கான தூறைகளில் அவர்கள் ஈடுபடவேண்டுமென விரும்பியபொழுது பாமர மக்களோ அவர்களை இடையேமறித்து அவர்களுடைய மாற்றத்திற்கு முட்டுக்கட்டையிடலானார்கள். எனெனில் அவர்களுடைய மனமாற்றத்தை மக்கள் இவ்வாறு விரும்பவில்லை. பாமர மக்கள் முதலாவதாக புரோகிதர்களால் வஞ்சிக்கப்பட்டு அடிமைப்படுத்தப்பட்டார்கள். ஆனால் பிறகோ அந்த பாமரமக்களே அவர்களுடைய எஜமானர்களாக விளங்கினார்கள்.

மடாதிபதிகளையும், மதகுருக்களையும், மதபுரோகிதர்களையும் இத்தகைய நிலைமையிலிருந்து விடுவிக்கவேண்டுமென்றுதான் சுயமரியாதை இயக்கமானது பாடுபடுகின்றது. சுயமரியாதை இயக்க அன்பர்கள் பலரும் மேற்கூறப்பட்டவர்களின் சிநேகிதர்களேயல்லாது அவர்களுடைய விரோதிகளல்ல. சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி அவர்கள் என்னதான் நிரித்துக்கூறி விஷமப்பிரசாரம் செய்துகொண்டு வந்தபோதிலும் கூட இவ்வியக்கமானது அவர்களுக்கு சாஸ்வதமாகவும் நீடித்துமிருக்கக்கூடிய ஓர் மகத்தான ஊழியத்தை செய்யத்தான் போகின்றது அவர்களோ சுயேச்சையுடனும் சுதந்திரத்துடனும் எதாகிலும் ஒன்றைகுறித்து ஆராய்ச்சி செய்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. அவர்களுக்கு சிறுவயதில் போதிக்கப்பட்டவைகளைத்தான் தங்களுடைய வாழ்க்கையில் அவர்கள் ஓர் கிளிப்பிள்ளையைப்போன்று மனப்பாடம் செய்து ஒப்புவிக்கின்றார்கள். அவர்களுக்கு கற்றுக்கொடுத்த மந்திரங்களை சிறிதும் தப்பிதமின்றியோ அல்லது ஏதோ ஒரு சில தப்பிதங்களுடனே யார் ஒருவர் வேதகோஷ்டம் செய்கின்றார்களோ அவர்களே தான் தேர்ந்த அறிவாளிகளெனக் கருதப்படுகின்றார்கள். பல்லாயிர வருஷக்கணக்காக இம்முறையேதான் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. அர்த்தமற்ற சடங்குகளை இவர்கள் புரிந்துகொண்டே வந்ததினால்தான் இவர்களுக்கும் இவர்களைப்பின்பற்றிய பாமரமக்களுக்கும் சுய அறிவு என்பதோ அல்லது சுய ஆராய்ச்சி என்பதோ காளாவட்டத்தில் இல்லாதொழிந்தது. மேலும் மதபுஸ்தகங்களை ஆராய்ச்சி செய்வதென்பது ஓர் கொடிய பாவ கிருத்தியமாகுமென இவர்களுக்கு இளவயதிலேயே போதிக்கப்பட்டிருக்கின்றமையால் இவர்கள் அத்தகையச்செய்கைகளில் காலது வரையிலும் ஈடுபடுவதற்கில்லை. பழையதாகிவந்த கொள்கைகளையும் ஆசார அனுஷ்டானங்களையுமேதான் இவர்கள் பின்பற்ற வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டிருப்பதுடன் அவைகளுக்கு மாறுக நடந்தால் அப்பொழுது அவர்களுடைய செய்கையின் சன்மார்க்க முறைகளுக்கு ஓர் தொத்துவியாதிபோலாகுமெனவும் போதிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு மதகுருவும் மதபுரோகிதரும் தங்களுடைய குறித்தஓர் மதத்திற்கே வக்காலத்துவாங்கியிருக்கின்றார்கள். ஆகையினால் அவர்கள் தங்களுடைய வாதத்தை உண்மையாகவே நாடாத்துவார்களென எதிர்பார்க்கப்படுகின்றார்கள். இவர்களுக்குப்போதிக்கப்பட்டவைகளுக்கு விரோதமாக நடக்க எப்பொழுதாகிலும் இவர்கள் முயற்சி செய்வார்களேயாகில் அப்பொழுதே அவர்கள் துரோகிகளெனக்கூறப்பட்டு பல இழிசொற்களுக்கும் ஆளாகி அவதூறுப்பேசப்பட்டு பகிஷ்காரமும் செய்யப்படுகின்றார்கள். ஒவ்வொரு மதகுருவும் தன்னுடைய கொள்கைகளிலிருந்து எக்காரணத்தைக்கொண்டும், எக்காலத்திலும் மாறுவதில்லையென ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ளுகின்றார். இவ்வாறு ஒப்பந்தம் செய்துகொள்ளுவதால் அவர்புதிய விஷயங்களை ஆராய்ச்சிசெய்ய விரும்புவதில்லை. அப்படி ஒருக்கால் ஆராய்ச்சி செய்யவேரிட்டாலும் அவன் அவைகளை ஒத்துக்கொள்ளுவதுமில்லை. இத்தகைய நிலைமையில் மதமத குருக்களென்பவர்கள் தற்காலமிருந்து கொண்டுவருகின்றார்கள். இவர்களுடைய இத்தகைய பரிதாபகரமான நிலைமையைக்கண்டு தான்சுயமரியாதைஇயக்கத்தார் அவர்கள்மீது பச்சாதாபப்படுகின்றார்கள். அவர்களுடையதத்தமையநிலைமையிலிருந்து அவர்களை

விடுவிக்கவேதான் சுயமரியாதைஇயக் கமும்பாடுபடுகின்றது.

சிலமதகுருக்கள் தங்களுடையபட் டுப்பாடுகளினின்றும் விடுவித்துக் கொண்டு, தங்களுடைய சுயஅறிவு டன் வாழவேண்டுமென்கிற தைரிய முடையவர்களாகவே காணப்படுகின் றார்கள். ஆனல்பெரும்பான்மையான வர்கள்தங்களுடைய ஒப்பந்தத்திற்கு க்கட்டுப்பட்டுதான் தீரவேண்டுமென வற்புறுத்தப்படு கின்றார்கள். இவர் கள் எக்காரணத்தைக் கொண்டும் தங்களுடைய சொந்த அபிப்பிராயங் களையாவது, அல்லது எண்ணங்களை யாவது வெளியிடவே கூடாது. ஆனல், தங்களுக்குப்போதிக்கப்பட்டி ருப்பவைகளைமட்டும் தைரியமாகவும், தார்ராளமாகவும், வெளிப்படையா கவும் உரைக்கலாம். தங்களுடைய மனதில் உதிக்கக்கூடிய சந்தேகங்க ளைக்கூட இவர்கள் உரைக்கக்கூ டாது. ஆனல், மக்கள் அறியாமை யிலும், அந்தகாரத்திலும், மூடபக்தி யிலும் மூழ்கியிருந்தகாலத்தில் இவர் களால் இயற்றப்பட்ட அக்குறுகியபா தையிலேயேதான் இவர்கள்செல்ல வேண்டும். அப்பாதையின் இருஓரங் களிலும் நிழலையளிப்பதற்கு மரங்க ளோநாட்டப்பட வில்லை. அவர்களு டைய அக்குறுகிய, நிழலற்றபாதை யில்அவர்கள் செல்லும் பொழுது தங் களுக்கு இருபக்கங்களிலுமுள்ளவயல் களையாவது, தோட்டங்களையாவது அவர்கள் பார்க்கவேகூடாது. மேலும், தங்களுடைய கண்களுக்குப்புலப்படும் மனுஷனின் காட்சியையாவது, அல் லது குன்றுகளின் அழகையாவது அவர்கள்கவனிக்கவே கூடாதெனப் தடல், அக்குன்றுகளிலிருந்து ஓடி வரும் சிறுஅருவிகளின் சப்தத்தை யும்அவர்கள் சிறிதுகேரம்கின்ற கேட் கவும்கூடாது. புழுநிறைந்த அக் குறுகிய பாதையிலேயேதான் அவர் கள்செல்ல வேண்டும். 'மோகூம்,' "நரகம்," "விமேசனம்," "விதேஹ," "மறுஜன்மம்," என்பவைகளைப்பற்றி யேதான் இவர்கள் ஆராய்ச்சிசெய்து கொண்டே, அந்தப்பாதையில் சென்று கொண்டிருக்கவேண்டும். ஆனல், மே ற்கூறிய இப்பெரிய கேள்விகளுக்கு, இவர்களே புதிதாகஓர்தத்துவார்த்தத் தையும் கண்டுபிடிக்கக்கூடாது. நம் பிக்கையற்றவர்களும், மதகுருக்களை ப்பரிகாசம் செய்தவர்களும், ஆசார அனுஷ்டானங்களை கழுவிவிட்ட வர்களும் அனுபவித்த இன்பங்களை யும், துன்பங்களையும், கஷ்டங்களை யும்ஒன்றுக்குப்பத்தாக பெறுகி, எவ் வளவுக் கெவ்வளவு வர்ணித்துரைக் கின்றார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் நிரேஷ்டமான வர்களென பாவிக்கப்படுகின்றார்கள். இந்தஜன் மத்தில் துன்பத்தை அனுபவிக்கின்ற வர்கள், மறுஜன்மத்தில் இன்பத்தை அனுபவிப்பார்களெனவும்; இந்தஉலகத் தில் இன்பத்தை அனுப விப்பார்கள் அந்தஉலகத்தில் துன்பத்லதயே அனு பவிப்பார்களெனவும்; கடவுள்யாரை விசுவாசித்து, தமது இருபாகடாகூத் தையளிக்கின்றாரோ அவர்கள்தான் இந்த உலகத்தில் துன்பத்தையும், கஷ்டத்தையும் அனுபவிப்பார்களெ னவும்; கடவுள்யாரை வெருத்துப் பகைக்கின்றாரோ அவர்கள்தான்இவ் வுலகில் சகல ஐஸ்வரியங்களுடன் கூடியபோலழ்க்கையை நடாத்தி, இன்பத்தையும், சந்தோஷத்தையும் இடைவிடாது அனுபவித்துக்கொண்டு வருவார்களெனவும்; கடவுள்யாரை அதிகமாகநேசித்து விரும்புகின்ற ரோ அவர்களைத்தான் இவ்வுலகவாழ் க்கையில் பலசோதனைகளுக்கு முட் படுத்தி, துன்புருத்திக் கொண்டே வருவாரெனவும்; ஆனல், அடுத்தஉல கில், அதாவது மோகூத்தில் அவர்கள் இவ்வுலகில் அனுபவித்ததுன்பங்களு டாக எப்பொழுதும் இன்பத்தை யும், சந்தோஷத்தையு மனுபவித்த சதாகடவுளருகிலேயே வீற்றிருப்பார் களெனவும், இவ்வுகுகிவ் குபோசம்ப த்துடன்வாழ்ந்து, எவ்விதகபோகங் களையும் அனுபவிக்கின்றவர்கள் அடு த்தஉலகில் அதாவது மறுஜன்மத்தில் அவ்வளவுக்கவ்வளவு துன்பத்தையும், கஷ்டத்தையும்தான் அனுபவிப்பார்க ளெனவும், துன்பமும், கஷ்டமும், வருத்தமுமேதான் நமக்கு மோகூஉல கிற்குவழிகாட்டிகளெனவும் அவர்கள் கண்டிப்பாய் மக்களுக்கு உபதேசம் செய்யவேண்டும்.

நாம்மேலே கூறிக்கொண்டுவந்த விஷயங்கள் எவ்வளவுதான் அபத்த மானவைகளெனக்காணப் பட்டபோதி லும்கூட, அவைகள் கண்டிப்பாக மக் களுக்குப் போதிக்கப்பட்டாகத்தான் வேண்டும்; அவைகளைநம்பியிருந்தான் தீரவேண்டும். யாதொருவிதமேற்கோ ளோ, அல்லதுபிரமாணமோ, அல் லதுசந்தேகமே இல்லாமலும், அல் லதுசிலசமயங்களில் அவைகளொன் றுமேஇல்லாவிட்டாலும் கூட அவர் கள்உரைப்பவைமறுத்துரைக்காமலும், எதிர்த்துவாதாடாமலும் அப்படியே, அவ்வளவையும் எவன்ஒருவன் உண் மையெனநம்புகின்றானோ அவன்தான் உண்மையான, பக்தியுள்ள மனிதன். எனக்கருதப்படுகின்றன.(தொடரும்)

(3ம் பக்கத் தொடர்ச்சி)

நடக்கும்படியாகவே, கல்வி கே ள்விகளை பெறவொட்டாமல் செ ய்து வந்திருக்கின்றார்கள். மூல தாரமாகிய நிலத்தை உழுது பயி ரிடும் குடிகளாகிய பஞ்சமர்கள் பயந்து, இட்டதைப்பெற்றுக் கொள்ளவேண்டியே அவர்களை பிரத்தியேகமாக வாழச்செய்தது மல்லாமல் தீண்டாதாரெனவும் சூத்திரவைத்து விட்டு, நாகரீகம டைந்துள்ள இடங்களில் அவர் களை பிரவேசிக்க வொட்டாமல் தடுத்து விட்டதும் இதே சூட் சியே. எல்லா அரசாங்கமும் தந்திர உபாயத்தால் நடந்தேறி வருகின்றன. இந்த தந்திர உபாய த்தை நீக்கிநடக்கும்சுயராஜ்யமெ ன்றும் நினைப்பதற்கு இடமில்லை எனினில் அவர்கள் சட்டதிட் டம் யாவும் முதலாளி வர்சனோ போடு கலந்திருப்பதாலென அறிக. ஒன்று கேட்கின்றேன். என் சுயராஜ்யக்காரர் மதத்தை யும் ஜாதியையும் அவ்வளவு தழுவி நிற்கின்றார்கள்? இதற்கு உண்மையாக பதில் உறைக்க வேண்டுமானல் ஒரே பதில் தான் உளது. அதாவது, பாமர மக் கள் மூடபக்தியில் ஆழ்ந்து கி டக்கவும், ஆட்சி செய்யும் மற்ற சிறுபான்மையோர், உலக சுகத் தை. கேள்வி முறையின்றி அனு பவிக்கவும் செய்துள்ள உபாய மென அறிக. இந்த சம்பந்த மாக, யாராலும் நன்கு மதிக்கப் படும் மாக்ஸிம் கோர்க்கி (Maxim Gorkc) என்ற பெரி யார் கூறுகின்றதை சற்று கவனி ப்போமாக. முதலாளி தேசங் களில் அரசு புரிந்துவரும் விவே கிகள், தொழிலாளர்களை படிக்க விடமாட்டார்கள் அரசுபுரிவோர் சாதாரணமாக, விவேகம் நாட் டில் பெருக வைக்க பயப்படுகின் றார்கள். நாட்டில் விவேகம் அதாவது, பகுத்தறிவுமிருந்தால், தங்களுடைய செல்வாக்குக்கு அபாயம் நேரிடுமென்ற பயமே. இதனல் எந்த நாட்டிலும் அரசு புரியும் முதலாளிகள், தொழிலா ளிகளுக்கு உயர்ந்த கல்வி பெரு ம்படி அனுகூலமாக இருக்கமாட் டார்கள். இந்த பயத்தால்தான் மகமதியர்களுக்காகிலும், தாழ்த் தப்பட்டவர்களுக்காகிலும், தீண் டாதோராகிலும் ஒருப்புவாரிபிர திநிதித்துவம் பெறுகிருக்கும்படி முட்டுக்கட்டைகளை போட்டுவரு வது மென அறிக. காங்கிரஸ்கா ரர்களுக்கு மனம் களங்கமற்றிருந் தால், சட்டசபைகளில் எளியோ ரும், தொழிலாளியும், தீண்டா தாரும் வந்து நிறைந்தாலென்ன? அவர்களில் சிலர் நிர்மாண மந்திரி களாய் (Cabinet Ministers) வந்தாலென்ன? தனித்தொகுதி இருந்தால் மாத்திரம் இந்த பா மர மக்களுக்கு பட்டமும் பதவி யும், கிடைக்குமே பொழிய, பொதுத்தொகுதியில் ஒன்றும் வராது இது நிண்ணயம். இது வே, நமது 50 வருஷத்திய அனு பவமும் மதத்தில் கட்டுண்டவர் களுக்கு பகுத்தறிவு மட்டே. ஜாதி சமயத்தில் ஆழ்ந்திருக்கப் பட்டவர்களுக்கு மூடபக்தியிலே டமே. பாமர மக்களுக்கு பகுத் தறிவு போதாமையையும், மூட பக்தி அதிகமாக இருப்பதையும், தங்களுக்கு அநுகூலப்படுத்திக் கொள்வதற்கே பொல்லாத திட் டமாகிய ஜாதி மத கடுநிலமை யை காங்கிரஸ்வாதர் வற்புறுத்து கின்றார்களென அறியவும். இதை ராஜதந்திரமெனவும் (Diplomacy) கூறலாம்.

12000 பவுன் இனம்.

மியூட்சுவல் கிளப் லிமிடெட்டின் இங்கிலீஷ்

லின்கான்ஷயர் குதிரைப்பந்தய லாட்ரி.

16—3—32ல் லின்கான்ஷயரில் நடைபெறுகிறது. 1-வது பிரைஸ் 20000-பவுன். 2-வது பிரைஸ் 5600-பவுன். 3-வது பிரைஸ் 4000. மற்ற 650 பிரைஸ்களுமுண்டு. மொத்தமாகப் பிரைஸ்கட்கு கொடுப்பது 120000-பவுன். டிக்கட் 1-க்கு ரூ. 4—8—0. 3-க்கு ரூ. 13. டிக்கட்டிற்கு உடனே கீழ்க்கண்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டிடத்தில் வாங்க முந்துங் கள்! முந்துங்கள்!!

அதிகாரம்பெற்ற ஏஜண்ட்:— S. K. வரதராஜலு, ஆனந்த நிலையம், திருச்சங்கோடு S. I.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	இயற்கைமதம்	...	0—8—0
2.	சிதம்பர ரகசியம்	...	0—8—0
3.	சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை		0—4—0
4.	சுயமரியாதைத் தத்துவக் கீதங்கள்	...	0—4—0
5.	பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது)	...	0—6—0
6.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை		0—8—0
7.	ஆராய்ச்சி அணிகலம்	...	0—12—0
8.	சென்னை லோக்கல் போர்ட் ஆக்ட்	...	2—0—0
9.	மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம். தூர்ருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.)	...	2—0—0
	ஈ. வெ. ராமசாமியின் போட்டோ படம்	...	0—8—0
	சுயராஜ்யம் யாருக்கு	...	0—1—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த தூர்ருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, தூர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ.	4—0—0
ரிவோல்ட்டில் ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ.	4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு

பண்டிதர் உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது
பெண் மக்கள் பெருமை

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடங்கள்:- "குடி அரசு" புத்தகாலயம், ஈரோடு.
இம்பிரியல் பிரஸ், மாயவரம்

"தமிழன்"

மலாய் நாட்டு சுயமரியாதை தமிழ் தினசரி.

உள்நாடு மாத சந்தா $ 1.00.
வெளிநாடு ,, இந்தியா $ 1.50.

ஆசிரியர்:—சுவாமி அற்புதானந்தா.

விலாசம்:— மானேஜர் "தமிழன்"
10, ஜெல்ப்ரோட், சிங்கப்பூர்.

'சண்டமாருதம்'
சுயமரியாதைத் தமிழ் தினப்பதிப்பு.

அனேக தந்திச்செய்திகள்
அச்சமற்ற கண்டனங்கள்
ஆணித்தரமான அபிப்பிராயங்கள்
நுகரமான குறிப்புகள்
தேனின் இனிய "திரட்டுப்பால்"
நகைச்சுவை மிக்க நாவல்கள்
மெய்கூச்செறிக்கும் "மின்வெட்டு"
அறிவைப்பெருக்கும் "அஷ்டதிக்கு"
முதலியன "சண்டமாருத"த்தில் வெளியாகின்றன.

சந்தா விவரம்.

உள்நாடு மாத சந்தா	ரூ.	1—4—0
தனிப்பிரதி	ரூ.	0—0—9
வெளிநாடு வருட சந்தா	ரூ.	18—0—0
ஆறுமாதம் ...	ரூ.	10—0—0

மானேஜர்
'சண்டமாருதம்'
திருச்சிற்றம்பலம்.



Read the
"SUPERSTITION OF KHADI"

A Discussion
By
S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari
in English.

Published by Kudi Arasu Publishing House,
Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

Apply to:—
Manager "Kudi Arasu" Erode.

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

கைவல்யம் அல்லது கஹஸக்கியானம்.

இது கைவல்ய சாமியாசவர்களால் எழுதப்பட்ட கட்டுரை ஹேத்தொகுத்த வெளியிடப்பட்டது. இக்கட்டுரைகளைப்படிப் பதால் அனேக சாஸ்திர, புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு, சமயப்புரட்டு, மூதலியவைகளையும் உணர்ந்த விகாரற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணு. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்ப இராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல் களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப்புரட்டுக்களை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணு. 0—4—0

இரண்டாம் பாகம் அயோத்தியாகாண்டம் அணு. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலிய வைதனின் ஆபாசங்களைக் காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம், இதை ஒரு முறை படித் தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின்வடைவாளம்முழுதும்தெ ரியும். பெரியபுத்தகம். 150 பக்கம். இதன் விலை அணு. 0—4—0

மநுநீதி மருமம்.

இது மநுதரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப் பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தி யுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணு. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆரும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப்பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம, மதம் முதலிய வைகளின் சூழ்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.

இதன் விலை அணு. 0—2—0

சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, வரதட்சணைக் கொடுமை முதலிய வற்றைக் கண்டித்துக் கூறப் பட்டிருக்கிறது. இனிய பாடல். எளிதில் பொருள் விளங்கும்.

இதன் விலை அணு. 0—2—0

சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப் பனர்களும், புரோகிதர்களும், ஜன சமூகத்தை ஏமாற்றுவதுதான் சோதிடமென்பதையும் இனிமையான...சுலபமான பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணு. 0—2—0

ஈ. வெ. ராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜனசமூகம், சீர்திருத்தம்பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமை பட்டுப்பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம். ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும். இதன் விலை அணு 0—2—0.

சுயமரியாதைதப்பாடல்.

இதில் சுயமரியாதைக்கொள்கைகளை விளக்கி, இனிமையான புதியவர்ணமெட்டுகளில் பாடியபாடல்கள் அடங்கியுள்ளன.

இதன் விலை அணு 0—2—0.

தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களை பொருத்த மற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணை கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறு வேடம் பூண்டு பொது ஜனங்களுக்குப் புராணபுரட்டுக்களை வெளிப்படுத் தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணு 0—3—0

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை, முதலியவற்றை யும் விளக்கிச் சமதர்மத்தைப்போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணு 0—4—0.

மேயோ கூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னி மேயோ" எழுதி யதில்உள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்— நமது நாட்டில் உள்ள வேறுபல ஆபாசங்களையும் எடுத்துக்காட்டிச் சீர்திருந்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணு 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் மூச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரித் திரப்புரட்டுக்களையும் தமிழ் நூல் ஆதாரங்களோடுவிளக்கப்பட்டிருக் கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப் பட்டது.

இதன் விலை அணு 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள தான் கடவுளை நிந்திக் கும் கயவர்களென்றும், இதிகாச புராணங்களின் ஆதாரங்களைக் கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராஜ வன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணு 0—2—0.

கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு S. ராமநாதன், அவர்கள் கதரைப்பற்றிச்செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமையா வும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவை களுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில்வெளியி டப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உண ரலாம்.

இதன் விலை அணு 0—2—0.

முக்கிய கவனிப்பு:— மேல்கண்ட புத்தகங்கள் "குடி அரசு" சந்தாதாரர்களுக்கு முக்கால் விலைக்குக்கொடுக்கப்படும் ஆதல் பாதித்தொகை முன்பணமாக அனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் அதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.